

noolaham.org | aavanaham.org

# குறள் வழி



**அறவினை யாதெனிற் கொல்லாமை கோறல்**
**பிறவினை யெல்லாந் தரும்.**

**பொருள் :** அறச்செயல் யாது என்றால் ஒரு உயிரையும் கொல்லாமையே; கொல்லுதல் வேறு பாவச் செய்கைகள் எல்லாவற்றையும் தானே தரும். (321)

**பகுத்துண்டு பல்லுயி ரோம்புதல் நூலோர்**
**தொகுத்தவற்று ளெல்லாந் தலை.**

**பொருள் :** தான் உண்பதைப் பசித்த உயிர்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்துத் தானுமுண்டு அவை பலவற்றையும் பாதுகாத்தல் அறநூலார் தொகுத்துக்கூறிய அறங்கள் எல்லாவற்றுள்ளும் சிறந்த அறமாகும். (322)

---

# நற்சிந்தனை

## *மறப்பேனோ குருநாதன் தன்னை*

## முத்தி நல்குமே

நல்லூராசான்

**கலிவிருத்தம்**



கார்நிற வண்ணன் கைதலை யணையாய்ப்
பார்மிசை யுறங்கும் பண்பை யுடையான்
நீர்வளம் நிலவளங் குறையா நல்லூர்
சீர்பெற வாழ்ந்த தேசிக மூர்த்தி. 08

நாமறி யோமெனும் நல்ல மந்திரம்
சேமமுண் டாகச் செப்புந் திறத்தோன்
காமங் குரோத மோகங் கழிந்தவன்
நாமமோ செல்லப்பன் நல்லூ ரானே. 09

எப்பவோ முடிந்ததென் றெடுத்தெடுத் துரைக்கும்
ஒப்பிலா மாமணி உன்மத்த னெவரும்
இப்படி யென்று இயம்பவொண் ணாதவன்
எப்போதும் முருகன்சந் நிதியில் வாழ்பவன். 10

பாவலர் நாவலர் பணியும்நல் லூரில்
சாவதும் பிறப்பதுந் தவிர்த்தென்னை யாண்ட
காவலன் நல்லூர்க் கந்தன் பதியில்
சேவகஞ் செய்யுஞ் செல்லப்ப மூர்த்திகாண். 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்



வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஞானச்சுடர்

வெளியீடு - 3 சுடர் - 281

2021 வைகாசி

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| மரித்துப்போன மனிதம் | சி. நற்குணலிங்கம் | 01 - 03 |
| திருவாசகம் | சு. அருளம்பலவனார் | 04 - 09 |
| தெய்வீக அழைப்பு | பூ.க. இராசரத்தினம் | 10 - 11 |
| திருவிளையாடற் புராண வசனம் | ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் | 12 - 15 |
| மணிவாசகரின் இறையன்பு | பு. கதிரித்தம்பி | 16 - 17 |
| வழித்துணை | ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் | 18 - 19 |
| உடப்பில் நடைபெறும்... | பா. முருகானந்தம் | 20 - 23 |
| நித்திய அன்னப்பணி | சந்நிதியான் ஆச்சிரமம் | 24 - 25 |
| இந்துமத அழிப்பும் ஒழிப்பும் | செல்வி ச. சரணியா | 26 - 27 |
| மனுநீதி, அரசநீதி, தெய்வநீதி... | மூ. சிவலிங்கம் | 28 - 30 |
| மறுஜன்மம் | திருமதி ஜெ. இராஜேஸ்வரி | 31 - 33 |
| திருமூலர் தவமொழி | ஆ.தா.இ. ஜெயபாலன் | 34 - 36 |
| காரைக்காலம்மையார்... | செல்வி செ. ஜெயலஷ்மி | 37 - 42 |
| எது சிறந்த யாகம் | காரை எம்.பி. அருளானந்தன் | 43 - 44 |
| குருவும் சீடனும் | திருமதி தி. இந்திரா | 45 - 48 |
| சந்நிதியான் ஆச்சிரமத்தின்... | வல்வையூர் அப்பாண்ணா | 49 - 52 |


வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)

சந்நிதியான் ஆச்சிரம
சைவ கலை பண்பாட்டுப் பேரவை

தொலைபேசி இல: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

Printed & Published By:

*Sannithiyan Achchirama Saiva Kalai Panpaddu Peravai.*

Selvasannithi, Thondaimanaru.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லறிவைத் தா சந்நிதிப் பெருமானே

ஆற்றங்கரை ஒருபாலாய் அலைகடலே ஒருபால
அரியவிமானக் கோயிலில் வைகி - வணங்கும்
அடியார்கள் குறைதீர் வடிவேலை ஏந்தி ஏந்தி
ஆறுமுகா ஓடி நீ வா

மாற்றமான இந்தக் காலம்
வாழுமக்கள் உன்னை நம்ப
வாழ்வதை நீ அறிந்திருந்தும் - நீயே
வரும் வழியே விழிவைத்து
வாழும் எங்கள் இடமே நீ
மாமயிலில் வரலாகாதோ!

சாற்றுமிந்த நாட்களிலே
சாமிநாதா உனையன்றி
சார்ந்துவாழ ஒருவழி காட்டாய்
சண்முகனே சந்நிதியில்
புண்ணியனே என்ன செய்வோம்
சஞ்சலங்கள் தீர்க்க வாராயோ

சாமி, குரக் கனைவிட்டோம்
சார்ந்து வள்ளி மரவள்ளியை
சற்று மெண் ணாமல் விட்டிட் டோமே,
தக்க பசு மாட்டை விட்டோம்
சரிக்கட்டி காசு சேர்த்து
தப்பாமல் மா, பாண் வாங்கிறோம்

எங்கள் கையே எமக்குத் துணை
எமது பிழை யறிந்து விட்டோம்
இந்த அறிவை எமக்குத் தந்தாயே - முருகா
இனிய எங்கள் சிவ குமரா
எமக்குத் துணை நீ யையா
இன்றறிந்தோம் சந்நிதியானே.

"இலமென் றசைஇ யிருப்பாரை நோக்கி
நிலமென்னும் நல்லாள் நகும்"

வை.க. சிற்றம்பலவனார் அவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் தரும் தகவல்

பிறந்தோம் - வாழ்ந்தோம் - மடிந்தோம் என்றில்லாமல், "மற்றவர்களுக்காக பயனொடு வாழ்ந்தோம்" எனும் உன்னத நோக்குடன் ஊக்கமாக உழைத்து வருபவர்கள் நம் சமுதாயத்தில் மிகச் சிலரே.



அந்த ஒரு சில நல்ல உள்ளங்களின் இறை பக்தியும் மக்கள் சேவையுமே இன்றைய நெருக்கடி யான காலகட்டத்திலும் நம் மக்களை வாழ வைத்து வருகிறது. அவர்களில் ஒருவரே இன்று நம் மக்களின் பெருமதிப்பினைப் பெற்ற ஆறு திருமுருகன் எனப்படுகின்ற ஆறுமுகம் திருமுருகன் ஆவார்.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி யில் ஆசிரியராக - உப அதிபராக - அதிபராக நீண்டகாலம் சேவையாற்றிய காலத்திலும் சரி, தமது ஓய்வின் பின்னரும் சரி அவரது சிந்தனையும் செயலும் மக்கள் பணியிலேயே லயித்திருந்தது.

தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவராக இருந்து அவர் ஆற்றிவரும் இறைபணி போற்றுதற்குரியது. சிவபூமி முதியோர் இல்லம் - சிவபூமி மன வளர்ச்சி குன்றியோருக்கான பாட சாலை, நாவற்குழி திருவாசக அரண் மனை, அரண்மனையை அண்மித்த படியுள்ள பழைய பொருட்களின் காட்சி மண்டபம், யக்கச்சியில் உள்ள நாய்கள் காப்பகம் என ஆறுதிருமுருகன் அவர்களின் சிந்தனையில் விரிந்து பரந்த செயற்பாடுகள் மூலம் இன்று சமுதாயத்தில் போற்றிப் புகழப்படும் உயர்ந்த மனிதனாக நிமிர்ந்து நிற்கிறார். அவரது இறைபணியும் - மக்கள் பணியும் தொடர வேண்டும்.

வைகாசி விசாக நட்சத்திர நன்னாளில் தமது 60ஆவது அகவையில் கால் பதிக்கும் ஆறு திருமுருகன் அவர்களைப் பல்லாண்டு காலம் வாழ்க! வளர்க!! என நாமும் மனதார வாழ்த்துகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளிச் செய்த திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா

கன்மத்துக்கு ஈடாய்க் கறங்கும் சகடம்போல்
சென்மித்து உழலத் திரோதித்து - வெந்நிரய 16

சொர்க்காதி போகமெல்லாம் துய்ப்பித்துப் பக்குவத்தால்
நற்காரணம் சிறிது நண்ணுதலும் - தர்க்கமிடும் 17

தொன்னூல் பரசமயம் தோறும் அதுவதுவே
நன்னூல் எனத்தெரிந்து நாட்டுவித்து - முன்னூல் 18

விரதமுத லாயபல மெய்த்தவத்தின் உண்மைச்
சரியை கிரியா யோகம் சார்வித்து - அருள்பெருகு 19

சாலோக சாமீப சாருபமும் புசிப்பித்து
ஆலோகம் தன்னை அகற்றுவித்து - நால்வகையாம் 20

சத்திநி பாதம் தருதற்கு இருவினையும்
ஒத்துவரும் காலம் உளவாகிப் - பெத்த 21

மலபரி பாகம் வருமளவில் பன்னாள்
அமருதல் கண்ணுற்ற (அ)ருளி - உலவாது 22

அறிவுக்கு அறிவாகி அவ்வறிவுக்கு எட்டா
நெறியில் செறிந்தநிலை நீங்கிப் - பிறியாக் 23

கருணைத் திருஉருவாய்க் காசினிக்கே தோன்றிக்
குருபரனென்று ஓர்திருப்பேர் கொண்டு - திருநோக்கால் 24

ஊழ்வினையைப் போக்கி உடலறுப்பத் தெட்டுநிலம்
ஏழும் அத்துவாக்கள் இருமூன்றும் - பாழாக 25

ஆணவமான படலம் கிழித்து அறிவில்
காணரிய மெய்ஞ்ஞானக் கண்காட்டிப் - பூணும் 26

அடிஞானத் தாற்பொருளும் ஆன்மாவும் காட்டிக்
கடியார் புவனமுற்றும் காட்டி - முடியாது 27

தேக்குபர மானந்தத் தெள்ளமுதம் ஆகிஎங்கும்
நீக்கமற நின்ற நிலைகாட்டிப் - போக்கும் 28

வரவும் நினைப்பும் மறப்பும் பகலும்
இரவும் கடந்து உலவா இன்பம் - மருவுவித்துக் 29

கன்மமலத் தார்க்குமலர்க் கண்மூன்றும் தாழ்சடையும்
வன்மழுவும் மானுமுடன் மால்விடைமேல் - மின்னிடத்துப் 30

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைகாசிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**Dr T. ஸ்ரீஸ்கந்தராசா**
(லண்டன்)
**பொ. கஜேந்திரகுமார்**
(யாழ்ப்பாணம்)
**ச. கந்தசாமி**
(தேவன் ஸ்ரோர்ஸ், ஆவரங்கால்)
**மா. நாகலிங்கம்**
(லக்ஷ்மி வெதுப்பகம், பத்தமேனி, அச்சுவேலி)
**க. அரியரத்தினம்**
(கதிர் தொலைத்தொடர்பு நிலையம், வல்வெட்டி)
**கா. அருந்தவராசா**
(பிரதானவீதி, தொண்டைமானாறு)
**சி. தங்கவேல்**
(கேம்பிரிட்ஜ் கல்வி நிறுவனம், நவிண்டில்)
**க. கிருபாகரன்**
(சந்தைவீதி, உடுப்பிட்டி)
**நா. சுந்தரம்**
(இளைப்பாறிய பிராந்திய நிர்வாக அலுவலர், உரும்பராய்)
**ந. நற்குணராசா**
(தாதி உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை)
**P. சாந்தரூபன் G.S**
(சாருகாந் தொலைத்தொடர்பு நிலையம், கெருடாவில்)
**திருமதி இ. லோகநாதன்**
(இளை. பொது முகாமையாளர், மானிப்பாய்)
**Dr V. பாலகிருஷ்ணன்**
(கரவெட்டி)
**இ. கணேசலிங்கம்**
(கிராம உத்தியோகத்தர், அச்சுவேலி)
**ஆ. வேலாயுதம்**
(உலக்கை ஓடை, கம்பர்மலை)
**வீ. நடராசா**
(சாவகச்சேரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சி. கஜன்**
(சண்டிலிப்பாய்)
**S. இராசரத்தினம்**
(நீர்வேலி)
**த. விக்னேஸ்வரன்**
(தங்கராசா நகை மாளிகை, யாழ்ப்பாணம்)
**உரிமையாளர்**
(சுந்தரம் பிறதேர்ஸ் மருந்துக்கடை, திருநெல்வேலி)
**K. அருள்வேல்**
(விரிவுரையாளர், யாழ் பல்கலைக்கழகம்)
**ஆ. குலேந்திரநாயகம்**
(கிராம உத்தியோகத்தர், அச்சுவேலி)
**செ. கஜேந்திரன்**
(கந்தர்மடம், யாழ்ப்பாணம்)
**ஐ.கோ. சந்திரசேகரம்**
(மார்ஷல், யாழ் பல்கலைக்கழகம்)
**செல்வி T. பெரியதம்பி**
((முன்னாள் கல்விப் பணிப்பாளர், பருத்தித்துறை)
**செல்வி பா. ரதிவதனி**
(மாயக்கை, தம்பசெட்டி)
**Dr P. சிவபாலன்**
(உரும்பராய்)
**மாணிக்கம் குட்டித்தம்பி**
(வல்லியாவத்தை, கரணவாய்)
**திருமதி சீ. ஆதவன்**
(வல்லிபுரக்கோவில் வீதி, புலோலி)
**சாவித்திரி அருணாசலம்**
(தும்பளை, பருத்தித்துறை)
**க. பொன்னுச்சாமி**
(அம்மன் கோவிலடி, கரணவாய்)
**பேரின்பபாலசுப்பிரமணியராசா கபிலேஷன்**
(அரசவீதி, உரும்பராய் கிழக்கு)
**ஐ. புவனேஸ்வரன்**
(அச்சுவேலி)
**நி. ஜெயந்தன்**
(மங்கை ஸ்ரோர்ஸ், நீர்வேலி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சு. சந்திரலிங்கம்**
(ஆனைக்கோட்டை)
**பாலகுரு விமலேந்திரன்**
(குரு பிறிண்ரேஸ், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி)
**பொ. கந்தையா**
(புருடிலேன், அரியாலை)
**செ. கிருஷ்ணராஜா**
(கலட்டி வீதி, கோண்டாவில்)
**வை. சிற்றம்பலம்**
(தேவி வாசம், கொக்குவில்)
**மா. தங்கவேல்**
(சுண்ணாகம்)
**வரதலிங்கம் செல்வமோகன்**
(மோகன்கடை, ஆவரங்கால்)
**திருமதி கண்மணி கணபதிப்பிள்ளை**
(பத்தமேனி, அச்சுவேலி)
**தா. தர்மலிங்கம்**
(கொக்குவில்)
**த. கணேசலிங்கம்**
(தில்லையம்பலம் கந்தையா ஸ்ரோர்ஸ், ஆனைக்கோட்டை)
**ம.செ. சபாநாயகம்**
(மாலிசந்தி, கரவெட்டி)
**K. வேணுகோபாலு**
(வேணி இல்லம், புலோலி)
**S. மிகிந்தலா**
(கரவெட்டி)
**திருமதி S. உமாரதி**
(மங்கை இல்லம், உடுப்பிட்டி)
**செ. ஸ்ரீதரன்**
(விமலவாசா, உச்சில் ஒழுங்கை, கரவெட்டி)
**சி. மதியழகன்**
(திக்கம், அல்வாய்)
**ஜெகநாதன் ஜனனி**
(யாழ்ப்பாணம்)
**சிவரஞ்சன் கலைவாணி**
(போதராமடம், துன்னாலை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஐ. சிவஞானம்**
(கமலபதி, கரவெட்டி)
**அ. சின்னத்தம்பி**
(மாய்க்கிராயன், துன்னாலை)
**கதிரவேலு சதாசிவம்**
(அந்திரான், கரவெட்டி)
**ச. ஜெகசோதிராசா**
(ஆனைக்கோட்டை மேற்கு)
**ம. பிரசாந்தன்**
(யாழ்ப்பாணம்)
**த. முருகானந்தா**
(பிரம்படிலேன், கொக்குவில்)
**A.T. கதிரவேல்**
(திருநெல்வேலி, யாழ்ப்பாணம்)
**த. யாழினி**
(கந்தர்மடம், யாழ்ப்பாணம்)
**ஆறுமுகம் மயில்வாகனம்**
(இணுவில் கிழக்கு)
**வே. பாண்டியர்**
(கைதடி தெற்கு)
**வ. இராசையா**
(இருபாலைவீதி, கோப்பாய்)
**சோ. இராசலிங்கம்**
(ஆவரங்கால் கிழக்கு)
**சி.க. இராசரெத்தினம்**
(பத்தமேனி, அச்சுவேலி)
**K. குலரெட்ணம்**
(நவாலி வடக்கு, மானிப்பாய்)
**சி. பாலபாரதி**
(கற்கோவளம், பருத்தித்துறை)
**சு. பானுஜா**
(துன்னாலை, கரவெட்டி)
**ச. தெட்சணாமூர்த்தி**
(கோண்டாவில்)
**ஜெயசந்திரபோஸ் இந்திராணி**
(அச்சுவேலி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரித்துப்போன மனிதம்

**– திரு சி. நற்குணலிங்கம் அவர்கள் –**

இந்த அவசர உலகில் மனிதம் என்ற வார்த்தைக்கு அர்த்தம் புரிதல் மிக அவசியம். மனிதம் என்பது மனித மற்றும் பிற இயற்கை விழுமியங்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு நெறிமுறையின்மூலம் ஒரு மனிதாபிமான சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதைக் குறிக் கிறது. மனிதம் என்பது தத்துவவாதம் அல்ல. அது எப்போதும் மத, மற்றும் மூடநம்பிக்கை களைச் சார்ந்து இருக்காது. நம் பகுத்தறிவின் மூலம் சிந்தித்துச் செயற்படும் தன்மை பிற மனித வாழ்வுக்கு நாம் நம்மைப் பயனுள்ள வகையில் இருத்திக்கொள்வதாகும். மனிதம் மற்றும் மனிதநேயம் என்பது ஒரு ஜனநாயக மற்றும் நெறிமுறை வாழ்க்கை நிலைப் பாடாகும். ஓர் மனித உயிர் மற்ற எந்த உயிராக இருந்தாலும் கஷ்டப்படும்போது எந்தப் பலனும் எதிர்பார்க்காமல் உதவி செய்வதே மனிதம் எனப் பொருள்படும். பிறவி யால் மனிதன் அல்ல; தன்னைப் போலவே பிறரை நினைப்பது எவ்வித எதிர்பார்ப்புமின்றி துன்பத்தில் உதவும் குணம் மனிதம். இருப் பதைக் கொடுத்து இல்லார் வாழ்வும் சிறப்புறச் செய்தல் மனிதம். மனிதம் இல்லா வாழ்வில் நிம்மதியின்றி தவிப்பதுதான் மிச்சம்.

அதிவேக சுழற்சியுற்று உழன்று கொண்டிருக்கும் இன்றைய உலகின் போக் கில், விசையுற அசைந்து மனிதன் தனது சுயத்தை இழந்து வாழ்கிறான். இன்னொரு வரை அடியொற்றி வாழ நினைத்து வாழ்வின் ஆயுள் முழுவதையும் தொலைத்து விடு கிறான். மனிதனுக்கு உரித்தான அன்பு, பாசம், கருணை, மனிதாபிமானம், விட்டுக் கொடுப்பு, உதவும் மனப்பாங்கு போன்ற நல்லொழுக்கப் படிமங்கள் யாவுமே அழிவுப் பாதையில் செல்ல பொறாமை, பொய் உரைத்தல், ஏமாற்றுதல், நம்பிக்கைத் துரோகம், போட்டி, கொலை, கொள்ளை, பழிவாங்குதல் போன்ற கீழ்மைக் குணங்கள் மேலோங்கி உள்ளன. மனிதர்கள் மனிதத் தோடு வாழ்ந்தாலே ஆரோக்கியமான மனித சமுதாயத்தை உருவாக்கமுடியும்.

மனிதர்களிடத்தில் மனிதம் இன்றி யமையாத தேவையாகின்றது. மனிதத்துக்கு ஒழுக்கம் தேவையாகிறது. ஒருவருடைய வாழ்க்கை நடைமுறைகள் “ஒழுக்கம்” என்று தீர்மானிக்கப்படும். ஒழுக்கம் ஒழுகு என்ற சொல்லிலிருந்து பிறந்ததாகும். ஒழுகு என்றால் ஒன்றை இடைவிடாது கடைப்பிடித்தலாகும். வாழ்க்கைக்குத் தேவையான நல்ல, சிறந்த, உயர்ந்த நெறிகளை எந்த நேரத்திலும் விட்டு விடாமல் தொடர்ந்து பின்பற்றுவதாகும். ஒழுக்க நிலையில் தற்சார்பான ஒழுக்கம் முதன்மையானது. அதாவது ஒரு மனிதன் தன்னைத்தான் கொண்டு வாழ்தல். தன் னுடைய ஐம்புலன்களையும் மனதில் கட்டுக் கோப்புடன் வைத்துக்கொள்ளல். “ஒழுக்கத் தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின் எய்து வர் எய்தாப் பழி”. அதாவது ஒழுக்கத்தை முக்கியம் என்று எண்ணிக் காப்பவர்கள் மேலான நிலையை அடைந்து போற்றுவார் கள். ஒழுக்கத்தை விட்டவர்கள் பழி பாவங் களுக்கு உள்ளாவார்கள் என்கிறது குறள். நவீன தொழில்நுட்பங்களின் வளர்ச்சியை அதிகமாய் நுகர்ந்துகொள்ளும் நாம் உல கத்தை மாற்றுவோம். புதிய உலகம் படைப் போம். எனக் கூறியபடி மனிதாபிமானத்தைத்

*இறைவனுக்குச் செய்வதை ஏழைகளுக்குச் செய்யுங்கள் இறைவன் மகிழ்வார்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைத்துவிடப் போகின்றோம். மனிதன் இருக்கிறான், அவனுள் குடிகொண்டிருந்த மனிதம் தொலையக் காரணம் மனிதர்கள் மனிதத்துடன் வாழத் தவறிவிடுகின்றமையே. மனிதம் எங்கே பயணிக்கிறது என்பதை உணராதவர்களாக மனிதர்கள் தன் வழியில் சென்றுகொண்டிருக்கிறார்கள். இதனால் மனிதம் என்ற உயரிய பண்பு அற்றுப் போகின்றது.

மனிதம் என்பது தனியான ஒன்றல்ல. அது மனித இயல்போடு ஒன்றித்தது. மனிதம் மனிதர்களுக்கு தங்கள் சொந்த வாழ்க் கைக்கு அர்த்தத்தையும், வடிவத்தையும் கொடுக்கும் உரிமையும் பொறுப்பும் உள்ள தென்பதை உறுதிப்படுத்துகிறது. இன்றைய நாளில் மனிதம் என்பதை மீறிட வாழ்வோரே அதிகம். இதுவரை வாழ்ந்த கோபம், குற்றம், கொடூரமான அத்தனையையும் மறப்போம். இயன்றவரை மனிதம் போற்றி, நட்புப் போற்றி அன்பின் மிகுதியில் உலகத்திற்கான அக் கறையை முன்னிறுத்தி வாழும் ஒவ்வொரு உயிருக்காகவும் சிந்திப்போம். மிருகங்கள் மிருகங்களாக வாழ மனிதன் மட்டும் தன்னில் இருந்து கீழிறங்கி வாழ்கின்றான். கருணை கொண்ட மனதுக்கு சுயநலம் அவசியப் படாது. சுயநலம் இல்லாதவரால் மட்டுமே பிறர் பற்றிச் சிந்திக்க முடியும். சமூகத்துக் கான தன் கடமையையும் செய்ய முடியும்.

மண்ணில் ஒட்டிக்கொள்ளும் மழை நீரைப்போல இன்னும் வாழ்ந்துகொண்டிருக் கிறது மனிதம். அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது என்பது முன்னோர் வாக்கு. அதனினும் அரிது மனிதத் தன்மையுடன் மனிதன் வாழ்வது. மனிதம் தழைக்க முயல வேண்டும். மனிதன் இயற்கையோடு இணைந் திருந்த அன்று மனிதம் தழைத்திருந்தது. செயற்கையாய் செயற்படத் தொடங்கிய இன்று மனதோ மரத்துப்போனது. மனிதம் மரித்துப்போனது. மனிதத்தில் நம்பிக்கை இழந்துவிடக்கூடாது. மனிதம் ஒரு சமுத்திரம். சமுத்திரத்தின் சில துளிகள் மாசுபடுவதால் சமுத்திரம் என்றும் மாசடைந்துவிடாது.

மனித வாழ்க்கை ஒவ்வொருவருடைய வாழ்க்கை முறைகள் மற்றும் அவர்களது சிந்தனைகளைப் பொறுத்து வித்தியாசப்படும். இருந்தபோதும் மனிதன் எப்படியும் வாழலாம் என்பதைவிட இப்படித்தான் வாழவேண்டும் என்று உலகின் பல்வேறு நெறிகள் சுட்டிக் காட்டுகின்றன. “பிறர் முதுகுக்குப் பின்னால் நாம் செய்யவேண்டிய வேலை தட்டிக் கொடுப்பது மட்டும்தான்” என்கிறார் விவே கானந்தர். நாடி அடங்கிப் போகையிலே நாலு பேரு வேணும். அந்த நாலுபேரு வேணு மெனில் மனிதம் வளர்க்க வேணும். அன்பைக் கலந்த வாழ்க்கையை வார்த்தையை தெளிப் போம். மனம் பகிர்ந்து மனிதம் தெளிவோம். மனிதர்களைப் போற்றி மகிழ்வோம். மனிதம் மறக்கப்பட்டால் இம் மண்ணிலே மனித இனம் அழிந்துபோகும். மனிதம் ஒவ்வொருவர் வாழ் விலும் பிறக்கட்டும். மற்றவரை ஏற்றுக் கொள்ளும் தன்மை இன்னும் வளரட்டும்.

உலகில் பிறந்த மனிதர் யாவரும் சமம். ஒற்றுமையுடன் வாழ்ந்து மனிதம் விதைப்போம். ஆயுதம் ஏந்துவது அறிவுக்கு அழகன்று. அன்பால் அகிலம் சிறக்க வாழ் வது நன்று. உயிரினங்களில் உயர்ந்த இனம் மனித இனம். ஒரு கணம் சிந்தித்து செயல் ஆற்றுங்கள். முடிவு மரணம்தானே. எதைக் கொண்டு போவோம்? அன்பை விதைத்து விட்டுச் செல்வோம். யாராயினும் அறுவடை செய்யட்டும். முடிந்த மட்டும் இரசித்துக் கொண்டே போவோம். மனிதனாய் வாழ மனிதத்துவம் தேடுவோம். பணத்துக்குப் பின் னால்த்தான் மனிதம் என்றால் அந்த மனிதம்

*முட்டாள்கள் வாய்ப்புக்களைத் தேடுகிறார்கள். புத்திசாலிகள் வாய்ப்புக்களை உருவாக்குகிறார்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிணந்தின்னும் கழுகுகளுக்குச் சமம். மதங்கள் நூறு. இனங்கள் வேறு. ஆனால் மனிதம் ஒன்று. மதங்கள் பிரிப்பதை மனிதம் இணைக்கட்டும். மனிதத்தின் அவசியத்தை நம் மதங்களும் வலியுறுத்துகின்றன. இந்த உலகில் நம் கண்முன்னால் காணும் ஒவ்வொருவரையும் நேசிக்க இயலவில்லை என்றால் கண்ணுக்கு தென்படாத கடவுளிடம் எவ்வாறு அன்பு செலுத்த இயலும் என்கிறார் அன்னை தெரேசா.

நம்முடைய சொற்கள் யாவருடைய இதயத்திலும் விதையாக விழவேண்டும். விசமாக இறங்கக்கூடாது. பூவாக மலர வேண்டும். முள்ளாகக் குத்தக்கூடாது. உன் பின்னால் நிற்பவர்கள் எல்லோரும் உன்னை நேசிக்கிறார்கள் என எண்ணிவிடாதே. அதில் உன் முதுகில் குத்தக் காத்திருப்போரும் இருப்பார்கள். ஆளப்பிறந்த உலகம் இதில் தினம் அடித்துச் சாகுது. இரக்கம் கொண்டவர் எவரும் இல்லை. உறக்கம் கொண்டதோ மனிதம். மனிதன் மறந்த மனிதம் மலரட்டும். மனிதத்தைத் தொலைத்துவிட்டு மனதைக் கல்லாய் மாற்றிவிட்டோம். உதடுகள் பிழைதனை உச்சரிக்க வாழ்வைச் சிதைத்து விட்டோம். உலகம் அழியாமல் உயிரோடும், உயிர்ப்போடும் இருக்கவேண்டுமானால் அறிவாற்றல், ஆளுமை, அதிகாரம் கொண்ட மனிதர்களைவிட மனிதனின் பலம் வாய்ந்த குணங்களான அன்பு, கருணை, இரக்கம் எனும் மனிதம் கொண்ட மனிதர்களே தேவை. மற்றவை எல்லாம் இருந்தும் மனிதம் இல்லாவிட்டால் தான் நினைத்த எதையும் அவனால் சாதிக்க இயலாது.

பல ஆண்டுகளாக மனிதத்துடன் வாழ்ந்த புனிதர்கள் நிறைந்த நம் பூமி, உயர்வான ஒழுக்கம், உன்னதமான பண்பாடு, அவலக்குரல் கேட்டால் துடித்து எழும் மனிதநேயம் அத்தனை நற்பண்புகளோடும் உலகம் வியக்கும் வாழ்க்கை வாழ்ந்த மனித குலம் செழிக்க வழிகாட்டினார்கள் நம் முன்னோர்கள் என முன்னோர்களின் மனிதநேயம் குறித்து புறநானூறு கூறுகின்றது. வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினார் வள்ளலார். சமநிலை சமுதாயத்தை வலியுறுத்தினார் பாரதியார். தன்னைத் தாக்கும் பகைவர்களுக்குக் கூட இம்சை செய்யாதிருப்பதை தனது போராட்ட வழியாக நடைமுறைப்படுத்தி வெற்றி கண்டவர் மகாத்மா காந்தி.

இன்றைய மனிதனின் மனிதத்தின் நிலை என்ன? மனிதனை மனிதன் மதிப்பதில்லை. அரவணைப்பதில்லை. அன்பு காட்டுவதில்லை. மனிதம் கொஞ்சம், கொஞ்சமாக மண்ணுக்குள் புதைந்து கொண்டிருக்கிறது. மனிதன் பொன்னைத் தேடுவதிலும், மண்ணைத் தேடுவதிலும், பொருளைத் தேடுவதிலும் உள்ள அவனது நாட்டம் மனிதத்தைத் தேடுவதில் - சேகரிப்பதில் இல்லை. நாம், நமது என்ற பரந்த வட்டத்தில் வாழவேண்டிய மனிதன் நான் எனது என்ற குறுகிய வட்டத்தில் சுருங்கிக்கொண்டிருக்கிறான். மனிதமற்ற மனிதர்கள் சமுதாயத்தை சீரழித்துக்கொண்டிருக்கிறார்கள். சந்திர மண்டலத்தில் முதன்முதலாகக் கால் வைத்தவுடன் என்ன நினைத்தீர்கள் என நீல் ஆம்ஸ்ரோங்கைக் கேட்டபோது "பூமியிலிருந்து இலட்சக்கணக்கான மைல்களுக்கு அப்பாலுள்ள சந்திரமண்டலத்தில் இடம்பிடித்த மனிதனால் பக்கத்து நாட்டில், பக்கத்து வீட்டில் உள்ள மனிதர்கள் மனதில் இடம்பிடிக்க முடியவில்லையே என வருத்தப்பட்டேன்" என்று கூறியது மனிதம் மடிந்துகொண்டே வருகிறது என்பதை எடுத்துக்காட்டுகிறது. மரித்துப்போன மனிதம் மலர ஒன்று படுவோம். ஒன்றுபட்டால் உண்டு நிம்மதியான வாழ்வு.

*நாம் நீதியைப் பராமரிக்கவில்லை என்றால் நீதி நம்மைப் பராமரிக்காது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...)

# திருவாசகம்
# நீத்தல் விண்ணப்பம்
## பிரபஞ்ச வைராக்கியம்
## (உத்தரகோச மங்கையில் அருளிச் செய்யப்பட்டது)

மறைந்த
– சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள் –
(யாழ்ப்பாணம் – காரைநகர்)

131. கொழுமணி யேர்நகை யார்கொங்கைக் குன்றிடைச் சென்று குன்றி
விழுமடி யேனை விடுதிகண் டாய்மெய்ம் முழுதுங் கம்பித்
தழுமடி யாரிடை யார்த்துவைத் தாட்கொண் டருளி யென்னைக்
கழுமணி யேயின்னுங் காட்டுகண் டாய்நின் புலன்கழலே.

**ப-ரை:**

கொழு மணி ஏர் நகையார்- கொழுவிய முத்தையொக்கும் வெள்ளிய பற்களையுடைய மகளிரது, கொங்கை குன்று இடை சென்று- தனங்களாகிய மலைகளிடத்துச் சென்று, குன்றி விழும் அடியேனை- அறிவு குறைந்து விழுகின்ற அடியேனை, விடுதி கண்டாய்- கை விடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும். மெய் முழுதும் கம்பித்து அழும் அடியாரிடை- அன்பின் பெருக்கால் உடல் முழுவதும் நடுங்கி அழுகின்ற மெய்யடியார் நடுவுள், என்னை ஆர்த்து வைத்து ஆட்கொண்டருளி- அடியேனையும் சேர்த்து வைத்து அடிமையாகக் கொண்டு அருள் புரிந்து, என்னை கழும் மணியே- அடியேனைத் தூய்மை செய்த குருமணியே, இன்னும் நின் புலன் கழல் காட்டு- நின்னைப் பிரிந்து வருந்துகின்ற எனக்கு இன்னும் ஞானத் திருவடியைக் காட்டியருள வேண்டும்.

மகளிரது கொங்கைகளாகிய குன்றிடைச் சென்று அறிவு குன்றி விழுகின்ற அடியேனைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும். உடல் முழுவதும் கம்பித்து அழுகின்ற மெய்யடியார் நடுவுள் என்னை ஆர்த்து வைத்து ஆட்கொண்டருளி என்னைத் தூய்மை செய்த குருமணியே இன்னும் நின் ஞானத் திருவடியைக் காட்டியருள வேண்டும் என்பதாம்.

கொழுமணி என்றது குற்றங்களின்மையால் தெளிந்த ஒளியையுடைய வெண்ணிற முத்தினை. மணி என்பது முத்தைக் குறித்து வரல் "மணிவாள் நகையாய்" (385) என்னும் திருக்கோவையாரினுங் காண்க. ஏர்- உவமவுருபு. "முத்தேர் முறுவலாய்" (கலி 64:29) என்புழிப்போல. நகை- எயிறு. (கலி 72:12 நச்), மகளிர் பல்லுக்கு முத்தினை உவமை கூறுதலை,

"முத்தன்ன வெண்ணகையாய்" திருவெம் 3.
"ஒண்ணித்தில நகையாய்" திருவெம் 4.
"கனி பவளத் தயலுளவே முத்தமொத்த நிரை" திருக்கோவை 35.

*நான் என் பெருமையை உண்மையில் உணராததே என்னுடைய ஒரே தவறு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தொண்டைக் கனிவாய்க் குளிர் முத்த நிரைத்து" திருக்கோவை 36.
"கவவின வாணகை வெண் முத்தம்" திருக்கோவை 108.

என வருவனவற்றிலுங் காண்க.

மகளிரது இளமைச் செவ்வி புலப்பட "கொழுமணி ஏர் நகையார்" என்றார். குன்றிடை- குன்றினிடத்து. இடை- இடத்து. "முலையிடை வாங்கி முயங்கினன்" (கலி 146:24) என்புழிப்போல. காமத்தால் அறிவு குன்றி மகளிரை முயங்குதலின் "கொங்கைக் குன்றிடைச் சென்று குன்றி விழுமடியேனை" என்றார்.

கம்பித்தல்- நடுங்குதல். "விதிர்ப்புப் பணிப்பு விதலை கம்பம் அதிர்ப்புப் பொதிர்ப்பு நடுக்கமாகும்" எனத் திவாகரத்தும் வருதல் காண்க. மெய்யடியார்க்கு அன்பின் பெருக்கால் உடல் முழுவதும் கம்பித்தலும் ஆனந்தக் கண்ணீர் சொரிதலும் நிகழ்தலின் "மெய்ம் முழுதுங் கம்பித் தழுமடியார்" என்றார்.

"நகமெலாந் தேயக் கையாளாண்மலர் தொழுது தூவி
முகமெலாங் கண்ணீர் மல்க முன் பணிந்தேத்துந் தொண்டர்"
நாவு 40:8.

"கரையா நினைந்துருகிக் கண்ணீர் மல்கிக் காதலித்து நின்
கழலே யேத்து மன்பர்க்கு"
நாவு 260:3.

"அகங் குழைந்து மெய்வருந்தி யழுவார் தங்கள் வாயவன் காண்"
நாவு 261:3.

"குறையாத வுலகைக் கண்ணீர், ஆறாத வானந்தத் தடியார்"
நாவு 293:3.

எனத் தேவாரத்தும்,

அழலது கண்ட மெழுகது போலத்
தொழுதுளம் உருகி யழுதுடல் கம்பித்து (போற்றி 60-1)

எனத் திருவாசகத்தும்,

"மெய்த்தழையா நின்ற வன்பினர் போல விதிர் விதித்து" 102.

எனத் திருக்கோவையாரிலும்,

"காவலன் வியந்து பல்காற் கண்டுகண் டதிச யித்துப்
பூவினை யடைதலிற் கொய்து புளகிதத் தோடுங் கண்ணீர்
மேவ மெய் கம்பிக் தன்பின் வெள்ளத்து மூழ்கி மிக்க
தேவதே வனைப்பூ சித்தான் விதிப்படி சிறந்த நல்கி"
இந்திரன் பழி 22.

எனத் திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணத்தும் வருவன காண்க.

அடியாரிடை யார்த்து வைத்தாட்கொண்டருளி என்றது மெய்யடியாரிடைத் தங்கச் செய்து அடிமை கொண்டருளி என்றவாறு. "அறவை யென்றடியார்கள் தங்கள் அருட் குழாம்புக விட்டுநல் லுறவு செய்தெனை உய்யக் கொண்ட பிரான்" (சென்னிப் 7) என அடிகள் பிரிதோரிடத்து அருளியவாறுங் காண்க.

*துன்பங்களை எதிர்கொள்வதில்த்தான் வாழ்க்கையின் வெற்றி உள்ளது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழுவும் மணி என்பது கழுமணி என இடைகுறைந்து நின்றது. கழுவுதல்- தூய்மை செய்தல். மணி- குருமணி. ஆசாரிய சிரேட்டர் என்றவாறு. இறைவன் குருவாக எழுந்தருளி வந்து அடிகளின் பாசவழுக்கை நீக்கியமையின் "என்னைக் கழுமணியே" என்றார்.

"பாச மறுத்தெனை யாண்ட" குயில் 9.
"பந்த மறுத் தென்னை யாண்டு கொண்ட பாண்டிப்பிரான்" பூவல்லி 2.
"கடிய வினை யகற்றிப் பழமலம் பற்றறுத் தாண்டவன்" பாண்டி 8.
"பழவினைகள் பாறும் வண்ணம் சித்தமலமறுவித்துச்
சிவமாக்கி யெனை யாண்ட அத்தன்" அச்சோ 1.
"பந்த மறுந்தெனை யாண்டு" அச்சோ 6.

என அடிகள் அருளியவாறுங் காண்க.

கண்டாய் என்பது முன்னிலையசையாயினும் காட்டியருள வேண்டும் என்னும் ஆர்வ மிகுதியையுணர்த்தியது. கழல் அதனையுடைய திருவடிக்கு ஆகுபெயர், ஞானமயமான திருவடியாதலின் "புலன்கழல்" என்றார்.

இதன்கண், நகையார் கொங்கைக் குன்றிடை விழுமடியேனை விடுதி கண்டாய் எனவும், இன்னும் காட்டு கண்டாய் நின்புலன் கழலே எனவும் கூறுமாற்றால் பிரபஞ்ச வைராக்கிய விருப்பும் கைவிடாதொழிதல் வேண்டுமென்பதும் புலனாதல் காண்க. 27.

**132. புலன்கள் திகைப்பிக்க யானுந்திகைத் திங்கோர்பொய்ந் நெறிக்கே**
**விலங்குகின் றேனை விடுதிகண்டாய் விண்ணும் மண்ணுமெல்லாம்**
**கலங்கமுந் நீர்நஞ் சமுதுசெய் தாய்கரு ணாகரனே**
**துலங்குகின் றேனடி யேனுடை யாயென் தொழுகுலமே.**

**ப-ரை:**

விண்ணும் மண்ணும் எல்லாம் கலங்க- விண்ணுலகத்தவரும் மண்ணுலகத்தவருமாகிய எல்லாரும் கலக்கமடைய, முந்நீர் நஞ்சு அமுது செய்தாய்- அதனை நீக்கும் பொருட்டு திருப்பாற்கடலில் தோன்றிய ஆலகாலவிடத்தை உண்டருளி அவர்களைக் காத்தருளினவனே, கருணை ஆகரனே- கருணைக்கு இருப்பிடமானவனே, துலங்குகின்றேன் அடியேன் உடையாய்- உலகவாதனையால் நடுங்குகின்றேனாகிய அடியேனை ஆளாக உடையவனே, அடியேன் தொழுகுலமே- என்னுடைய வணக்கத்திற்குரிய மரபினையுடைய அந்தணாளனே, புலன்கள் திகைப்பிக்க யானும் திகைத்து- ஐம்புலன்களும் மயக்கத்தைச் செய்ய யானும் அவற்றால் மயக்கமடைந்து, இங்கு ஓர் பொய் நெறிக்கே விலங்குகின்றேனை- இவ்வுலகில் நிலையற்ற ஒரு பொய்யாகிய வழியின்கண் விலகிச் செல்லுகின்றேனாகிய என்னை, விடுதி கண்டாய்- கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும்.

விண்ணுலகத்தவரும் மண்ணுலகத்தவருமாகிய எல்லாரும் கலக்கமடைய அதனைக் கண்டு திருப்பாற்கடலிற் தோன்றிய நஞ்சை உண்டருளி அவர்களைக் காத்தருளினவனே, கருணாகரனே, துலங்குகின்றேனாகிய அடியேனை ஆளாக உடையவனே, அடியேன் தொழுகுலமே, ஐம்புலன்களும் திகைப்பிக்க யானும் திகைத்து இவ்வுலகில் ஒரு பொய்யாகிய

*பொறுமையைவிட மேலான தவம் இல்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழியின்கண் விலகிச் சென்றவனாகிய என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும் என்பதாம்.

அமுதம் பெறவிரும்பி வானவரும் தானவரும் திருப்பாற் கடலைக் கடைந்தபோது எழுந்த ஆலகால விடத்தைக் கண்டு விண்ணுலகத்தவரும் மண்ணுலகத்தவருமாகிய எல்லாரும் அஞ்சிக் கலக்கமடைந்தமையின் "விண்ணும் மண்ணு மெல்லாங் கலங்க" என்றும், இறைவன் அவர்கள் கலக்கத்தை நீக்கும் பொருட்டு பாற்கடலிற்றோன்றிய அந்நஞ்சை அமுது செய்தருளினமையின் "முந்நீர் நஞ்சு அமுது செய்தாய்" என்றும் அருளினார்.

"தேவர் தானவர் பரந்து திண்வரை மால் கடனிறுவி
நாவதாலமிர் துண்ண நயந்தவர்"
ஞான 232:2.

"வடங்கெழு மலைமத்தாக வானவர் அசுரரோடு
கடைந்திட வெழுந்த நஞ்சங் கண்டு பஃறேவரஞ்சி
அடைந்து நுஞ் சரண மென்ன வருள் பெரிதுடையராகித்
தடங்கட னஞ்ச முண்டாக் சாய்க்காடு மேவினாரே"
நாவு 65:2.

"மண்டனை யிரந்து கொண்ட மாயனோ டசுரர் வானோர்
தெண்டிரை கடைய வந்த தீ விடந் தன்னையுண்ட"
நாவு 71:4.

"நெருங்கின வானவர் தானவர் கூடிக் கடைந்த நஞ்சைப்
பருக்கின வாறென் செய்கேன் ஒற்றியூருறை பண்டங்களே"
நாவு 86:11.

"பரவி வானவர் தானவர் பலருங் கலங்கிட வந்த கார்விடம்"
ஞான 186:2.

"நஞ்சமுது செய்த மணிகண்டன்" ஞான 329.

எனத் தேவாரத்தும்,

"முன்னுங்கடு விடமுண் டென்றில்லை முன்னோன்" 236.

"தெண்ணீர்க் கடனஞ் சூணுந் திருத்து மொருவன்" 341.

எனத் திருக்கோவையாரினும் வருவன காண்க.

விண்ணும் மண்ணும் இடவாகுபெயராய் ஆண்டுள்ளாரை உணர்த்தின முந்நீர்-நிலத்தைப் படைத்தலும் காத்தலும் அழித்தலுமாகிய மூன்று நீர்மையையுடைய நீர்; என்றது கடலை. முந்நீர் என்பதற்கு "நிலத்தைப் படைத்தலும் காத்தலும் அழித்தலுமாகிய மூன்று தொழிலையுடைய நீர் (பெரும்பாண் 441 உரை) எனவும், நிலத்தைப் படைத்தலும் காத்தலும் அழித்தலுமாகிய மூன்று தொழிலுடைமையின் முந்நீர் ஆகுபெயர் (சீவக 5 உரை) எனவும் நச்சினார்க்கினியர் உரைத்தமை காண்க. ஆற்று நீரும் ஊற்று நீரும் மழை நீருமுடைமையால் கடற்கு முந்நீர் என்று பெயராயிற்று எனப் புறநானூற்றுரைகாரரும் (புற 9:14) உரை முந்நீர்-கடல் ஆகுபெயர்; ஆற்றுநீர் ஊற்றுநீர் மேனீரென இவையென்பார்க்கு அற்றன்று. ஆற்றுநீர் மேனீராகலானும் இவ்விரண்டுமில்வழி ஊற்றுநீருமின்றாகலானும் இவற்றை முந்நீரென்றல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருந்தியதன்று; முதிய நீரெனின் "நெடுங் கடலுந் தன்னீர்மை குன்றும்" என்பதால் அதுவும் மேனீரின்றி அமையாமையின் ஆகாது; அதனால் முந்நீர்க்குப் பொருள் யாதோவெனின் முச்செய்கையையுடைய நீர், முந்நீர் என்பது; முச்செய்கையாவன: மண்ணைப் படைத்தலும், மண்ணையழித்தலும் மண்ணைக் காத்தலுமாம் என அடியார்க்கு நல்லாரும் (சிலப் 17 உரை) எழுதிய உரைப் பகுதிகள் ஈண்டறியற்பாலன. முந்நீர் என்பது கடலுக்குப் பொதுப் பெயராயினும் ஈண்டும் பாற்கடலை உணர்த்தியது. முந்நீர் நஞ்சு- பாற்கடலிற்றோன்றிய நஞ்சு. அமுது செய்தாய்- உண்டாய் கருணா+ஆகரன்= கருணாகரன். என வடமொழி முடிபு. இருப்பிடமானவன் என்பது பொருள். ஆகரம்- இருப்பிடம். நஞ்சமுண்டு தேவர்க்கருள் செய்தமையின் "கருணாகரனே" என்றார்.

"ஆலால முண்டங் கமரர்க்கருள் செய்ததாமே" ஞான 312:10.
"உண்பரிய நஞ்சுதனை யுண்டுலகுய்ய அருளுத்தமன்" ஞான 335:7.
"நஞ்சங் கண்டு ப'.றேவர் அஞ்சியடைந்து நுஞ்சரணம் என்ன
அருள்பெரி துடையராகித் தடங்கடல் நஞ்சம் உண்டார்" நாவு 65:2.
"விடமுண் டருள்செய்..... சடையன்" சுந் 93:7.

எனத் தேவாரத்தும்,

"மணியக்கணியும் அரன் நஞ்சமஞ்சி மறுகி விண்ணோர்
பணியக் கருணை தரும் பரன்" (195)
"விண்ணோர் குழுவினை யுய்ய நஞ்சுண்டு அம்பலத்துக்
குனிக்கும் பிரான்" (229)

எனத் திருக்கோவையாரினும் வருவன காண்க.

துலங்கல்- நடுங்குதல். "இலங்கை மன்னனை யீரைந்திரட்டி தோள், துலங்க வூன்றியதூ மழுவாளினார்" (தே.ஞான 299:8) துளங்கு என்பது துலங்கு என எதுகை நோக்கித் திரிந்தது. அன்றி லகரமும் ளகரமும் பொருள் வேறுபாடின்றி ஒத்து நடக்கும் என்னும் வடமொழி மதம்பற்றித் தமிழிலும் வந்தது எனினுமமையும். துலங்குகின்றேன்- முற்றெச்சம். விண்ணும் மண்ணுமெல்லாம் கலங்க எழுந்த நஞ்சையுண்டு அவர்கள் கலக்கத்தை நீக்கியருளியதுபோல பிறப்பிறப்புத் துன்பங்களால் வரும் துலக்கத்தை நீக்கியருள வேண்டும் என்பார். "விண்ணு மண்ணுமெல்லாங் கலங்க நஞ்சமுது செய்தாய், துலங்குகின்றேன் அடியேன்" என்றார். அடியவனது கலக்கத்தை நீக்குதல் ஆண்டானாகிய நினது கடமையென்பது புலப்பட "அடியேன் உடையாய்" என்றார்.

தொழுகுலன் எனற்பாலது தொழுகுலம் என நின்றது. தொழுகுலன்- வணங்குதற்குரிய மரபினன்; அந்தணன். குலம்- கோயில் என்பாருமுளர். சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐம்புலன்களும் அறிவை மயக்குதலின் "புலன்கள் திகைப்பிக்க" என்றார். "மாறிநின் றென்னை மயக்கிடும் வஞ்சப்புலனைந்தின்" (கோயிற்றிருப் 1) என அடிகள் பிறிதோரிடத்துக் கூறுதலுங் காண்க.

"சாணிரு மடங்கு நீண்ட சழக்குடைப் பதிக்கு நாதர்
வாணிக ரைவர்..... மயக்கஞ் செய்து"
நாவு 67:7.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பொத்தார் குரம்பை புகுந்தைவர் நாளும் புகலழிப்ப
மத்தார் தயிர்போன் மறுகு மென் சித்தை"

நாவு 96:3.

"கட்டனா யைவர் வந்து கலக்காமைக் காத்துக் கொள்வாய்"

நாவு 57:5.

திகைப்பித்தல்- மயக்கமுறுத்தல். "தேவே தில்லை நடமாடீ திகைத்தேனே" (ஆனந்த6) யானும் என்புழி உம்மை, நின்னால் ஆட்கொள்ளப்பட்ட யானும் என உயர்வு சிறப்பு திகைத்து என்றது நின்னால் ஆட்கொள்ளப்பட்டிருந்தும் நின் பிரிவின் காலநீட்சியால் நின் அருள் நெறியை விட்டு மயக்கமடைந்து என்றவாறு. பொய்நெறி என்றது நிலையற்ற இவ்வுலக இன்பத்தில் தலைப்படும் அவநெறியை. பொய் நெறிக்கு என்னும் நான்காவது ஏழாவதன் பொருட்கண் வந்தது; "ஒரு குதலைச் சின்மழலைக்கென்னோ" (திருக்கோவை 104) என்புழிப்போல. விலங்குதல்- விலகுதல். "பருவரை நாடனீங்கி விலங்காது நெஞ்சுடைந்தது" (திருக்கோவை 150 கொடு) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. அழிவிலின்பம் பயக்கும் சிவநெறிக்கட் சேறலொழிந்து துன்பம் பயக்கும் அவநெறிக்கட் செல்கின்றேன் என்பார், "விலங்குகின்றேனை" என்றார். விலங்குகின்றேனை என்பது வினையாலணையும் பெயராய் ஐயுருபு ஏற்று விளங்கு கின்றவனாகிய என்னை எனப் பொருள் தந்து நின்றது.

இதன்கண், யானுந் திகைத்திங்கோர் "பொய்நெறிக்கே விலங்குகின்றேனை விடுதி கண்டாய்" எனவும், "துலங்குகின்றேன்" எனவும் கூறியவற்றால் பிரபஞ்ச வைராக்கிய விருப்பும், கைவிடாதொழிதல் வேண்டும் என்பதும் புலப்படுதல் காண்க. 28. (தொடரும்...

---

## பெற்றோர் தவம் - பிள்ளைகள் நலம்

மருத்துவம் என்பது நோய் வந்த பிறகு தீர்ப்பது மாத்திரம் அன்று. நோயே வராமல் காக்கலாம். நோய் என்றால் என்ன? இயற்கையாக நம்முடைய உடலிலே இந்த சுகத்திற்கு. அதாவது உடல் நலத்திற்கு ஏற்ற எல்லாம் அமைந்து இருக்கிறது. அவ்வப்போது ஏற்படுகின்ற குறையைக்கூட சரிக்கட்டிக் கொள்ளக்கூடிய அளவுக்கு இயற்கையினுடைய ஆற்றல் அமைப்பு நம் உடலிலே இருக்கிறது. ஒவ்வொரு செல்லும் ஒரு இரசாயனச் சாலையாக வேலைசெய்துகொண்டு இருக்கிறது நம்முடைய உடலிலே. நாம் அதைத் தெரிந்துகொண்டு ஒத்துழைத்தால் போதும். அதைக் கெடுக்காமல் இருந்தால் போதும். அதைத்தான் தெரிந்துகொள்ள வேண்டும்.

கருவமைப்புக் குறித்தும் அதிகமாக நினைவில் கொள்ளவேண்டும். பெற்றோர்கள் எந்த முறையிலே மனம். உடல் அமைப்பிலே இருக்கின்றார்களோ அதை ஒட்டித்தான் ஒரு குழந்தை உருவாக முடியும். மரத்தை ஒட்டித்தான் விதை இருக்கும். அந்த விதையை ஒட்டித்தான் மரம் இருக்கும். இது தொடர் நிகழ்ச்சி.

குழந்தைகள் ஆரோக்கியமாக இருக்கவேண்டும் என்று சொன்னால். பெற்றோர்கள் மனநலத்திலே. உடல் நலத்திலே நலம் உள்ளவர்களாக அமைய வேண்டும். இருக்கவேண்டும். பெற்றோர்கள் இடத்திலே ஒருவருக்கு ஒருவர் பிணக்கு. மனத்தாங்கல் இருக்குமேயானால். நமது உடலிலே முக்கியமான சக்தியாகிய சீவகாந்த ஆற்றல் பிணக்குற்று அது விஷத் தன்மையாக மாறக்கூடியதாகவே அமையும். அது குழந்தைகளையும் பாதிக்கும். ஆகவே மனநலமும். உடல் நலமும் காத்து இனிமை காப்போம்.

*மகிழ்ச்சியானது நம்மைப் பொறுத்தே அமைகின்றது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வீக அழைப்பு

– வடகோவை பூ.க. இராசரத்தினம் அவர்கள் –

கடிதங்கள், அன்பின் தூதுவர்கள் தமது முக்கியத்துவத்தை இழக்கத் தொடங்கின. கடிதங்களிலுள்ள மை நிறைந்த இதழ்கள், அன்பு இதழ்களால் வாசிக்கும்பொழுது அதன் சுவை, இனிமை, பசுமை அனைத்தும் அற்புதமாக அமைந்திருந்தன. அவற்றுக்கு தொலைத்தொடர்பு சாதனங்கள் சாவுமணி அடிக்கும் என்பதை முருகேசரால் நம்பவே முடியவில்லை.

முருகேசு உபாத்தியார் படுத்த படுக்கையில் அவருடைய மனைவியும் இரண்டு பிள்ளைகளும் லண்டனிலே. அவரின் உதவியாள்தான் அவர் உயிரை பிடித்து கொண்டிருக்கிறார். சிலந்தியின் கைவரிசை வீட்டிற்குள் வரும் காற்றுக்குத் தடை விதித்துள்ளது. முதியவரைப் போன்று எண்ணை, தண்ணீர் அற்ற கதவுகளும் அனுங்கத் தொடங்கின. பச்சைக்கம்பளம் விரித்தால் போன்றிருந்த முத்தம், தற்பொழுது முற்றாக தூசும், சேறும் சகதியும் குத்தகை எடுத்துக்கொண்டன.

பழைய 40 வயது மணிக்கூடு அடுத்த மணியை அடித்தது. எத்தனை மணிகளை அடித்திருக்கும் 40 வருடகாலத்தில்.....

"மணிக்கூடே, நீ மாத்திரம் என்னோடு உறவாக இருக்கின்றாய், ஆனால் என் மனைவியும், இரு பிள்ளைகளும் எட்டாத தூரத்திற்கு போய்விட்டார்களே"

கண்களிலிருந்து சூடான உவர்ப்புள்ள துளிகள் உதிர்ந்தன. அவை முகத்தில் மடிப்பு விழுந்த தோல்களில் சிக்கின. மணிக்கூட்டில் மலர்ந்த மணித்தியாலத்தைக் குறிக்கும் மணி ஓசை கிழவரைப் பார்த்து பரிகசிப்பது போல் இருந்தது. அது காணாத காட்சிகளா? "உங்கட வீட்டில் மாத்திரமா நடக்குது. நாட்டு நடப்பு இதுதான்" என்றான் உதவியாளர்.

மூத்த மகன் சந்திரனின் கடிதம் லண்டனிலிருந்து சில மாதங்களுக்கு முன் நடைபெற்ற புகைப்படங்களுடனும், "நான் விரைவில் வருவேன்" என்ற சொற்கள் கொண்ட பேப்பர் துண்டும் கிடைத்தன. அவனுக்கு கிடைத்த மட்டுப்படுத்தப்பட்ட நேரத்தில் இவ்வளவுதான் எழுத முடியும்.

இவருக்கு முன்பு மகள் எழுதிய கடிதங்களையும் சேகரித்து வைத்தார். விலாசம் மாறிய பின்பு கடிதங்களும் வரவில்லை. அடுப்படியில் கிடந்த அலுமினியப் பாத்திரங்கள் பெரிய காற்று வீசியபொழுது சத்தமிட்டன. மனைவியின் எண்ணம் மனதில் மலர்ந்தது. ஆந்தை அலறுவது கேட்கத் தொடங்கியது. நிலா, தான் நினைத்தபடி அட்டவணைப்படி தலைகாட்டவில்லை. கருமுகில் இடையிடையே தோன்றி மறைவதும் பிரகாசிப்பதுமாக நிலா தடுமாறியது.

மனிதன் தனித்து வாழமுடியாது அவன் தேவைகளை அவன் ஒருவனாகவே நிறைவேற்றிக்கொள்ள முடியாது. அதற்காகவே குடும்பம் என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. இன்பமும் துன்பமும் கூட்டாக பகிர்ந்து அனுபவிக்கப்படுகின்றன. கூட்டு முயற்சியால் அதிக இன்பம், துன்பத்தைப் பலர் சேர்த்து தாங்கும்போது வருத்தம் குறையும். கூட்டுக் குடும்ப வாழ்வு கிடைக்குமா என்பது கேள்விக்குரியதாகிவிட்டது.

*ஒரு செயலின் நல்ல தொடக்கம் அதனைப் பாதியளவு முடித்ததற்குச் சமம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதவன் உதயமான அதிகாலைப் பொழுது கோயில் தேவைக்கு மலர் கொய் கிறார்கள். கோயில் பூசைக்கான ஆயத்தமணி அடித்து ஓய்ந்தது.

தனது மனைவி தன்மீது வைத்துள்ள அன்பையும், அவளின் நற்குணங்களையும் நினைத்து பார்க்கிறார். தான் உதாசீனப் படுத்தியதை நினைத்து வருந்துகிறார். அவள் துயரத்தை நெஞ்சுக்குள் புதைத்து கொண்டு வாழ்ந்தார். அவர் மனதிலிருந்து மனைவி யினதும் பிள்ளைகளினதும் பாசம் இறந்து கொண்டிருந்தது. தான் செய்த தவறுகள் முள்ளாகக் குத்தின. மனம் வெந்தது.

துயரமும் அவநம்பிக்கையும் துளிர் விட்டு கொண்டிருந்த இந்நாட்களில் ஓர் கடிதம் வந்தது. சில நாட்கள் உருண்டோடின. காண முடியாத தவிப்பில் மனம் அல்லலுற்று வாழ் வின்மீது வெறுப்பு மேலிடத்தொடங்கிய அந்நாளில் தொலைபேசி மணி ஒலித்தது. தென்றல் காற்று வீசியது போன்ற உணர்வு. கருமுகில்கள் மறைந்த நிலா வெளியே வந்து ஆச்சரியப் பார்வையிட்டது. இனிமையான ஓசை வெறிச்சோடிய வீட்டில் பரவியது.

கூனிப்போன முருகேசர் எழுவதற்கு முனைந்தார். பாரிசவாதத்தை மறந்துவிட்டார் போலும். மகனின் குரலைக்கேட்க தொலை பேசியை எட்டிப்பிடிக்க வேண்டும் என்ற பேரவா. கட்டிலும் கதிரையும் இடையில் தடை உசார்நிலையில் நின்றது. பாதிப்பு அடையாத மற்றக்கையை உயர்த்தி அசைப்பதற்கு மீண் டும் முயற்சித்தார். முருகேசர். பாரிசவாதத்தின் தடுப்புக்காவலில் உள்ளவர் எப்படி முன்னேற முடியும். அது சட்டமல்லவா" பலருக்கும் தெரிந்த சட்டம். முருகேசருக்கு இச்சட்டம் நன்கு தெரியும். பல வருடங்கள் அனுபவித் தார். இப்படியாக கஷ்டப்படவேண்டுமெனப் பிறந்ததும் தெரியுமாம்.

தொலைபேசி மணி தொடர்ந்து அடித் தது. முருகேசர் பாதிக்கப்படாத கையால் கதிரையின் காலைப்பிடித்து கும்பிடுவது போலக் காணப்பட்டார். எழும்புவதற்கு முயற் சித்தார். மெதுவாக அசைந்து தொலை பேசியை எடுத்தார்.

“ஐயகோ விழுந்து விட்டேனே. இரத் தம் நெற்றியில் பாய்கிறதே வலிக்கிறதே” “ஹலோ! சந்திரன்! சந்திரன்!" சத்தமிட்டு அழுதார்.

பதில் “இது றோங் நம்பர்”

“ஐயகோ தலைசுற்றுகிறதே” புலம் பினார். “ஐயகோ விழுகிறேன், தலை சுற்று கிறதே”

“வெளியாலை போன பிள்ளைகளுக்கு இருக்கும் கஷ்டங்கள் இவருக்கு எப்படித் தெரியப்போகுது. வீட்டுக்குவீடு வாசற்படி என்றதுபோல எல்லா இடமும் இதே பிரச் சினை. அரைகுறையாக செத்தவீட்டுக்கு மாத்திரம் வருவார்கள். இவருடைய மரணச் சடங்குக்கு வருவதை கொரோனா என்ற கொடிய நோய் அனுமதி வழங்க வேண்டுமே உதவியாளர் தனக்குள்ளே முணுமுணுத்துக் கொண்டான்.

“செல்வச்சந்நிதியான் என்னை அழைக் கிறார். ஆலயமணி கேட்கிறதே” மீண்டும் அமைதி என்னும் நிழல் வீட்டைத் தழுவியது. துயரங்களின் தொடக்கம் கண்ணீரில்தான் ஆனால் அதுவே தொடர்கதை ஆகிவிட்டால்....

உதவியாளர் அவரைக் கட்டிலில் படுக்க வைத்தார். சுவர் மணி அடித்தது. அதற்கு தெரியுமா அது சாவுமணி என்று? அது அமைதியைச் சற்றுக்குலைத்தது. உதவி யாளர் அவரை முடிவில்லா நித்திரையில் உறங்கச் செய்தார். “செல்வச்சந்நிதியான் அழைத்துவிட்டான்” என்று மெதுவாகக் கூறினார் உதவியாளர்.

*மனதின் ஆற்றலே வாழ்க்கையின் சாராம்சம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிளையாடற் புராண வசனம்

(முப்பத்தைந்தாவது)

## தண்ணீர்ப் பந்தல் வைத்த படலம்

– ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் –

இராசேந்திர பாண்டியன் அரசியற்று நாளிலே, காடு வெட்டிய சோழன், சோம சுந்தரக் கடவுளை வெளிப்படையாக வந்து, தரிசனஞ் செய்துகொண்டு போகக் கருதிப், பாண்டியனுடைய சிநேகத்தைப் பெறற் பொருட்டு, அவனுக்கு இரத்தினாபரணம் பீதாம் பரம் முதலிய வரிசைகளை அனுப்பினான், பாண்டியன், அவைகளைக்கொண்டு, தானுஞ் சோழனுக்கு வரிசைகளை அனுப்பினான். இருவரும் நட்பு கலந்திருக்கும்பொழுது, சோழன் தன் மகளைப் பாண்டியனுக்குக் கொடுக்க உடன்பட்டான். இராசேந்திர பாண்டி யனுடைய தம்பியாகிய இராசசிங்கனென் பவன், அதைக் கேள்வியுற்றுத், தன் தமை யனுக்குப் பேசப்பட்ட பெண்ணைத் தானே விவாகஞ் செய்யக் கருதி, அவனை வஞ்சித் துக் காஞ்சீபுரத்தை அடைந்தான். அதுகேட்ட சோழன், சேனையோடு வந்து இராசசிங்கனை அழைத்துக்கொண்டு போய், தன் மகளை அவனுக்கு விவாகஞ் செய்து கொடுத்தான்.

காடு வெட்டிய சோழன், பாண்டி நாட் டைத் தன் மருமகனாகிய இராசசிங்கனுக்குக் கொடுக்க விரும்பி, இராசேந்திர பாண்டி யனைப் பிடிக்க நினைந்து, அம்மருமகனோடு எண்ணில்லாத சேனை சூழப் புறப்பட்டு வந்து, மதுரை நகரத்துக்கு இரண்டு யோசனை தூரத்திலே தங்கினான். அதனை ஒற்றரால் அறிந்து கொண்ட இராசேந்திர பாண்டியன் திருக்கோயிலையடைந்து, சோமசுந்தரக் கட வுளை வணங்கி, "எம்பெருமானே! முன்னே பாதி ராத்திரியிலே தனித்து வந்து உம்மைத் தரிசனஞ் செய்துகொண்டு போன உமது பத்தனாகிய சோழன், பின்பு தமியேனுக்கு வரிசைகள் விடுத்து நண்பனாயினான். இப் பொழுது தமியேனுக்கு விரோதமாகப் படை எடுத்து வந்திருக்கின்றான். முன்னே அவன் செய்த தருமத்துக்குள்ளாகி அவன் பக்கம் நின்ற நீர், இப்பொழுது அவன் செய்யும் மறத்துக்குள்ளாகி அவன் பக்கம் நின்றருள் வீரோ?" என்று விண்ணப்பஞ் செய்தான். அப் பொழுது சிவபெருமானது திருவருளினாலே, ஆகாயத்தினின்றும், "பாண்டியனே! நீ நாளைக்கு உன் சேனையோடு போய் உன் பகைவர்களை எதிர்த்து யுத்தஞ் செய்யக் கடவாய் வெற்றி உனக்கு கிடைக்கும்படி செய்வோம்" என்று ஓரசரீரி வாக்குத் தோன்றி யது பாண்டியன் அது கேட்டு, மனமகிழ்ந்து, வணங்கி, விடைபெற்றுக்கொண்டு, தன்னிருக் கையை அடைந்தான்.

பாண்டியன், சூரியோதயத்தில் எழுந்து, சந்தியாவந்தனமுஞ் சிவபூசையும் முடித்துக் கொண்டு, தன் சேனையோடு போர்க்களத்தை அடைந்தான். சமுத்திரமீது நதி செல்லுதல் போலச் சோழனது பெருஞ் சேனைமீது பாண்டி யனுடைய சிறு சேனை சென்றெதிர்த்தது. சோழனுடைய சேனைகட்கெல்லாம், பாண்டி யனுடைய சேனைகள், சிவபெருமானுடைய திருவருளினாலே, ஒன்று அநந்தமாகத் தோன் றின. இருவர் சேனைகளும் கலந்து, இடை விடாது, பெரும் போர் செய்தார்கள். உடம்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிழல் அடியில் ஒதுங்க உச்சியிலே சூரியன் வந்தபொழுது, வெய்யின் மிகுதியால் இருவர் சேனைகளுந், தண்ணீர்த் தாகங்கொண்டு, குடிக்கத் தண்ணீரும் ஒதுங்க நிழலுமின்றி, மிக வருத்தமடைந்தன. அப்பொழுது சோம சுந்தரக் கடவுள், பாண்டியன் சேனை நடுவே ஒரு தண்ணீர்ப் பந்தலைப் பரப்பி, அதன் கீழே, திரிபுண்டரந்தரித்த நெற்றியுந் திருவடி யிலே தரித்த ஒற்றைக் கிங்கிணியோசையும் புலித்தோலுடையுந் திருப்புன்முறுவலுந் திரு வருட் பார்வையுமுடைய ஒரு தவவேடங் கொண்டு, எழுந்தருளியிருந்து, ஒரு கெண்டி யைத் தாங்கி, ஒருவருக்கு ஒன்றேயாய் இலட் சம் பேருக்கு இலட்சமாய் உள்ள துவாரத் தினாலே, தண்ணீர் வார்த்துத், தாகத்தைத் தணித்தருளினார்.

பாண்டியனுடைய சேனைவீரர்கள், சிவபெருமானது தண்ணீர்ப் பந்தரினுள்ளே புகுந்து, தண்ணீர் குடித்து, இளைப்பு நீங்கி, வலிமை பெற்றுச், சோழனுடைய சேனை வீரரோடு பொருதி, வென்றார்கள். சில வீரர்கள் சோழனையும் அவனுடைய மருமகனையும் பிடித்துப் பாண்டியன் முன்னே கொண்டுவந்து விடுத்தார்கள். பாண்டியன் அவ்விருவரையுஞ் சோமசுந்தரக் கடவுளுடைய சந்நிதியிலே கொண்டுபோய் விடுத்து, "எம்பெருமானே! உமது திருவுளம் யாது?" என்றான். அப் பொழுது ஆகாயத்தினின்றும், "பாண்டியனே! நீ தருமமுடையை. உன் கருத்துக்கிசைந்தபடி செய்" என்று ஓரசரீரி வாக்குத் தோன்றிற்று. பாண்டியன் அது கேட்டுச், சோழனைச் சில யானைகளும் குதிரைகளும் ஆபரணங்களும் பிறவுங் கொடுத்து, அனுப்பிவிட்டான். பின்பு, தன் தம்பியாகிய இராசசிங்கனுடைய செருக் கடங்கும் வண்ணம், அவன் அநுபவிக்கச் செல்வங்களுள்ளே சிலவற்றை மாற்றி, அவனை வேறாக ஒதுக்கி வைத்துவிட்டு, எல்லாவுயிர்களையுந் தாய்போலப் பாது காத்துக் கொண்டு, வாழ்ந்திருந்தான்.

(முப்பத்தாறாவது)

## இரசவாதஞ் செய்த படலம்

பாண்டிநாட்டிலே திருப்பூவணமெனப் பெயர் கொண்ட ஒரு சிவதலமுண்டு. அதிலுள்ள இயங்கியற் பொருள் நிலையியற் பொருளெல்லாஞ் சிவலிங்க வடிவம். இந்திரன் சூரியன் முதலிய தேவர்கள் பலர், அங்கே சிவபூசை செய்து, வேண்டிய வரங்களைப் பெற்றார்கள். அந்தத் தலத்தினுள்ள திருக் கோயிலிலே பணி செய்யும் உருத்திர கணிகையர்களுள்ளே பொன்னனையாள் என்பவள் ஒருத்தியிருந்தாள். அவள் ஆடல் பாடல்களினாலும் அழகினாலுந் தெய்வப் பெண்களுக்குச் சமமானவள். தருமநூல் வழியொழுகும் நல்லொழுக்கத்தினாலோ அவர்களுக்கு மேலானவள். அவள், நாடோ றுந் தன் பரிவாரத்தோடு சூரியோதயத்துக்கு முன் எழுந்து, ஸ்நானஞ் செய்து, சிவபூசை முடித்துத், திருக்கோயிலை அடைந்து சிவலிங் கப் பெருமானைச் சேவித்துச், சுத்த நிருத்த மாடி, மீண்டு வந்து சிவனடியார்களைச் சிவ னெனப் பாவித்துப் பூசைசெய்து, திருவமுது செய்வித்து அவர்கள் புசித்து எஞ்சியதையே புசிப்பவள். அது அவளுடைய நியமம்.

பொன்னனையாள் இப்படியொழுகும் நாளிலே, அவளுடைய அன்பை உலகத் தாருக்கு அறிவிக்கும் பொருட்டுச் சிவபெரு மான், தமது திருவுரு வார்ப்பிக்கும் ஆசையை அவளுக்குக் கொடுத்தருளினார். அன்புரு வாகிய பொன்னனையாள், சிவபெருமானுடைய

*ஒரு புத்திசாலி வாய்ப்பை அதிஷ்டமாக மாற்றுகின்றான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவுருவைக் கருவினாற் செய்வித்தும், தினந் தோறும் வரும் பொருளெல்லாம் மாகேசுர பூசைக்கன்றி எஞ்சாமையினாலே; திருவுரு வார்ப்பிப்பது எப்படி என்று வருத்தமுற்றாள்.

சிவபெருமான் விபூதியணிந்த திரு மேனியும், செம்பவளச் சடையும், கௌபீன உடையும், கட்டுவாங்கம் பிடித்த திருக்கரமும், யோகபட்டமும், விபூதிப் பையுமுடைய ஒரு சித்தவேடம் பூண்டு, பொன்னனையாளுடைய வீட்டுக்கு அமுது செய்யும் அடியார்களோடு கூடிவந்து, உள்ளே புகாது, புறக்கடையில் ஒரு பக்கத்து எழுந்தருளியிருந்தார். சிவனடி யார்களெல்லாருந் திருவமுது செய்து கொண்டு போனபின், வேறிருந்த சித்தரைப் பொன்னனையாளுடைய அடிச்சியர்கள் கண்டு, "ஐயரே! திருவமுது செய்ய உள்ளே எழுந் தருளும்" என்றார்கள். அதற்கு அவர், "உங் கள் தலைவியை இங்கே அழையுங்கள்" என்றார். அவர்கள் உள்ளே போய் அதனைப் பொன்னனையாளுக்குத் தெரிவிக்க, அவள் போய்ச் சித்தரைப் பூசை செய்து வணங்கி, "எம்பெருமானே! நீர் இங்கெழுந்தருளுதற்குத் தமியேன் யாது தவம் செய்தேன். உள்ளே எழுந்தருளுக. தமியேன் உய்யும் பொருட்டு நீர் பணித்தருளும் பணிகளைத் திருவுளத்திற் கிசையச் செய்வேன்" என்று விண்ணப்பஞ் செய்தாள்.

சித்தசுவாமி உண்ணகை செய்து, பொன்னனையாள்மீது திருநோக்கம் வைத்து, "நீ பேரழகுடையை; சற்றே இளைத்திருக்கின் றாய்" என்றார். அதற்குப் பொன்னனையாள் "எம்பெருமானே! அடியேனுக்கு வேறொரு குறையுமில்லை. சிவபெருமானுடைய திருவுரு வார்ப்பிக்க ஆசைகொண்டு கருச் செய்வித் தேன். திருவுரு வார்ப்பித்தற்குப் பொருள் இல்லை. நாடோறும் தமியேன் கையில் வரும் பொருளெல்லாம் மாகேசுர பூசைக்கே செல் கின்றன. சிறிதும் எஞ்சுகின்றதில்லை" என்றாள்.

சித்தசுவாமி அவ்வின் சொல்லாகிய தேனைத் தமது திருச்செவியாய் மடுத்து, "பெண்ணே! சரீரமும் இளமையுஞ் செல்வமும் நீர்க்குமிழி போலச் சிறிதும் நிலையில்லாதவை என்று கண்டாய். தருமமொன்றே நிலையுடைய தென்று துணிந்தாய். தருமத்துள்ளுஞ் சிவ தருமமே விசேடம் என்றும், சிவதருமத்துள் ளுஞ் சிவபூசையே விசேடம் என்றும், சிவ பூசையுள்ளும் மாகேசுர பூசையே விசேடம் என்றுந் தெளிந்து, மாகேசுரபூசை செய் கின்றாய் ஆதலினாலே, நீ இருமைக்கும் உறுதியைப் பெற்றுக்கொண்டாய். நீ உன் கருத்தின்படி திருவுருவப் பொன்னினாலே வார்ப்பிப்பாய்; உன் வீட்டிலுள்ள பித்தளைப் பாத்திரம் ஈயப்பாத்திரம் முதலியவை எல்லா வற்றையும் இங்கே கொண்டு வா" என்றார். உடனே பொன்னனையாள், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம், பித்தளை, வெண்கலந்தரா முதலிய உலோகங்களெல்லாவற்றையுங் கொண்டுவந்து, சித்தசுவாமி முன் வைத்தாள். சித்தசுவாமி அவைகளின்மீதே விபூதியைச் சிதறி, "நீ இன்றிரவு இவைகளை அக்கினியில் இட்டெடுக்கின், இவைகள் பொன்னாகிவிடும். அதுகொண்டு சிவபெருமானுடைய திருவுரு வார்ப்பிக்கக் கடவாய்" என்றார். பொன்னனை யாள், "எம்பெருமானே! நீர் இன்றைக்கு இங் கிருந்து, இரவிலே திருவமுது செய்து கொண்டு, இக்காரியத்தையும் முடித்துவிட்டு, விடியுமுன் போம்" என்றாள். சித்தசுவாமி, "நாம் மதுரையிற் சித்தர்" என்று சொல்லி மறைந்தருளினார்.

பொன்னனையாள், சித்தராய் வந்தவர் சோமசுந்தரக் கடவுளே என்று தெளிந்து, மறைந்து போயினார் என்று சிறிது துக்கமும், தன் கவலையை நீக்கினார் என்று பெரு மகிழ்ச்சியும் அடைந்து, அவ்வுலோகங்கள்

*கனிவான முகத்துடன் கொடுக்கப்படும் பரிசு என்பது இரட்டிப்பு அன்பளிப்பாகும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாவற்றையும் அவர் அருளிச் செய்த படியே அக்கினியில் இட்டெடுத்துப், பொன் னானமை கண்டு, அதுகொண்டு சிவபெரு மானுடைய திருவுரு வார்ப்பித்தாள். அத் திருவுருவினது பேரழகைப் பார்த்து,"அழகிய பிரானோ" என்று சொல்லி, அள்ளி முத்தங் கொண்டு அதனைப் பிரதிட்டை செய்வித்து, அதற்கு இரதோற்சவம் முதலியவை நடத்து வித்துச், சிலநாள் சென்றபின் முத்தியை அடைந்தாள். அத் திருவுருவம், தன் கபோலத் திலே பொன்னனையாள் இட்ட கை நகக் குறியையும் ஏமநாதர் என்னும் காரணக் குறி யையுங் கொண்டு, கலியுகத்திலே பொன்னுரு வேறாகி, அந்த யுகத்தாருக்குத்தக்க உரு வாகி, எழுந்தருளியிருக்கும்.

## எல்லாம் நன்மையே

துன்பத்தை மாத்திரம் நினைத்துக்கொண்டிருந்தால் இது தொல்லையாகவே இருந்திருக்கும். அது மாத்திரம் அன்று; ஒவ்வொரு நிகழ்ச்சியும் நடக்கிறபோது காலத்தாலும், இடத்தாலும் எல்லாம் வல்ல இறைநிலையானது ஒவ்வொரு மனிதனுக்கும் கொடுக்கக் கூடிய அறிவுரை, அனுபவ உரை, அனுபவ ஞானம் அப்படித்தான் எடுத்துக்கொள்ள வேண்டும். அப்படி எடுத்துக்கொண்டோமானால் எந்தத் துன்பத்துக்கும் காரணத்தைக் கண்டுபிடிக்கிறபோது இதிலிருந்து விளையக்கூடிய நன்மையெல்லாம் விளங்கிவிடும். உண்மையில் எல்லாம் நன்மையாகத்தான் ஏற்படும்.

அப்படிப் பார்க்கின்றபோது துன்பம் வருகிறது என்று கவலைப்படுகிறோமே, துன்பம் வரக்கூடாது என்று எண்ணுவதால்தான் அந்தக் கவலை. துன்பம் என்றால் மனதுக்கு ஒவ்வாதது அல்லது உடலில் நோய், இது இரண்டும் என்று வைத்துக் கொள்ளுங்கள். இது எங்கே போகும்? மனிதனிடம் தானே வரும். என்னிடம் அந்தத் துன்பம் வந்தது என்றால் அதற்கு நான் இடம் கொடுத்துவிட்டேன் என்றுதானே பொருள். இப்போது அந்த இடத்தை நிரப்ப வேண்டும்.

நான் பிறந்தேன். வாழ்ந்துகொண்டிருக்கிறேன். ஒரு நாளைக்கு முடியப்போகிறேன். இதற்கு மத்தியில் எவ்வளவுதான் இருந்தபோதிலும்கூட, சீரணிக்கக்கூடிய அளவிற்கு மேல் சாப்பிடப் போவதில்லை. உடல் தாங்குகிற அளவுக்கு மேல் துணியைப் போடுவதில்லை. நின்றால் கால் அளவு, படுத்தால் உடலளவு. இதற்குமேல் பூமியை அனுபவிக்கக் கூடியவர்களும் இல்லை. வரும்போது கொண்டு வருவதில்லை. போகும் போது கொண்டு போகப் போவதும் இல்லை. இந்த உண்மையை அப்படியே மனதிலே ஏற்றிக்கொள்ளுங்கள். அப்போது நமக்கு எந்தெந்த இடத்திலே என்னென்ன கிடைக்கிறதோ. அது நிறைவாகத்தான் இருக்கும். வாழ்க்கையை ஒட்டிப் பார்த்தீர்களானால், எல்லோருக்கும் நிறைவாகத்தான் இருக்கிறது. இப்படியே உலகம் முழுக்கப் பார்த்தோமானால் எந்த இடத்திலும் யாருக்கும் குறைவே கிடையாது. குறைவு என்பதே இல்லை.

*உயர்ந்த நம்பிக்கைகள் சிறந்த மனிதர்களை உருவாக்குகின்றன.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவாசகரின் இறையன்பு

– திரு பு. கதிரித்தம்பி அவர்கள் –

எமது சைவ சமய நூல்களில், இறைவனை மனிதன் தவிர்ந்த, மிருகம் வேறு சிலந்தி போன்ற ஜீவராசிகள் வழிபட்டு முத்தியடைந்ததைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இறையருள் பெற்ற சிலந்தி ஒன்று சிவலிங்கத்தில் சருகுகள் விழாது காப்பாற்ற வலைகளைப் பின்னித் தினமும் காப்பாற்றி வந்தது. அதே சிவலிங்கத்தை ஒரு யானையும் தினமும் வழிபட்டு, சிலந்தி பின்னிய வலைகளை அகற்றி, நீர் அபிஷேகம் செய்து வந்தது. ஒவ்வொரு நாளும், சிலந்தி வலையை நீக்கி யானை அபிஷேகம் செய்ய, சிலந்தியும் தினமும் வலை களைப் பின்னி சருகுகள் விழாது காப்பாற்றி வந்தது. சிலந்தி பின்னுகிற வலையை யார் நீக்குகிறாரென்பதை அறிய ஒருநாள் சிவலிங்கம் அருகே படுத்திருந்தது. யானை நீருடன் வந்து, வலையை நீக்குவதைக்கண்டு, கோபங்கொண்டு, யானையின் துதிக்கையினுள் புகுந்து கடிக்கத் தொடங்கியது. சிலந்தியும் விடாது கடிக்க, யானை துதிக்கையை அடித்து நொருக்கியது. இதனால் சிலந்தியும் இறந்தது. யானையும் இறந்தது. எம்பெருமான் இரண்டையும் உயிர்பெறச் செய்து தன்னடி சேர்த்துக் கொண்டார். யானை வழிபட்டு முத்தியடைந்த தலமானதால், திருவானைக்கா என்று அத்தலத்துக்கு பெயர் வழங்கப்படுகின்றது.

அவரவர் செய்த வினைகளைக் கொண்டு பல்வகைப்பட்ட உயிரினங்களை இறைவன் படைக்கின்றார். படைத்த உயிரினங்கள் வாழ வழிவகைகளையும் ஆக்கி வைக்கின்றார். செய்த வினையை அனுபவிப்பதற்கே பூமியில் படைக்கின்றார். உயிரினங்களைக் காத்து இறைவன் அருள்புரிகின்றார். இந்த உயிரினங்களில் ஆறறிவு படைத்த மனிதன் வினைப் பயனை ஒழிப்பதற்கு தான தருமங்கள் செய்து தினமும் கோவில் சென்று, வழிபட்டுவர வேண்டும். நன்மை தீமையை அறியாத இறைவன் நல்வழி காட்டுவான்.

நாயினும் கடைப்பட்ட அடியேனை என்று கூறிய மணிவாசகப் பெருமான் இறைவனிடம் தன்னைத் தாழ்த்தி,

"ஆடுகின்றிலை கூத்துடையான்
கழற்கு அன்பிலை என்புருகிப்
பாடுகின்றிலை பதைபப்பதுஞ்
செய்கிலை பணிகிலை பாதமலர்
சூடுகின்றிலை சூட்டுகின்றதுமிலை
துணையிலி பிணநெஞ்சே
தேடுகின்றிலை தெருவுதோறு
அலறிலை செய்வதொன்று அறியேனே"

என மனமுருகிப் பாடுகின்ற நிலையில், தில்லையில் எம்பெருமான் வாசற்படியில் ஒரு ஏடு இருக்கக் கண்டு, தில்லைவாழ் அந்தணர்கள் ஏட்டை பார்வையிட்டபோது இதன் பொருளை மணிவாசகர் அறிவார் என எழுதியிருந்தது. உடனே தில்லை வாழ் அந்தணர்கள் மணிவாசகரை அழைத்து வந்து பொருள் கூறும்படி வேண்டினர். அப்பொழுது மணிவாசகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பொருள், இதுவே என எம்பெருமானைச் சுட்டிக்காட்டி, தில்லைக் கருவறையில் புகுந்து இறைவனுடன் இரண்டறக் கலந்தார். தூல தேகத்துடன் இறைவனோடு கலந்த அதிசயத்தைக் கண்டு அந்தணர்கள் மெய்சிலிரக்க இறைவனைப் பிரார்த்தித்தனர். இவரைப்போல தூலதேகத்துடன் தில்லைக்கு வந்த நந்தனாரை, இறைவன் அந்தணர்களுக்கு கனவிற்கூறிய தெற்கு வாசலில் அந்தணர்கள் தீமூட்டி, மாமுனி வருகின்றானென இறைவன் கூறிய வார்த்தையைக் கேட்டு எதிர்பார்த்து நின்றனர். அப்பொழுது மாமுனி நந்தனார் மெலிந்த உருவமும், நான்கு முழ வேட்டியும், தோளில் உத்தரியமும் தரித்து வந்தவனை அந்தணர் வரவேற்கத் தீயினுடாக நந்தன், தில்லை கருவறையை அடைந்து இறைவனுடன் இரண்டறக் கலந்தார். இக்காட்சிகளைக் கண்டு பிராமணர்கள் கண்ணீர் மல்கினர். தூல தேகத்துடன் தில்லையம்பதியில் முத்தியடைந்த இருவரையும் ஆட்கொண்ட அற்புதத்தை அடியார்கள் போற்றுகின்றனர். மணிவாசகப் பெருந்தகை திருவாசகத்துடன் திருக்கோவையாரையும் பாடியருளினார்.

மணிவாசகப் பெருமான் காட்டிய வழியில் நின்று, இறை வழிபாடு செய்து, பிறவியின் வினையை நீக்கி இறைபதம் அடைவோமாக. "திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்" என்ற முதுமொழியைப் பேணி அவர் பாடல்களை தினமும் ஓதுவோம்.

---

## சிற்பியின் நேர்மை

ஒரு ஊரில் பணக்காரர் ஒருவர் தன் வீட்டில் கடவுள் சிலை வைக்க ஒரு சிற்பியை நாடினார். அவர் சென்ற நேரம் அந்தச் சிற்பி ஒரு பெண் கடவுளின் சிலையைச் செதுக்கிக் கொண்டிருந்தார். அதைப் பணக்காரர் பார்த்துக்கொண்டிருந்தார். அவர் செதுக்கிய சிலைபோல் கீழே ஒரு சிலையும் இருந்தது. இதைப் பணக்காரர் பார்த்து "ஒரே மாதிரியான இரண்டு சிலைகளை கோயிலில் வைப்பார்களா? இல்லை இந்த இரண்டு சிலையும் வெவ்வேறு கோயிலுக்கா?" என்று சிற்பியிடம் வினவினார்.

சிற்பி சிரித்துக்கொண்டே "இல்லை ஐயா கீழே கிடக்கும் சிலை உடைந்து போனது" என்றதும் பணக்காரர் ஆச்சரியப்பட்டார். இருவருக்கும் நடந்த உரையாடல் இது:

"என்ன கூறுகிறீர்கள். இதில் எந்தப் பாகமும் உடையவில்லையே"

"கீழே கிடக்கும் சிலையின் மூக்கில் சின்னக் கீறல் இருக்கிறது. அதைக் கூர்ந்து கவனித்தால் தெரியும்" சிற்பி.

"ஆம்! இந்தச் சிலையை எங்கே வைக்கப் போகிறீர்கள்"

"கோவிலில் 40 அடி உயரத்தில் உள்ள கோபுரத்தில்" சிற்பி.

"40 அடி உயரமா? அவ்வளவு உயரத்தில் உள்ள சிலையின் கீறலை யார் பார்க்கப் போகிறார்கள்"

"சிலையில் உள்ள கீறல் எனக்குத் தெரியுமே..... அந்தக் கோவில் வழியாகப் போகும் போதெல்லாம் எனக்கு என் தொழிலில் உள்ள குறை உறுத்துமே. அதனால்த்தான் நான் இன்னொரு சிலையைச் செதுக்கினேன்" சிற்பி.

இந்த உரையாடல்மூலம் நாம் கற்றுக்கொள்ள வேண்டியது என்னவென்றால் அடுத்தவர்கள் பாராட்டுக்காக வேலை செய்வதைவிட நேர்மையாக மனத் திருப்தியுடன் வேலை செய்து பாராட்டுப் பெறுவதே சிறப்பு என்பதாகும்.

*அன்பு இல்லாதவன் வாழ்வில் புன்னகை இருக்காது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழித்துணை 47

– ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் –

01 பிள்ளைகளைப் பெற்றெடுத்தல் பேணியே வளர்த்திடுதல்
இவையெல்லாம் இல்வாழ்வின் இயல்புகளாய் இருப்பவைதான்
ஆனாலும் இல்வாழ்வின் சிறப்பியல்பு எதுவென்றால் ஒருவர்
எள்ளிநகையாடாமல் பிள்ளைகளை வளர்ப்பதுவாம்.

02 ஆத்திரம் கொண்டிடுதல் அடிதடியை நாடிடுதல்
இவையெல்லாம் வீரமென்ற வகைக்குள்ளே வருபவைதான்
ஆனாலும் வீரத்தில் வீரமிங்கு எதுவென்றால் ஒருவர்
கன்னத்தில் அடித்தால்நீர் மறுகன்னம் கொடுப்பதுவாம்.

03 அடுப்பிலிடுவதை வாயிலிடுவது நெருப்பிலிடுவதை வயிற்றிலிடுவது
இவையெல்லாம் மிடுக்கோடு உற்சாகம் தருபவைதான்
ஆனாலும் மிகமிக உற்சாகம் இங்கெதுவென்றால் ஒருவர்
குடலோடு ஈரலையும் பாதுகாத்து வாழ்வதுவாம்.

04 வாழ்க்கைக்குத் துணைதேடல் துணைக்குப்பின் இணைதேடல்
இவையெல்லாம் இளையோர்கள் கடைப்பிடிக்கும் வழிவகைதான்
ஆனாலும் வாழ்வோர்க்குச் சிறந்தவழி இங்கெதுவென்றால் ஒருவர்
வாழ்க்கைக்கு வழிதேடி வழிக்குப்பின் துணைதேடலாம்.

05 பட்டங்கள் பெற்றிடுதல் பதவிகள் பெற்றிடுதல்
இவையெல்லாம் மாந்தர்க்கு மேலான தகுதிகள்தான்
ஆனாலும் அதைவிடவும் உயர்தகுதி இங்கெதுவென்றால் ஒருவர்
மனம்மகிழ பணிவினோடு மக்கள்பணி செய்திடலாம்.

06 பரதங்கள் ஆடிடுதல் கரகங்கள் ஆடிடுதல்
இவையெல்லாம் கலைகளிலே மிகச்சிறந்த கலைகள்தான்
ஆனாலும் அதைவிடவும் சிறந்தகலை யாதென்றால் ஒருவர்
கரம்பற்றிக் கல்லுமுள்ளுக் கடப்பதற்கு உதவிடலாம்.

*காற்றுக்கு எதிராகவே பட்டங்கள் எழுகின்றன. காற்றுடன் சேர்ந்து எழுவதில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07 பரம்பரை உமக்கிங்கு பலவுண்டு என்றெண்ணி
திரும்பவும் நீர் மானிடராய்ப் பிறந்திடலாம் என்றெண்ணாதீர்
மானிடப் பிறப்பிங்கு எல்லோற்கும் ஓர்முறைதான்
பிறப்பினை மதித்துயர்வீர் இன்றேல்நீர் தாழ்வுறுவீர்.

08 பிறர்சுமக்கும் குறையொன்றைப் பெரிதாகப் பேசுபவர்
தாம்சுமக்கும் குறையெதையும் கிஞ்சித்தும் உணர்வதில்லை
குறையில்லா மாந்தராகக் குவலயத்தில் வாழவேண்டில்
தம்குறையைத் தாமுணர்ந்து நடந்திடலே வழியாம்.

09 உயிர்களுக்கு இறைவன் உணர்வுசக்தி கொடுத்துள்ளான்
மனிதருக்கு இறைவன் அறிவுசக்தி கொடுத்துள்ளான்
அறிவுசக்தி கொண்டொருவர் உணர்வுசக்தி பெறத்தவறின்
உணர்வற்ற மாந்தரிலும் உணர்வுயிர்கள் மேலாம்.

10 வானிலே வட்டமிடும் பருந்தொன்றைக் கண்டகோழி
கொக்கரித்துக் குஞ்சுகளை எச்சரித்துக் காத்தல்போல்
கலியுகத்தின் வாய்ப்பட்டு அழிந்திடாமல் உயிர்களையும்
தக்கநேரம் இறைகாக்கும் நாம்தாயாக அவனை ஏற்றால்.

**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப் பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.**

| காசுக்கட்டளை | காசோலை |
|---|---|
| செ. மோகனதாஸ் | செ. மோகனதாஸ் |
| சந்நிதியான் ஆச்சிரமம், | க.இல – 7342444 |
| தொண்டைமானாறு. | இலங்கை வங்கி, |
| தொ.இல – 0213219599, 0212263406 | பருத்தித்துறை. |

**Swift code - BCEYLKLX 028 - 7342444**

E.mail : suthanm329@gmail.com
: sannithiyan@hotmail.com

*மெதுவாகப் பேசிப் பழகு. அது உன் இரகசியங்களைப் பாதுகாக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடப்பில் நடைபெறும் சித்திரைச் செவ்வாய்

– திரு பா. முருகானந்தம் அவர்கள் –

உடப்பு மக்கள் வாழ்க்கையில் ஐதீக மான மரபு முறைமைகளையும் திருவிழா வழிபாட்டுக்களையும் அப்படியே கடைப் பிடித்து வருகின்றனர். அப்படியானவற்றுள் ஒன்றுதான் சித்திரைச் செவ்வாய் திருநாள். சித்திரை மாதத்தில் வரும் ஒரு செவ்வாய்க் கிழமையில் மாரியம்மனுக்கு பச்சை குடில் அல்லது இரதம் கும்பம் வைத்து பெண்களும் ஆண்களுமாக கும்பக் குடிலை வளைய வளைய வந்து முளைக் கொட்டி பாடி ஆடுவதே சித்திரைச் செவ்வாய் ஆகும். செவ்வாய்க்கிழமைகளில் இத் திருநாளைக் கொண்டாடுவதால் செவ்வாய் என பெயர் வந்தது.

சித்திரை மாதத்தை தமிழர்கள் முதல் மாதமாக கணிப்பதினால் தமது வாழ்க்கைக்கு தேவையான சகல சௌபாக்கியங்களும் செல்வச்சிறப்பும் வேண்டி இத்திருநாளைக் கொண்டாடுகின்றனர்.

ஏழு நாட்களும் ஒவ்வொரு தெய்வத் துக்கும் விருப்பம் என்பதற்கிணங்க செவ் வாய்க்கிழமை மாரிக்கு ஏற்ற நாளாகும். இத னால் மாரியம்மனை நினைத்து சித்திரை செவ்வாய் கொண்டாடப்படுகின்றது. இத் திருவிழாவுக்கு முளை வளர்த்தல் பாலிகை வளர்த்தல் முக்கிய இடத்தை வகிக்கின்றது. பூப்படையாத பெண்களே பெரும்பாலும் பரி சுத்தமானதால் இங்கு பாலிகை வளர்ப்பதற்கு ஏற்ப சிறுமியர் ஒன்று கூடி செவ்வாய்க்கு பத்து தினங்களுக்கு முன் நவதானியங்களான கடலை, பயறு, சோளம், எள்ளு, மொச்சை, உழுந்து, நெல், குரக்கன், சாமை போன்ற வற்றை ஒன்றிணைத்தே இந்த முளை வளர்ப் பார்கள். பாலிகைகள் சட்டியை சுத்தம் செய்து தானியங்களை சுத்தப்படுத்தி பதிய வைக்க ஆயத்தம் செய்தல் முளை தோன் றல் என்றும், மறுநாள் பாலிகை சட்டியை சாணம், புற்று மண், வண்டல் மண்களை நிரப்பி அதனில் முறைப்படி நவதானியங் களை பதிப்பர். இது முளைப்பதித்தல் எனப் படும்.

வளர்ந்த முளையை முதலாம் தொடக்கம் பத்தாம் நாள் உச்சி முடித்து மஞ்சள் பட்டணிந்து மஞ்சளில் மாரியம்மனை பிரதிஷ்டை செய்து முளையை உச்சியில் வைத்து நீராடி ஈர உடையுடன் தலை மேல் வைத்து ஆலயத்துக்கு பயபக்தியுடன் சுமந்து வந்து ஆலயத்தில் வளர்க்கப்பட்ட நாளான முளைப்பாய்ச்சியானது சூழவர மற்றப் பாலிகைகளை வைத்து முளை வளர்த்து பெண்ணடிகள் யாவரும் குழுமி அம்பாளைத் தியானித்து பாடிக்குரல் எழுப்பி குரவை செய்து கை கொட்டி ஆடி வலம் வருவார்கள்.

செவ்வாயில் எருவெடுத்து
சிவந்த சித்திரக் கோலமிட்டு
கோலமிட்டு குரவையிட்டு
குங்குமத்தால் நீராடி
நீராடித் துகிலுடுத்தி
நீல வர்ணப் பொட்டுமிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொட்டுடனே பூமணங்கள்
பூமணங்கள் பள பளக்க
பாய்ந்து அடிங்கடி சித்திரப் பெண்களே
சிவந்த செவ்வாய்க் கிழமையிலே
பங்குனி மாதத்திலே
வார செவ்வாய்க் கிழமையிலே
வெள்ள விளாம்பழமும்
காயோடயும் பூவோடயும்
முட்ட முருங்கக்காய்
முகிழ் அழியாக் கத்தரிக்காய்
கத்தரிக்கா ரெண்டுதுண்டு
கருவாடு மூணுதுண்டு.

எனப் பாடியும் முளை பதித்த பாலிகைகள் நவசக்திகளாகக் கருதப்படுவதுடன் மாரியம்மையின் அம்சமாகவே தோன்றுவார்கள். பாடலாகப் பாடி முளைக் கொட்டுவார்கள்.

ஓரா நாள் முளை எழுந்து
ஓங்கி வளருமாம் மாரிமுளை
ஈராநாள் முளை வளர்ந்து
இரட்டனம் கொட்டுமாம் மாரிமுளை
மூன்றாம் நாள் முளை வளர்ந்து
முத்தம் கொடுக்குமாம் மாரிமுளை
நாலாம் நாள் முளை வளர்ந்து
நையாண்டி கொட்டுமாம் மாரிமுளை
ஐந்தாம் நாள் முளை வளர்ந்து
கொஞ்சி விளையாடுமாம் மாரிமுளை
ஆறாம் நாள் முளை வளர்ந்து
அணைத்து எழுப்புமாம் மாரிமுளை
ஏழாம் நாள் முளை வளர்ந்து
ஏளனம் செய்யுமாம் மாரிமுளை
எட்டாம் நாள் முளை வளர்ந்து
எட்டிப்படருமாம் மாரிமுளை
ஒன்பதாம் நாள் முளை வளர்ந்து
ஒய்யாரம் கொட்டுமாம் மாரிமுளை
பத்தாம் நாள் முளை வளர்ந்து
பற்றிபடருமாம் மாரிமுளை.

கோவில் அல்லாத வீட்டின் தனியான மண்டபத்தில் வைத்து முளைவளர்க்கப்படும் மண்டபம் சுத்தம் செய்யப்பட்டு தூபதீபம் இடப்பட்டு ஆண்களோ, பெண்களோ தூய்மை அற்றவர்கள் யாரும் உட்புகாத முறையில் பாதுகாக்கப்படும். காலையும், மாலையும் பாலிகைக்கு நீராடிய பெண்கள் ஈர உடையுடன் "நீர் கொடுத்தல்" செய்வர். அதனை தூபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இட்டு பிரார்த்திப்பார்கள். ஒன்று விட்டு ஒரு நாள் மாலை வேளை பாலிகைகளை முற்றத்தில் வைத்து சிறிது நேரம் கூடி, பாடி, ஆடி முளைக் கொட்டுவார்கள் இவ்வாறு பத்துத்தினங்களாக தொடரும்.

சிந்தாமல் சிதறாமல் வளர்த்தேனம்மா முளைய
தீர்த்தம் ஆற்றம் கரைதனிலே போராயம்மா முளைய
வாடாமல் வதங்காமல் வளர்த்தேனம்மா முளைய
வைகையாற்றங் கரைத்தனிலே போராயம்மா முளைய.

ஒன்பதாம் நாள் செவ்வாய்க்கிழமை வீட்டு முற்றத்தில் வாழை மரங்களும் மகர தோரணங்களால் அலங்கரிக்கப்படும் அம்மனை கும்பமாக பிரதிஷ்டை செய்வதற்கு அழகான இரதம் ஒன்றை ஆசனமாக வைப்பர். மாலையானதும் மத்தள, தாள மங்கள ஒலியுடன், விக்னேஸ்வர பூசையுடன் வேப்பிலையால் அம்பிகையை கும்பம் வைப்பர். குத்துவிளக்கேற்றி நவதானிய நாயகியாக மாரியம்மை கும்பத்தில் வைப்பர். நவசக்திகளாக துணைச்சக்தியில் பாலிகைகள் வைக்கப்படும். கும்ப அம்பாளின் நான்கு மூலைகளிலும் பாலிகை சக்தி காவல் இருப்பார். தென்னம் பாளையை விரித்து பொற்குடத்தில் நிறுத்தி உயரமான உரலில் வைப்பர். உரலின் பார்கால் என்றும், அதில் அமர்ந்த அமுதமே பொற்கலம் என்றும், அதனில் வளர்ந்த தென்னம்பாளை தனதானிய இலெட்சுமி என்றும் கருதுவர்.

வேதான வேதக்காரியோ தொண்டியம்மா
வேத முக்காடு போட்டு வாராளோ மாரித்தாயே
முக்காலின் மேலிருப்பாளோ தொண்டியம்மா
மூன்று பொறியால் முத்தளப்பாளோ மாரித்தாயே
நாற்காலின் மேலிருப்பாளோ தொண்டியம்மா
நாலு பொறியின் முத்தளப்பாளோ மாரித்தாயே
சேறாலே முத்தளப்பாளோ தொண்டியம்மா
தேசமெல்லாம் சுற்றிவருவாளோ மாரித்தாயே
பட்டுக்குடைகள் பிடித்து வருவாளோ தொண்டியம்மா
பட்டினமெல்லாம் சுற்றி வருவாளோ மாரித்தாயே
முத்துக் கொடைகள் பிடித்து வருவாளோ தொண்டியம்மா.

பிள்ளையாருக்கு அம்பாளின் தென் கிழக்கில் தனியான இடத்தில் பலவகையில் சாணத்தாலும் எருக்கிலையில் குண்டுமணியாலும் உருவம் அமைப்பர். செங்கல பிள்ளையார் என்ற இந்தப் பெயர் “செங்கப்பிட்டியார்” என்று மறு பெயரில் வழக்கமாகச் சொல்வர். இதற்கு உணவுகள் கனிவர்க்கங்கள் படைப்பர். இரவு முழுவதும் பால்யப் பெண்கள், ஆண்கள் வேறுபாடின்றி அம்பிகையை வலம் வந்து பாடி முளைக் கொட்டுவர். பக்தியுடன் பாடிக் கொட்டும் இவ்வைபவத்தில் அம்பாள் கும்பத்தில் வருவதாக ஐதீகம்.

முந்தி முந்தி விநாயகரே
முக்கண்ணார் தன் மகனே
கந்தருக்கு முன்பிறந்த
கற்பகமே முன்னடவாய்

*தோல்வியைக் கண்டு அழுபவனுக்கு வெற்றி என்றும் சொந்தமில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலவர்க்கு முன் பிறந்த
விநாயகரே முன் நடவாய்
செல்வக் கணபதியுன்
சீர் பாதம் மறவேன்
மாரியம்மன் தன் கதையை
மானமுகர்ந்து நான் பாட
கும்பமதில் குடியிருந்து
மாரியம்மா அருள் புரிவாய்.

மனதில் உணர்வுடன் பாடி மலர்ந்தும் காலையில் பல்வேறு நேர்த்திக்கானவர்கள் அம்பாளின் முன் படையலை வைப்பர். பின்னர் இறுதியான முளைக்கொட்டு தொடரும். அது முற்றுப் பெற்று அதற்கு பூசையாகி படைப்பில் பதிக்கப்பட்டு கும்பத்தை ஒரு பாலிகைப் பெண் பக்குவமாகச் சுமந்து செல்வாள். பாலிகைகளையும் பாலிகைப் பெண்கள் சுமப்பர். பிள்ளைவரம் வேண்டுபவர்களும், கால், கை, முடம் நீங்க வேண்டுபவர்களும் இக்கும்பம் சுமந்து கடலில் சொரிவதை நேர்த்தியாகக் கொள்வர். கும்பமும், பாலிகையும் மத்தள தாள பாடலுடன் ஊர்வலம் சென்று கடலோரம் வீட்டிருந்து காக்கும் வீர பத்திர காளியம்மன் கோவில் முன்வைத்து கொட்டப்பட்டு இறுதியாக கடலோரத்திற்கு எடுத்துச் சென்று கொட்டப்படும். இங்கு ஐதீகமான பல பாடல்கள் கட்டாயமாக பாடப்படும்.

கூடையைப் பிடித்திழுத்தீர் கூவு கூவு வடியம்மை
கொள்ளப் போரும் என்கணவர் கூவு கூவு வடியம்மை
தாடையிலே சாம்பல் வாரி கூவு கூவு வடியம்மே
தலை மயிரைப் பிடித்திழுத்தீர் கூவு கூவு வடியம்மே

என்று பாடி கும்பமும் பாலிகையும் சுமந்து கடலில் சொரிந்து நீராடுவர். சகல செல்வமும் பெருகி, பஞ்சம், பசி, பிணி, இன்றி நல்வாழ்வு பெற வேண்டி இத்திருவிழா கொண்டாடப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

**எல்லோர்க்கும் நல் அருளைத் தருகின்ற வேல்**

எல்லோர்க்கும் நல் அருளைத் தருகின்ற வேல்
எவர் வந்து தொழுதாலும் கை கொடுக்கும் வேல்
இல்லா தார் வாழ்வினிலும் இருள் தொலைக்கும் வேல்
ஈசன் மகன் கைகளில் இருந் தருளும் வேல்
எல்லாமே தானாகி நின்றருளும் தனி வேல்
இணையில்லாது எவர்க்கும் அருள் சுரக்கும் வேல்
கல்லாதார் பக்தி கொண்டாலும் கருணை காட்டும் வேல்
கந்தப்பர் கையில் உள்ள செல்வச்சந்நிதி வேல்.

*~சின்னப்பு தனபாலசிங்கம்~*

*இலக்கு இல்லாத மனிதன் சுக்கான் இல்லாத கப்பலைப் போன்றவன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி...)

| | | |
|---|---|---|
| சிவா நறுமணப்பூங்கா | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| க. தயாபரன் | கொழும்பு | 3மூடை அரிசி |
| K.V. துரைசாமி நினைவாக | மயிலிட்டி | 1000. 00 |
| ஸ்ரீ சிவராம் ரேடேர்ஸ் | யாழ்ப்பாணம் | 1புட்டி பருப்பு |
| சி. பகீரதன் | கனடா | 5000. 00 |
| கா. விஜயசுரேஸ் | சுவிஸ் | 20000. 00 |
| இ. சிவராஜா | கரவெட்டி (கல்விப்பணி - மாதாந்தம்) | 15000. 00 |
| கௌ. மீரா, ஸ்ரீ. வாணி, லோ. உமா, ஸ்ரீ. சரண்யா | தெகிவளை | மரக்கறி 1மூடை அரிசி |
| ஆ. பிரசாத் | மட்டக்களப்பு | 10000. 00 |
| சி. பிரகாஸ் | அளவெட்டி | 1000. 00 |
| S. மகேந்திரராஜா | வவுனியா | 25000. 00 |
| தி. குமாரசாமி | இணுவில் | 60k அரிசி |
| S. கோபிநாத் | இணுவில் | 5000. 00 |
| பா. தேஜஸ்வின் | மானிப்பாய் | 2000. 00 |
| S. ரஞ்சன் | உரும்பராய் | 100 டொலர் |
| பொ. அம்பலவாணர் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| ஜெகதீசன் தனுஷா | கொழும்பு | 2000. 00 |
| கந்தநாதன் நினைவாக ராமச்சந்திரன் மூலம் | ஊரெழு | 10000. 00 |
| வை. புவனச்சந்திரன் | வல்வெட்டித்துறை | 10000. 00 |
| திரு செல்லமுத்து குடும்பம் | அச்சுவேலி | 5000. 00 |
| திரு சின்னத்துரை குடும்பம் | அச்சுவேலி | 500. 00 |
| சி. சிவசுப்பிரமணியம் | சிறுப்பிட்டி | 1மூடை அரிசி 1000. 00 |
| மு. யோகராஜா | U.K | 1000. 00 |
| சின்னப்பு ரவீந்திரன் | அவுஸ்திரேலியா | 10000. 00 |
| தாமோதரம்பிள்ளை கண்ணன் | கரணவாய் | 10000. 00 |
| காசிப்பிள்ளை ரூபமூர்த்தி | அவுஸ்திரேலியா | 100 டொலர் |
| S. குணரெட்ணம் | மானிப்பாய் | 10kg அரிசி 1000. 00 |
| S.K. சண்முகசுந்தரம் | மொறட்டுவ | 1000. 00 |
| திரு சிவஞானம் | பிரான்ஸ் | 40100. 48 |
| நடராஜா சின்னம்மா நினைவாக | கொழும்பு | 2000. 00 |
| மனோரஞ்சன் தர்மினி | கொழும்பு | 2500. 00 |

*சிறந்த சொல்லைவிட சிறந்த செயலே மேன்மையானது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| சி. முருகதாஸ் | நீர்வேலி | 500. 00 |
| திரு குகனேந்திரன் குடும்பம் | அச்சுவேலி | 2000. 00 |
| க. தருணி | இணுவில் | 2000. 00 |
| அ. புஸ்பவதி | இணுவில் 1புட்டி அரிசி | 1400. 00 |
| திரு சோதீஸ்வரன் குடும்பம் | துன்னாலை | 5000. 00 |
| S. சேந்தன் | இடைக்காடு | 1000. 00 |
| S. சேயோன் | இடைக்காடு | 1000. 00 |
| வெளிக்கள நிலையம் | தொண்டைமானாறு | 25000. 00 |
| ராசையா இரத்தினம்மா நினைவாக | நாச்சிமார் கோவிலடி | 5000. 00 |
| பெ. பாலமுரளி | அல்வாய் | 10000. 00 |
| பு. பிரசாந்தன் | காரைநகர் | 2000. 00 |
| திரு யோகரட்ணம் குடும்பம் | | 5000. 00 |
| செ. விதுரன் | பருத்தித்துறை | 10000. 00 |
| பா. பாலேந்திரன் | பருத்தித்துறை | 5000. 00 |
| க. நிர்மலகஜன் | சண்டிலிப்பாய் | 1000. 00 |
| சி. சிவனிகா | பருத்தித்துறை | 1000. 00 |
| S. சத்தியநாதன் | லண்டன் | 6000. 00 |
| பொ. லிங்கநாதம் | சுழிபுரம் மரக்கறி 1புட்டி அரிசி | |
| பே. தயாளன் | வல்வெட்டி | 1000. 00 |
| இ. தர்மசிங்கம் | ஆவரங்கால் | 1000. 00 |
| திரு ஜெயபரன் குடும்பம் | மானிப்பாய் | 5000. 00 |
| திரு குமாரலிங்கம் குடும்பம் | இணுவில் | 5000. 00 |
| சரஸ்வதி முன்பள்ளி | அராலி | 500. 00 |
| சுருதி அருள்மணி | கனடா | 2000. 00 |
| சந்திரசேகரன் மூலம் தில்லைநாயகி நினைவாக | ஏழாலை | 1000. 00 |
| த. தனுஷன் | வசாவிளான் (பரிஸ்) | 3000. 00 |
| திரு குமாரசாமி குடும்பம் | அச்சுவேலி | 5000. 00 |
| திரு மணிவண்ணன் குடும்பம் (குமாரசாமி குடும்பம்) | அச்சுவேலி | 5000. 00 |
| கார்த்திகைபாலன் கீர்த்திகா | உரும்பராய் 1புட்டி அரிசி | 6000. 00 |
| திரு ஜயாத்துரை குடும்பம் | கொக்குவில் | 1000. 00 |
| திரு தனுஷன் குடும்பம் | கொக்குவில் | 1000. 00 |
| திரு ஜெயப்பிரியன் குடும்பம் | கொக்குவில் | 500. 00 |
| த. சுதர்ஷன் | ஊரிக்காடு | 1000. 00 |
| வை. வாமதேவன் | வல்வெட்டி | 1000. 00 |
| இ. திருக்குமரன் | மானிப்பாய் | 1000. 00 |
| வே. முருகேசு சுவாமிகளின் அடியார்கள் | கிளிநொச்சி | 20000. 00 |

(தொடரும்...

*விடாமுயற்சி என்பது அதிஷ்டத்தின் தாயைப் போன்றது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துமத அழிப்பும் ஒழிப்பும்

– செல்வி ச. சரணியா அவர்கள் –

நாயன்மார்களின் மனக்கண்ணால் தரிசித்ததோடு மாந்தர்களின் பாதம்பட்ட சிவ பூமி என்ற சிறப்புடைய எமது நாடான இலங்கையில் இந்துமதம் பாரம்பரிய வரலாற்றைக் கொண்டு திகழ்கின்றது. ஆனால் இன்றைய காலகட்டத்தைப் பொறுத்தவரையில் இந்து மத பாரம்பரியம், சிறப்பு, மகிமைகள், வரலாறுகள் அழிந்துகொண்டு வருவது நம் கண்முன்னே இடம்பெற்று வருகின்றன. இத்தகைய அழிப்புக்களுக்கு அறிந்தோ அறியாமலோ நாமும் காரணமாக இருக்கின்றோம். இனியேனும் உயிரினும் மேலான எம் புனித மதம் சார்ந்த செயற்பாடுகள், மத எச்சங்கள், வரலாற்று ஆவணங்கள் என்பவற்றை பாதுகாத்து எம் பூர்வீகத்தை நிலைநாட்டுவோம். அந்தவகையில் நாம் இழந்த; இழந்து கொண்டிருக்கும் சில பாரம்பரியங்களின் தொகுப்பை நோக்குவோம்.

## குருந்தூர் மலை:

இலங்கை வடக்கே முல்லைத்தீவு பிரதேசத்தின் தண்ணிமுறிப்பு குளத்திலிருந்து 3கிலோமீற்றர் தூரத்தில் இம்மலை அமைந்துள்ளது. இது பல தொல்லியல் சான்றுகளுக்கு உரித்தானது. இம்மலை கணுக்கேணியை தலைநகரமாகக் கொண்டு கணுமன்ன அந்தப்புரம் என்று இங்குள்ள எச்சங்களின் வழி ஆதாரப்படுத்தப்பட்டது. இம்மலை 150 அடி உயரமுடையது. இம்மலையை இலங்கையில் ஆதிக் குடிகளான நாகர்களின் வாழிடமாகவும் வழிபாட்டிடமாகவும் திகழ்ந்துள்ளன. அதுமட்டுமல்லாமல் பண்டைய கால ஆதி சிவன் ஆலய அமைவிடம் குருந்தூர்மலை என்பது அங்கு கிடைக்கப் பெற்ற சிவலிங்கங்கள் மூலம் சான்றாகின்றன.

இவ்வாறு பல சான்றெச்சங்கள் அங்கு குவிந்துள்ளன. இத்தகைய சான்றுகளை மறைத்து ஒழிக்கும் செயற்பாட்டில் 04.09.2018 இல் ஏற்பட்ட குழப்ப நிலையில் விசாரணைகள் இடம்பெற்று இம்மலை சட்டபூர்வமாக இந்துமத சுற்றுலா மையமாகப் பிரகடனப் படுத்தப்பட்டது. இதன் பின்னர் 2021.03.01 அன்று எந்தவித ஆரவாரமும் இன்றி புத்தர் சிலை ஒன்று வைத்து வழிபாடுகள் இடம் பெற்றன.

## உருத்திரபுரம் சிவன் கோயில்:

இக்கோயில் இலங்கையின் கிளிநொச்சி மாவட்டத்தில் உருத்திரபுரம் என்ற ஊரில் அமைந்துள்ளது. இதனை உருத்திர புரீஸ்வர ஆலயம் என்றும் அழைப்பர். ஆரம்ப காலங்களில் காடால் சூழ்ந்து மறைந்திருந்த இக்கோயில் 1950களில் இடிபாடு ஒன்றில் தென்பட்டது. இத்தகைய புராதனம் கொண்ட இவ்வாலயமும் அகழ்வாராட்சி (31.01.2021) என்ற பெயரில் விகாரை ஒன்று அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. ஆனால் மக்களின் போராட்டத்தால் அந் நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டது. இன்று நிறுத்தப்பட்ட இச்செயற்பாடு எப்போதாவது வேண்டுமானாலும் மீண்டும் ஆரம்பிக்கலாம். ஆகவே எம் பாரம்பரியங்களை மற்றும் வரலாற்றுக்களை பாதுகாக்க நாமே முழுமுயற்சி எடுக்க வேண்டும் என்பதனை மறவோம்.

*நமக்கு எது வசதி என்பதில் எது சரி என்பதை மறந்து விடுகிறோம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுமட்டுமல்ல நாம் அறியப்படாத நமது வரலாறுகள், சான்றுகள், தொல் ஆதாரங்கள் போன்றன பல மறைமுகமாக அழிக்கப்பட்டுள்ளன; அழிந்துகொண்டிருக் கின்றன. மேற்காட்டியவற்றை போன்று மேலும் பல ஆதாரங்கள் மறைக்கப்பட்டன. அவை யாவன:

முல்லைத்தீவு மாவட்டத்தில் செம் மலை, நீராவியடிப் பிள்ளையார் ஆலயம் ஆக்கிரமிக்கப்பட்டு விகாரை அமைக்கப்பட்டது. நெடுங்கேணி வெடுக்குநாரி மலையில் உள்ள சிவாலயத்தில் தமிழர்களின் வழிபாட்டு உரிமை மறுக்கப்பட்டது. மேலும் திருகோண மலையில் திரியாய், கன்னியா போன்ற பகுதி களிலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் புளாளை யிலும் இந்துமத அழிப்பு ஒழிப்புக்கு உள்வாங் கப்பட்டன. நாம் அறியாமல் எத்தகைய ஆதாரங்கள் மறைக்கப்பட்டதோ? யாம் அறி யோம் பராபரனே.

இவ்வண்ணம் இந்துமத எச்சங்கள் பாதுகாக்கப்படவேண்டிய ஆதாரங்கள் எமது ஆணிவேர்கள் அடியோடு அழிக்கப்படுவதும் ஒழிக்கப்படுவதும் நாம் அறியாமல் இல்லை. இருந்தும் ஏனோ மௌனம் சாதிக்கின்றோம். ஒன்று சேர்ந்து ஒரு குலமாய் உருமாறி எமது உரிமைகள் உடமைகளை கேட்டு போராடும் வரை எமது இந்து மதத்தின் இனிமைகளை இழந்துகொண்டுதான் இருப்போம். ஆகவே இந்துமத வரலாறுகள் வெறுமனே பாட்டி சொல்லும் கதையாய் நிலைத்துவிடாமல் அதன் ஆதாரங்களை உண்மை உருவங் களை எம் சந்ததியும் தொட்டுணர பேணிப் பாதுகாக்க வேண்டியது எம்மவர் கடமை ஆகும்.

இந்துமத வரலாறுகளை ஆலம் விதையாய்
புதைக்க எண்ணும் அனைவர் முன்னும்
விருட்சமாய் விழுதுகள் இட்டு
வேரூன்றுவோம்.

---

நாம் வைரம் விலைகூடியதென நினைக்கிறோம். வைரத்துக்கு மதிப்பைக் கொடுப்பது யார்? மனிதன்! நாம் தங்கத்துக்கு விலையதிகம் என்று கூறுகிறோம். அதற்கு மதிப்புக் கொடுப்பது யார்? மனிதன்! பங்களாவுக்கும் நிலத்துக்கும் மதிப்புள்ளது. அவற்றுக்கு மதிப்பு கொடுப்பது யார்? மனிதன். ஆகவே மனிதனின் மதிப்புத்தான் மிக மிக அதிகம்.

சமுதாயத்தின் நெறிமுறைப்படி யார் நல்லவர்? எவரிடம் மூன்று குணங்களும் உள்ளனவோ அவர் நல்லவர். அந்தக் குணங்கள் யாவை? தெய்வ ப்ரீதி, பாப பீதி, சங்க நீதி (இறையன்பு, தீவினை அச்சம், சமுதாய ஒழுக்கம்) இம்மூன்று குணங்களும் ஒரு மனிதனை உன்னதமான இடத்திற்கு உயர்த்தும்.

தெய்வீக அன்பினால் உங்கள் இதயத்தை நிரப்பிக்கொண்டு ஆனந்தத்தை அனுபவியுங்கள். நீங்கள் புனித நூல்களைப் படிப்பதால் ஆனந்தத்தைப் பெறமுடியாது. வேறெவரும் உங்களுக்கு அதைச் சொல்லித்தர முடியாது. அது தனக்குள்ளிருந்து வரவேண்டும்.

*அனுபவம், அறிவு மற்றும் ஆர்வம் ஆகிய ஒன்றுபட்ட சக்திகளின் செயற்பாடே திறமை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனுநீதி, அரசநீதி, தெய்வநீதி வழுவா சான்றோர்கள் வரிசையில்

## அரசநீதி தவறிய பாண்டிய மன்னனும் கண்ணகியும்

– திரு மூ. சிவலிங்கம் அவர்கள் –

தொன்மையான காவிரிப் பூம்பட்டினம் சிறந்த வணிக நகரமாகும். இப் புனித பூமியில் கோவலன் என்னும் வணிகன் நிதி வளத்தால் உயர்ந்து இசைக்கலையிலும் ஆர்வம் மிகுந்தவனாக விளங்கினான். இவனின் தர்ம பத்தினி கண்ணகி என்பவள் கற்பினில் சிறந்த மாதரசி. கோவலன் தனது நிதி நிலைமையுடன் கலை ஆர்வமும் உந்திட கணிகையர் குலத்துதித்த ஆடலரசி மாதவிமீது மையல் கொண்டு அவளை அடையவெண்ணினான். மாதவி தனது ஆடற்திறமையால் தம்மை நாடி எவர் வந்தாலும் தமது தோழியிடம் ஆயிரம் பொற்காசுகளைக் கொடுத்து அவளிடமிருந்து மாலையை வாங்கி வருவோரை அனுமதிக்கும்படி தெரிவித்தாள்.

மாதவியின் நிபந்தனையை ஏற்ற கோவலன் பொற்காசுகளை வழங்கி மாதவியை அணுகினான். கோவலன் மாதவியிடம் சென்று தனது நிதிவளம் முழுவதையும் செலவிட்டபின் அவளிடஞ் செல்ல நிதியில்லாத கவலையில் மூழ்கினான். கணவனின் நிதி இல்லாக் குறையை நோக்கிய கண்ணகி தன்னிடம் எஞ்சியுள்ள காற்சிலம்பில் ஒன்றைக் கொடுத்து அதனை விற்று ஆவலைப் பூர்த்தி செய்யுமாறு கொடுத்தாள்.

கோவலன் அச்சிலம்பை எடுத்துக் கொண்டு மதுரையை நோக்கிச் சென்றான். அச் சமயம் எதிரில் வந்த அரச அரண்மனைப் பொற்கொல்லன் தான் அரசனிடம் காண்பித்து விலைக்குக் கொடுக்கலாமென வஞ்சனையாகக் கோவலனை அரசனிடம் அழைத்துச் சென்றான். பொற்கொல்லன் அரசனிடம் சிலம்பைக் காட்டி அரசியின் காணாமற் போன சிலம்பை நினைவூட்டிக் கோவலன்மீது குற்றஞ் சாட்டினான். அரசன் அரசியின் காணாமற் போன சிலம்பின் நிலையையெண்ணினான். அரசன் தனது மனித நீதியை மறந்து அரசருக்கான நீதி விசாரணையின்றிக் கோவலனைக் குற்றவாளியாகத் தெரிவித்து மரண தண்டனை வழங்கினான். பொற்கொல்லனின் வஞ்சனையான சாட்சியம் மனித நீதிக்கான விசாரணை ஏதுமின்றி அரசன் மரண தண்டனை வழங்கக் காரணமாயிற்று.

கோவலன் கொலையுண்டதை அறிந்த கண்ணகி தனது மறு சிலம்பையும் கையில் எடுத்துக்கொண்டு கற்புக்கனல் வீசத் தலைவிரி கோலமாகப் பாண்டியனின் அரச பணியகத்தை நாடினாள். அவள் கோபாவேசத்துடன் தனது கணவன் கள்வனா? என அரச நீதியைக் கேட்டாள். தனது கையிலிருந்த மறு காற்சிலம்பை அரசன் முன் வீசியெறிந்து உடைத்தாள். அச்சிலம்பிலிருந்து சிதறிய மணிகள் அரசியின் சிலம்பின் மணிகளுக்கானதல்ல என்பதை அறிந்தான். தனது நீதி தவறானதென உணர்ந்தவன் அரியாசனத்திலிருந்து மயங்கி வீழ்ந்து இறந்தான். இதனைக் கண்ட அரசியும் மயங்கி வீழ்ந்து இறந்தாள். பாண்டியனின் அரசநீதி தவறியது. இதனால் கண்ணகி கோபாவேடங் கொண்டு கற்புக்கனலால் மதுரையை எரியூட்டினாள்.

*எவ்வளவு பணக்காரன் ஆனாலும் தனது கடந்த காலத்தை வாங்க இயலாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச் சமயம் பல பெரியார்கள் அவ்விடம் வந்து கண்ணகியைச் சாந்தப்படுத்தி அமைதியடையச் செய்தனர். கண்ணகியின் கற்புநெறி தெய்வநிலைக்கு மாற்றியது. இறை அருட் சித்தப்படி கண்ணகி தெய்வ நிலையில் இந்தியா மட்டுமன்றி ஈழ மண்ணிலும் தெய்வ மாகப் போற்றப்பட்டாள். இலங்கையில் தமிழர் வாழும் பிரதேசமன்றி ஏனைய மாவட்டங் களிலும் கண்ணகிக்குக் கோயில் கட்டித் தெய்வமாக வழிபடுவதை அறிந்தோம். பாண்டிய மன்னன் தனது மதியீனத்தால் மனித நீதியை விட்டு அரச நீதியையும் அழிய விட்டான். கண்ணகியின் கற்புக்கனலால் மனித நீதியுடன் அரச நீதியும் பொய்த்ததால் தெய்வ நீதி நிலைகொண்டது. தெய்வநீதி பெற்ற கண்ணகியின் கற்புநெறியும் தெய்வநீதியும் மேலோங்கியதால் தெய்வமகளிராகினாள்.

### தெய்வநீதியால் உயர்ந்த சித்தர் கடையிற் சுவாமிகள்

இருநூறு ஆண்டுகளுக்கு முன் பெங் களூர் உயர்நீதிமன்ற நீதியரசராக மகான் ஒருவர் கடமையாற்றினார். இவர் ஆன்மிக நெறியில் உயர்ந்தவர். தமது மனித நீதியுடன் நீதியரசர் பதவிக்கான அரச நீதியையும் போற்றி வாழ்ந்தவர். ஒரு நாள் நீதிமன்றில் விசாரணை செய்து கொண்டிருந்தார். தகுந்த சாட்சிகள் மற்றும் யாவும் சரியாக அமைந் தது. அவ்வழக்கில் எதிரி குற்றவாளியாக நிருபிக்கப்பட்டதால் மரணதண்டனை வழங்க வேண்டிய நிலை வந்தது. நீதிபதி தமது இயல்பான நீதிப்படி மரணதண்டனை வழங்க மனுநீதி உறுத்தியது. அவரின் ஆன்மிக ஞானம் சிந்திக்க வைத்தது.

இந்த மனிதனின் உயிரைப் பறிக்க நான் யார்? என்று சிந்தனையைத் தூண்டியது. நீதியரசர் பதவியைத் துறந்தார். தமது வாழ்க் கையைத் துறந்தார். ஆடையாக ஒரு நாலு முழ வேட்டியுடன் தோளில் போட்ட துண்டு டன் வெளிப்பட்டார். துறவு வாழ்வானாலும் வழிகாட்டவென ஒரு சற்குருவை நாடினார். சற்குருநாதன் துறவறநெறியுடன் எதிர்கால நன்மையையும் நோக்கிச் சித்து மகிமையை யும் உபதேசித்து ஆசி கூறினார். மேலும் இவருக்கு முத்தியானந்தர் என்னும் தீட்சா நாமத்தையுஞ் சூட்டினார். முத்தியானந்தர் தமது சித்து மகிமையால் அட்டமா சித்தி களையும் கற்றுத் தெளிந்தார். தமது துறவு நிலையில் பிரகாசித்தவேளை இவருடன் கூடிய நட்பிலிருந்த யாழ்ப்பாணத்து வைர முத்துச் செட்டியாரின் அழைப்பை ஏற்று யாழ் மண்ணில் குடிகொண்டார். இவர் யாழ்ப்பாணத் தில் பெரியகடைச் சூழலில் உலா வந்தார். பல அற்புதங்களையும் செய்து பெரியகடை யில் வர்த்தகர்கள் பலரை உயர்வடையச் செய்தார். பெரியகடையில் தமது தவப் பொழுதை நிலைநிறுத்தி உலா வந்ததால் கடையிற் சுவாமிகள் என அழைக்கப்பட்டார்.

இவரின் மனிதநீதி அரசநீதியையும் விஞ்சியது. ஞானவழியை நாடவைத்தது. இதனால் தெய்வநீதியுடன் சித்தராக உலா வந்து யாழ்நகர் மற்றும் நல்லூரில் பல சீடர் களை உருவாக்கினார். யாழ் மண்ணில் சித்தர் பரம்பரையைத் தோற்றுவித்து யாவரையும் சிறப்புடன் திகழ வைத்தார். யாழ்ப்பாணச் சித்தர் பரம்பரையின் முதல் சித்தர் என்னும் சிறப்பையும் பெற்றார். கடையிற் சுவாமிகளின் பல சீடர்களுள் யாழ் நல்லூர் செல்லப்பா சுவாமிகள் முதன்மையானவர்.

செல்லப்பா சுவாமிகளும் தமது சித்த மகிமையால் பல அற்புதங்களையுஞ் செய்து தமக்கென ஓர் சித்தர் பரம்பரையை நிலை நாட்டினார். செல்லப்பா சுவாமிகளின் பல சீடர்களுள் யோகர்சுவாமி பிரபலமானவர்.

*எல்லா ஒழுக்க நெறிகளுக்கும் பணிவுதான் உறுதியான அடித்தளமாக இருக்கிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரிடம் தோன்றிய பல சீடர்கள் யாழ் மண்ணில் வலம் வந்தனர். யோகர் சுவாமிகளின் வெளிநாட்டு வெள்ளைக்காரச் சித்தர்கள் பலர் உலகெங்கும் அருளாட்சியுடன் சைவத்தை வளர்க்கும் சித்தர்களாகவும் பிரகாசிக்கின்றனர்.

அரசநீதி வழங்க வந்த நீதியரசர் தமது மனித நீதிப்படி அரசநீதிக்கும் மேலான தெய்வநீதியை நாடிச் சித்தி பெற்றார். இதனால் இம் மண்ணில் மனிதநீதி, அரசநீதி, தெய்வநீதி யாவும் ஒருங்கமைய எமது சைவ நெறி பிரகாசிக்கிறது. யாழ் மண்ணில் சித்தர் பரம்பரையை உருவாக்கி ஆன்மிக நெறியைத் தெய்வ நீதிக்கமைய வளரச் செய்த முத்தியானந்தர் என்னும் கடையிற் சுவாமிகளைப் போற்றுவோம். (தொடரும்...

## எண்ணம்

எண்ணம் வேறு, நீ வேறு அல்ல. சிந்தித்துப்பார், அது காலம், இடம், பருமன், இயக்கம் என்ற நான்குவிதத் தன்மைகளோடு இயங்கிக்கொண்டும், அவற்றைக் கடந்து மௌனநிலையடைந்தும் மாறி மாறி நிற்கும் மாயாஜாலப் பொருள். உள் எண்ணத்தின் நிலையை அறிந்துகொண்டால் நீ உன்னை அறிந்து கொண்டாய் என்பதுதான் பொருள். அதுவரையில் சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் எண்ணத்தைப்பற்றி ஆராய்ந்துகொண்டே இரு. எண்ணத்தை நிறுத்த முயலாதே, அது அதிகமாக அலையும். அதை அறிய முயன்றால் அப்போதுதான், அது தானே சிறுகச் சிறுக அமைதி பெறும்.

எண்ண இயக்கம்தான் வாழ்வு. அது உடலில் இரத்த ஓட்டம் இருக்கும் மட்டும், நித்திரை காலம் தவிர மீதி நேரத்தில் இயங்கிக்கொண்டேதான் இருக்கும். எண்ணத்தைப் பண்படுத்தவும் பயன்படுத்தவும் வழிகாண வேண்டும், பழக வேண்டும். அந்தப் பெருநிதியை அழிக்கவேண்டுமென்று நீ வீணான முயற்சி கொள்ளாதே! அதுதான் மரணம் என்ற இடத்தில் தானாகவே நின்றுவிடப் போகின்றதே! எண்ணம் நின்றுவிட்டால் நீ என்பது தனித்து ஏது?

பல வருடங்களில் எண்ணிறந்தோர்களால் செய்து முடிக்கக்கூடிய காரியங்களை நீ ஒரு நிமிடத்தில் எண்ணத்தால் திட்டமிடலாம். இத்தகைய சக்தியுடைய நீ எப்போதுமே எதிர்காலத்தைப் பற்றி திட்டமிட்டுக் கொண்டிருக்காதே. இதனால் அவ்வப்போது செய்யவேண்டிய கடமைகளை மறந்து விடுவாய். செயலோடு சிந்தனையை இணைத்து நிற்பதே மிகவும் உயர்வாகும். அது நழுவாமல் இருப்பதற்கு விழிப்போடு பல நாட்கள் பழக வேண்டும். உனது உடல் இன்பங்களையும், குடும்பத்தையும் மட்டும் ஞாபகத்தில் கொண்டு செயலாற்றினால், உனக்கு வாழ்வில் சலிப்பும், துன்பங்களும் ஏற்பட்டுக்கொண்டே இருக்கும்.

இயற்கை அமைப்பை, நிகழ்ச்சிகளை, எண்ணத்தின் ஆற்றலை, சமுதாயத்தை, உலகத்தை, ஆகாயத்தில் மிதந்து உலவிக்கொண்டிருக்கும் பலகோடி அண்டங்களை அடிக்கடி ஞாபகப்படுத்திக்கொள். இவைகளோடு உனது அறிவை, இன்ப, துன்ப அனுபோகங்களை அடிக்கடி ஒப்பிட்டுப் பார். இதனால், உடலுக்கும், அறிவுக்கும் ஒருங்கே அமைதி தரும் இடையறாத இன்ப ஊற்றுப் பெருக ஆரம்பித்துவிடும்.

*ஏழையின் முகம் மலரும்போது இறைவனின் உள்ளமம் மலர்ச்சி கொள்கிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறு ஜன்மம்

– திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள் –

ஜன்மம் என்பது பிறப்பு என்று பொருள்படும். இந்து மதம் மறு ஜன்மத்தில் நம்பிக்கை உடையது. இந்த ஜன்மத்தில் நாம் செய்யும் செயல்களின் விளைவை நல்லதோ, கெட்டதோ, யாம் மறு ஜன்மத்தில் அவற்றை அனுபவித்தாக வேண்டும் என்பதை இந்து மதத்தில் நம்பிக்கை கொண்டுள்ள மக்கள் ஏற்றுக்கொள்வர். இதனால் நாம் அடையும் நன்மை மிகப்பெரியது. நாம் தீது செய்ய அஞ்ச வேண்டும். நல்லது செய்ய முன்வர வேண்டும். நாம் இப்பிறப்பில் வளமாக வாழ்ந்தால் ஏதோ நாம் செய்த பூர்வ புண்ணிய பலன் என்று சொல்கின்றோம். பூர்வ ஜன்மத்தில் செய்த நற்காரியங்கள் ஒவ்வொன்றுக்கும் மறு ஜன்மத்தில் நற்பலன் உண்டு என்பதை புராணங்களும் வலியுறுத்தி உள்ளன.

உதாரணத்துக்கு ஆலயத்தில் ஓடித் திரிந்த எலி ஒன்று அணைய இருந்த தீபத்தின் திரியைத் தற்செயலாகத் தூண்டிய காரணத்தால் மறு ஜன்மத்தில் அந்த எலி முசுகுந்தச் சக்கரவர்த்தியாகப் பிறந்த வரலாற்றை யாம் அறிவோம். அதேபோன்று வேட்டையாடச் சென்ற வேடன் ஒருவன் புலி ஒன்றினிடமிருந்து உயிர் தப்புவதற்காக இரவுப்பொழுது முழுவதும் உயரத்தில் ஒரு மரக்கிளையில் இருக்கவேண்டியிருந்தது. வாளாவிருந்தால் எங்கே தூங்கிவிடுவேனோ என்று பயந்து, அம் மரக் கிளையின் இலைகளைப் பிடுங்கி ஒவ்வொன்றாக கீழே போட்டுக் கொண்டிருந்தான் அந்த வேடன். இரவும் கழிந்து பொழுதும் விடிந்தது. புலியும் மரத் தடியை விட்டுச் சென்றுவிட்டது. அந்த வேடன் அமர்ந்திருந்த மரம் வில்வமரம். அன்றைய இரவு சிவராத்திரி. சந்தர்ப்ப வசத்தால் அம் மரத்தின் அடியில் அமைந்திருந்த சிவலிங்கத்தின்மீது அவன் கொய்துபோட்ட வில்வ பத்திரங்கள் வீழ்ந்ததால் தெரிந்தோ, தெரியாமலோ அவன் சிவராத்திரி தினத்தன்று சிவ பூசை செய்த பலனைப் பெற்றான். இந்த சிவபுண்ணிய காரியத்தின் விளைவாக மறு ஜன்மத்தில் அந்த வேடன் மன்னனாகப் பிறந்ததாகப் புராண வரலாறு கூறுகிறது. எனவே, நல்லதோ, கெட்டதோ, நாம் செய்யும் காரியங்களுக்கு பலன் மறு ஜன்மத்தில் எமக்குக் கிடைத்தே தீரும் என்பது நம்பிக்கை.

உதாரணத்துக்கு ஒரு கதை சொல்கிறேன். கேட்டுப் பாருங்கள்.

தமிழ் நாட்டிலே திருஈங்கோய் என்று ஒரு மலை உண்டு. அங்கு சிவன் உறைவதாகவும் சொல்லப்படுகிறது. பச்சைப் பசேல் என்ற பசுமையான மலை. அங்கு பெரிய பெரிய விருட்சங்கள் காய் கனிகளுக்குப் பஞ்சமேயில்லை. ஒரு நாள் அங்கு வந்த குரங்கு ஒன்று அந்த மலையின் வனப்பை நோக்கியது. சுற்றிச் சுற்றிப் பார்த்தது. மலையின் ஒரு பக்கம் முழுவதும் மா, பலா, வாழை ஒரே தோப்பு. மறுபக்கம் பூக்கள், பூக்கள், பூக்கள்! எங்கு நோக்கினும் பூக்கள். எல்லாம் முகம் காட்டிச் சிரித்துக்கொண்டிருந்தன. சுற்றியுள்ள மலைகள் எல்லாம் சாதாரணமாயிருக்க இந்த மலை மட்டும், மரகத மலையாகக் காட்சி தருகிறதே என்று அந்த குரங்கு உற்சாகத்தால் அங்குமிங்கும் துள்ளிக் குதித்துத் தாவி மகிழ்ந்தது.

*ஒரு சமுதாயத்தின் நம்பிக்கை தனிமனிதனின் ஒழுக்கமே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையின் நடுவே, நடு நாயகமாய் நின்றிருந்த ஒரு பெரிய புளிய மரம். அதன்கண் சின்னச் சின்ன இலைகள். வெளியே தெரியாதபடி காயும் பழமுமாய் காய்த்துத் தொங்கியது. இந்தப் புளிய மரத்தால் தனக்கு பெரிய அதிஷ்டம் வாழ்க்கையில் காத்திருக் கிறது என்பது அப்போது அந்தக் குரங்காருக் குத் தெரியாது.

அங்கிருந்த வாழைப்பழங்களை வயிறு முட்டத் தின்றபின், அந்த ஈங்கோய் மலையில் தள்ளாடித் தள்ளாடி நடந்தது அந்தக் குரங்கு. ஆயுள் முழுவதுமே இந்த மலையில் வாழ்ந்து விடுவோம் என்ற நினைப்புடன் அந்த மலை யைச் சுற்றிச் சுற்றி வந்தது.

வெய்யிலும் சூடு பிடித்தது. வயிறும் நிரம்பிவிட்டது. தூக்கம் கண்களைச் சுழற்றி யது. எங்கே தூங்கலாம் என்று சுற்றும் முற் றும் பார்த்தது. குட்டிக் கரணம் அடித்து சுற் றும் முற்றும் இடம்தேடிய குரங்காரின் கண் களிலே மீண்டும் அந்தப் பெரிய புளியமரம் தென்பட்டது. அந்தப் புளியமர நிழலிலே காலை நீட்டிப் படுக்கலானார் அந்தக் குரங்கார்.

சுகமான புளியங்காற்று இதமாக வீசித் தாலாட்ட சுகமாகத் தூங்கி எழுந்தார் குரங்கார். தூக்கத்தின் சோர்வு நீங்கிப் புத்துணர்ச்சியுடன் "ஆடு ரங்கா ஆடு" என்று யாரும் கூறாமலேயே சிறிது நேரம் குட்டிக் கரணம் போட்டு ஆடியது அக்குரங்கு.

காலையிலிருந்து வாழைப்பழத்தையே உண்ட குரங்காருக்கு ஏதாவது காரமாக, அல்லது புளிப்பாக உண்ணவேண்டும்போல் தோன்றியது. உடனே தாவிக் குதித்து புளிய மரத்தின்மேல் ஏறி, கிளைக்குக் கிளை தாவி வேண்டிய அளவு புளியம்பழங்களைக் குஷி யாக உண்டது. தேவைக்கு மேல் உண்ட தால், புளியின் சூட்டால் குரங்காரின் நாக்கு ரணமாக எரிச்சல் எடுத்தது. தாகம் வேறு எரிச்சல் காரணமாக நாக்கை வெளியே தொங்கப் போட்டுக் கொண்டது. நீருக்கு எங்கே போவது? மலையடிவாரம் போயாக வேண்டும். தீவிரமாக சிந்தனை செய்த குரங்காருக்கு திடீரென ஒரு இன்ப உணர்ச்சி. மரத்தின்மேல் இருந்து இரண்டு சொட்டுத் தேன் துளிகள் அதன் நாவிலே வீழ்ந்தன. ஆகா! ஆனந்தம் தாங்கமுடியவில்லை. வாயைச் சப்புக் கொட் டியவாறு அண்ணாந்து பார்த்த குரங்காரது கண்களிலே மரத்தின் உச்சிக் கொப்பில் இருந்த தேனடை ஒன்று புலப்பட்டது.

"தேன் வேண்டும்" "தேன் வேண்டும்" என்றபடி உற்சாகமாக புளிய மரத்தின் மேல் "சர சர" என்று ஏறினார் குரங்கார். அருகே சென்றதும் மிகப் பெரிய தேனடை அது எனக் கண்டுகொண்டது. இன்று இரவு முழு வதும் தேன்தான் எனக்கு உணவு என்று தீர்மானித்தபடி தேனடையை அணுகியது.

"குரங்குப் புத்தி" என்பார்களே! அது வும் சரிதான். சற்றும் யோசிக்காமல் ஆயிரக் கணக்கில் தேனீக்கள் மொய்த்திருந்த அத் தேன் கூட்டில் சடாரெனக் கையை வைத்தது. குரங்கின் கைபட்டதுதான் தாமதம் தேனீக்கள் கலைந்து குரங்காரை வேண்டியளவு கொடுக் குகளால் கொட்டித் தீர்த்துவிட்டன. வலி பொறுக்கமுடியாத குரங்கார் தேனடையை பிடித்துக் கொண்டு தொங்கவே, தேனடை கழன்று தரையில் விழுந்தது. குரங்காரும் கிளைகள்மேல் தாவி கீழே விழுந்தார். தேனடை யைக் காவிக்கொண்டு மலையின்மீது ஓட ஆரம்பித்தார். தேனடையிலிருந்து தேன் சிந்த லாயிற்று. மலையிலிருந்த, மலைக் கொழுந்தீஸ் வரரான சிவனார்மீது அத் தேன்துளிகள் சிதறி யது. சிவனார் தனக்கு நிகழ்ந்த தேன் அபி ஷேகமாகவே இந்நிகழ்வை எடுத்துக் கொண்டு மகிழ்ந்தார். எனவே, சிவனுக்குத் தேனாபி ஷேகம் செய்த புண்ணியம் குரங்காருக்குக்

*ஒவ்வொரு வெற்றிக்குள்ளும் தோல்வியின் விதை ஒன்று ஒளிந்திருக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைத்தது. இதன் காரணமாக இந்தக் குரங்கு மறுபிறவியில் ஒரு அரசனாகப் பிறந் தது. மகத தேசத்து மன்னன் சுப்பிரபனாக ஜனித்தது.

மன்னன் சுப்பிரபன், மனுநீதி தவறா மல் ஆட்சி புரிந்தான். மன்னுயிர்களைத் தன்னுயிர்போல் பாதுகாத்து வந்தான். நிரம்பிய இறைபக்தி கொண்டிருந்த அவனுக்கு தனது முன்னைய ஜன்ம வரலாறு ஒன்றும் தெரி யாது. தெரிந்திருக்க நியாயமுமில்லை.

இவ்வண்ணம் சிறந்த மன்னன் எனப் பெயர் கேட்டு, மிகச் சிறப்பாக வாழ்ந்த மன் னன் சுப்பிரபனை சிவபெருமான் சோதிக்க விரும்பினார்.

நாட்டிலே ஒருவித குறையும் இல்லாத காரணத்தால் மன்னன் தனது மனைவி மக்கள், மந்திரி, பாதுகாப்பு படை ஆகிய வற்றுடன் ஷேத்ராடனம் செய்யப் புறப்பட் டான். நாடு நாடாய்ச் சென்று தலங்கள் எல்லாம் தரிசித்து இறைவழிபாடு செய்தான் மன்னன். பல தலங்களையும் தரிசித்தபின் கடைசியாக திருஈங்கோய் மலையை வந் தடைந்தான். அந்த மண்ணில் பாதம் பதித்த நிமிடமே அவனை இனம் தெரியாத ஒருவித உணர்ச்சி உலுப்பியது. தனக்கும் அந்த மலைக்கும் ஏதோ நெருங்கிய தொடர்பு இருப்பதுபோல் உணர்ந்தான் மன்னன். ஆனால், ஒன்றுமே புரியவில்லை. இதே ஊர் தான் அவன் குரங்காக வாழ்ந்த ஊர்.

ஒன்றும் புரிடாத நிலையில் அகண்ட காவிரியில் ஸ்நானம் செய்தபின், ஈங்கோய் மலையடிவாரத்தை அடைந்து அங்கு ஆல யத்தில் வீற்றிருந்த மரகதாலேஸ்வரரையும் மரகதவல்லியையும் வணங்கினான் மன்னன். கோதானம், ஸ்வர்ண தானம் என்பனவும் செய்தான். பின்னர், அங்குள்ள தலவிருட்ச மான புளியமரத்தை தரிசித்தபோது, அவனுக்கு மீண்டும் இனம்தெரியாதோர் உணர்வு, அங் கேயே தங்கிவிடலாமா என்று தோன்றியது. அங்கு தங்கி ஆலயப் பணிகள் சில செய்தான். ஆலயம், மண்டபம், சுற்றுப் பிரகாரம் யாவை யும் செப்பனிட்டான். தினமும் பூசை செய்வ தோடு, அங்கு தாராளமாகக் கிடைத்த தேனால் இறைவனுக்கு அபிடேகமும் செய்வித்தான். மரகதாலேஸ்வரர் தேனில் குளித்தார். மன் னன் மனம் மகிழ்ந்தான். மகிழ்ந்திருந்த மன் னனை சோதிக்க விரும்பினார் இறைவன். அந்த சுற்றாடல் முழுவதிலுமே தேன் கிடைக் காமல் செய்தார் ஈசன். அபிடேகத்திற்கு தேன் கிடைக்கவில்லையே என்று மன்னன் தவியாய் தவித்தான். மாற்று வழியாக என்ன செய்ய லாம் என யோசித்த மன்னனுக்கு ஒரு எண் ணம் தோன்றியது.

சிவபிரானுக்கு அபிடேகம் செய்யக் கொம்புத்தேன்தான் வேண்டுமா? ஐயனே! உன் மேல் பாடப்பெற்ற தேனினுமினிய பாடல் களைத் தினமும் செவிமடுத்த எனது செவி யும் தேனாய்த்தான் தித்திக்கின்றது. எனவே இனி தயங்கமாட்டேன். ஈசன் திருநாமத்தையே தினமும் கேட்கும் எனது செவித்தேனாலேயே சிவனாரை அபிஷேகிப்பேன். எனது செவியை அறுத்து அந்த ரத்தத்தால் ஈசனுக்கு அபி ஷேகம் செய்கிறேன் என்று கூறித் தனது செவியை வெட்ட வாளை உருவினான் மன் னன் சுப்பிரபன். நெஞ்சம் நெகிழ்ந்தார் ஈசன் உமையோடு அங்கே தரிசனம் கொடுத்து, ஓங்கிய வாளொடு நின்ற சுப்பிரபனைத் தன் மடிமீது இருத்தினார். கைலைக்கு அழைத்துச் சென்று அவனை சிவகணங்களுக்குத் தலைவர் ஆக்கினார்.

*சிவசிவ என்கிலர் தீவினையாளர்*
*சிவசிவ என்றிடத் தீவினை மாளும்*
*சிவசிவ என்றிடத் தேவரும் ஆவர்*
*சிவசிவ என்றிடச் சிவகதி தானே.*

*கலங்காத உள்ளம் படைத்தவர்கள் இறுதி வெற்றிக்கு உரியவர்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமூலர் தவமொழி (தொடர்ச்சி...)

– திரு ஆ.தா.இ. **ஜெயபாலன்** அவர்கள் –

திருமூலருடைய திருமந்திரமானது சாதாரணமாகக் கவிதைகள்போல் இலக்கிய இன்பத்தை வழங்குவதற்காக செய்யப்பட்ட காவிய நூல் அன்று. பல்லாயிரம் ஆண்டுகளாக ஞானிகளின் அனுபவ உணர்வில் நிலவிய தத்துவங்களை உபதேசிப்பதற்காக எழுந்த மறைநூல் அது. தவத்தில் இருந்து பிறந்த சொற்களானபடியால் அவற்றின் ஒலியிலும் நடையிலும் இலக்கியப் பண்போடு ஒரு தனியான சக்தியும் இணைந்திருக்கிறது.

மனித உடம்பிற்குள் இருக்கும் மெய்ப்பொருளை நேரில் கண்டவர் திருமூலர். தான் அடைந்த இன்பத்தை உலக மக்கள் எல்லாம் பெற்று உய்ய வேண்டும் என்பது திருமூலருடைய இலட்சியமாகும். இதற்கு வேண்டிய பலபல இரகசிய முறைகள் திருமந்திரப் பாடல்களில் பொதிந்து காணப்படுகிறது. முனிவர் கூறுகிறார் நான் பெற்ற இன்பம் பெறுக வையகம்.

நான் அடைந்து அனுபவித்த அந்த பேரின்பத்தை உலக மக்கள் பெறுவார்களாக என்று ஆரம்பிக்கின்றார். இந்த உலக மக்களும் தம்மைப்போலவே அந்தப் பேரின்பத்தை அடைய வேண்டும் என்பது முனிவருடைய ஆசைமட்டுமல்ல அவரின் ஆசீர்வாதமும் ஆகும்! “பெறுக” என்ற சொல்லில் முனிவரின் ஆசையும் வாழ்த்தும் தெரிகிறது.

நான் பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம்;
வான் பற்றி நின்ற மறைபொருள், சொல்லிடின்

மறைபொருள்- வேதத்திற்குப் பொருளாகிய பரம்பொருள். வானளவி நின்று அதையே தனது வெளித்தோற்றமாக காட்டுகின்ற எல்லையற்ற பரம்பொருளின் தன்மைபற்றி கூறுகிறார்.

வான் பற்றி நின்ற மறைபொருள் சொல்லிடின்
ஊன் பற்றி நின்ற உணர்வுஉறு மந்திரம்

வானைப் பொருந்தி நிற்கிறது பரம்பொருள். அதுவே இந்த ஊனிலே பொருந்தி நிற்கின்ற இரகசியப் பொருளாகும். இந்த உடம்பினுள் உணவாக நிற்கின்ற தத்துவமே வானமெங்கும் பரவி நிற்கும் பரம்பொருள்! அதைக் காட்டும் மந்திரமும் உணர்வே.

ஊன் பற்றி நின்ற உணர்வுஉறு மந்திரம்
தான் பற்றப் பற்றத் தலைப்படும் தானே.

அந்த உணர்வான மந்திரத்தை பற்றப் பற்ற பிடிக்கப் பிடிக்கப் பேரின்பம் தானாகவே வந்து தலைப்படும். ஆட்கொண்டு முன்னிற்கும்! வானில் வியாபித்துள்ள பரம்பொருள் ஊனிலும் மறைந்து நிற்கிறது. உணர்விலே கலந்து உணர்கிறது. இந்த உணர்வு நிலையைப் பற்றிக்கொண்டு ஈடுபட ஈடுபடப் பேரின்பமானது தானே வந்து சித்திக்கும். இந்தப் பேரின்பத்தை யான் பெற்றேன். அதை உலகமும் பெற்று கடைத்தேற வேண்டும் என்கிறார் திருமூலர்.

நான் பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம்;
வான் பற்றி நின்ற மறைபொருள் சொல்லிடின்
ஊன்பற்றி நின்ற உணர்வுஉறு மந்திரம்
தான் பற்றப் பற்றத் தலைப்படும் தானே.

*சினத்தை அடக்குவது நல்லது, அதைவிட வராமல் தடுப்பது இன்னும் நல்லது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பற்றுப் பற்று" என்று இருமுறை அடுக்கிச் சொல்வதன் நோக்கம், பயிற்சி செய்து அந்த உணர்விலே திளைக்க வேண்டும் என்பதைக் காட்டுவதற்கு! தலைப்படுதல் என்ற சொல்லுக்கு பொருள் கூறும் பழைய உரையாளர்கள் "மாமணிச் சோதியனாக உயிரில் வெளிப்பட்டு நின்ற நாளில்" என்கிறார் திருமூலர்.

உடம்புக்கு வெளியே பரவி நிற்கும் பொருளே உடம்புக்கு உள்ளேயும் மறைந்து நிற்கிறது. இந்தப் பொருளைக் கண்டு அனுபவிப்பதற்கு உரியவழி, இந்த உடம்பின் உணர்வைக் கொண்டு உள்ளும் புறமும் இரண்டற பாவனையில் தியானிப்பதே! இதுவே தவயோகி கண்ட பேரின்பம் அந்தப் பேரின்பத்தை கண்டு நாமும் அனுபவிப்போமாக.

சைவ நாயன்மார்கள் அறுபத்துமூவரில் ஒருவர் திருமூலர். சைவத் திருமுறைகள் பன்னிரண்டில் ஒன்று திருமந்திரமாகும்.

வேதாகம சாரத்தை தமிழில் எடுத்தோத வந்தவர் திருமூலர் என்று பெரியோர்கள் முனிவரைப் பக்திப் பரவசத்தோடு வணங்கித் துதித்தனர். நம்பிஆரூரர் திருத்தொண்டர் தொகையில்,

"நம்பிரான் திருமூலன்
அடியார்க்கும் அடியேன்" என்று முனிவரை வணங்குகின்றார்.

பிரான் என்று சொல்லி சைவ உலகம் துதி செய்கிற திருமூலதேவர் அணிமாதி சித்தி பெற்றவர். அவர் சைவ ஆசாரியர்கள் அனைவருக்கும் ஆசாரியராக மதித்துப் போற்றப்படு கிறார். நம்பியாண்டார் நம்பிகள் திருமூலரைச் சிந்தித்து மெய்யும் உள்ளமும் உருகிப்போய்,

"அடி மன்ன வைத்த பிரான் ..
மூலன் ஆகின்ற அங்கணனே!"

என்று திருமூலருடைய பாதத்தை தமது சிரத்திலே தரித்துக்கொண்டு பாடுகிறார். இப்படியெல்லாம் சைவசமயத் தலைவர்கள் அனைவரும் தலைவணங்கித் துதிக்கின்ற முனிவர், தம்முடைய திருமந்திர நூலை அவையடக்கத்தோடு தொடங்குகிறார்.

ஆரறி வார்எங்கள் அண்ணல் பெருமையை
யாரறிவார் இந்த அகலமும் நீளமும்;

எம்பெருமானுடைய பெருமையை யார்தான் தாம் சரியாக அறிவார்கள்! இந்தப் பெருமையின் அகலத்தையும் நீளத்தையும் யாரே அளந்தறிவார்கள்? யாரால் அளந்து அறிய முடியும்!

திருமாலும் பிரமனும் அடிமுடி தேடிக் காணாது நின்ற பெரும் சுடர் என்று சைவப் புராணங்கள் கூறும். கண்காணிப்பு படைப்பு இரண்டுக்கும் அப்பாற்பட்டு நிற்கிறது பரம்பொருள். மனம், வாக்கு இரண்டினாலும் அளவிட முடியாத பெருமை வாய்த சுடர் அது.

பேரறி யாத பெருஞ்சுடர் ஒன்று;

நாம் கண்டு சொல்ல முடியாத பெரும் சுடர் எது!

பேரறி யாத பெருஞ்சுடர் ஒன்று; அதின்
வேரறிய விளம்புகின் றேனே;

(அதின் வேரறியாமை விளம்புகின்றேனே- அதனுடைய வேரை அறியாமல் விளம்புகின்றேனே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகில் யாருமே அறியமுடியாத சுடர் அது. அதன் வேர் எங்கிருக்கிறது என்பதை யான் அறியேன்! அதை அறியவில்லை என்ற மெய்யறிவை இப்பொழுது எடுத்துச் சொல்கிறேன். அறிவுக்கு அப்பாற்பட்டது என்று உணர்ந்திருக்கின்றேன். அந்த உணர்வையே இப்பொழுது பேசுகிறேன் என்கிறார் திருமூலர்.

யாருமே அறியாத பெருமையும் அகல நீளமும், கொண்ட அண்ணலாகிய பெருஞ்சுடரின் ஆதிமூலத்தை நான் அறிந்துவிட்டேன் எனச் சொல்ல முடியுமா? இல்லை அந்த அறியவெண்ணா நிலையைத்தான் விளக்கிச் சொல்கிறேன். என்று பணிவும் பக்தியும் நிரம்பிய நிலையிலே பாடுகிறார்.

"அறிவுக்கு அப்பாற்பட்டவன் இறைவன்" என்று அனுபவம் மூலமாக அறிகிற அறிவுதான் பேரறிவு ஆகும். அறிவதற்கு முயன்று முயன்று அறியாமை என்ற உணர்வுக்கு வந்து சேர்கின்ற யோக முயற்சியே. ஞானத்தில் எல்லாம் சிறந்த தவஞானம்! இந்தப் பேருண்மையை வெளிப்படையாகச் சொல்லாமல் அவையடக்கமாக சொல்லி உணர்த்துகிறார்.

"அறிதல்" என்ற பிரக்ஞை மாறி இறைவனுடைய பேரின்பத்தில் ஐந்து புலன்களும் ஒன்றி நின்று எல்லாம் மறந்து நிற்கிற "அறியாமை" நிலை என்பது கிடைத்தற்கரிய ஆனந்தம்! அந்த ஆனந்த நிலையை தவங்களுக்கெல்லாம் இலட்சியமாகும் ஆசாரியர்கள் சீடர்களுக்கு உபதேசம் செய்வதெல்லாம் இந்த ஆனந்தத்தை அனுபவிக்க வேண்டும் என்பதற்காகவே!

இறைவனுடைய ஆனந்தத்தில் தோயத் தோய அந்த ஆனந்தம் எல்லையற்று பரந்து செல்வதை உணரமுடியும். நீண்டகாலம் தவமிருந்து அந்த பேரானந்தத்திலே தோய்ந்து தோய்ந்து அழுந்தி அதன் எல்லையற்ற தன்மையை உற்றவாறு உணர்ந்து, அந்த உணர்வு நிலையிலே சொல்கிறார். திருமூலர் வேரறியாமை விளம்புகிறேன் என்று

ஆரறி வார் எங்கள் அண்ணல் பெருமையை
யாரறி வார் இந்த அகலமும் நீளமும்;
பேரறி யாத பெருஞ்சுடர் ஒன்று; அதின்
வேரறி யாமை விளம்புகின் றேனே. (தொடரும்...

## குருபூஜை தினங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| யூன் | 14 | வை 31 | திங்கள் | நமிநந்தியடிகள் சேக்கிழார் |
| யூலை | 13 | ஆனி 29 | செவ்வாய் | மாணிக்கவாசகர் |
| யூலை | 16 | ஆனி 32 | வெள்ளி | அருளம்பலவர் தங்கம்மை |
| யூலை | 24 | ஆடி 08 | சனி | பட்டினத்தடிகள் |

*தான் விரும்புவதையெல்லாம் செய்பவன் வல்லவன். தான் செய்வதை விரும்புபவன் அறிவாளி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைக்காலம்மையார் பாடல்களில் பதிக்கோட்பாடு

– செல்வி செ. ஜெயலஷ்மி அவர்கள் –

**அறிமுகம்**

"தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி....." என மாணிக்கவாசகரால் போற்றப்படும் சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சமயமாக சைவசமயம் விளங்குகின்றது. சைவத்தின் முடிந்த முடிவினை எடுத்துக் கூறுவதாக அமையும் சைவசித்தாந்த கருத்துக்களை தென்னாட்டில் ஒவ்வோர் காலப்பகுதியிலும் தோன்றிய சமயப் பெருமக்கள் பலரும் தமது இலக்கியங்களில் வெளிப்படுத்தியுள்ளதை கண்டுகொள்ள முடிகின்றது. இந்த வகையில் காரைக்காலம்மையார் பாடல்களில் பொதிந்துள்ள சைவசித்தாந்தம் கூறும் பதிக்கோட்பாட்டை எடுத்துரைப்பதே இவ்வாய்வுப் பரப்பாகும்.

ஆலயங்களிலே இருபுறமும் நாயன்மார்கள் நின்றுகொண்டிருக்க காரைக்கால் அம்மையார் மட்டும் அமரும் உரிமைபெற்று தனிச்சிறப்புடன் போற்றப்படுவதற்குக் காரணம் இவர் தோன்றியிராவிடில் சைவம் இல்லை, மற்ற சிவனடியார்களும் இல்லை என்பதாலேயே எனலாம். இந்தவகையில் அம்மையாரின் தோத்திரப் பாடல்களான திருவிரட்டை மணிமாலை, திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம், அற்புதத் திருவந்தாதி என்பன சைவத்தின் மாண்பு போற்றப்படுபவையாகவும் சித்தாந்தக் கருத்துக்களை திருமுறைகளுக்கும், மெய்கண்ட சாஸ்திரங்களுக்கும் முன்னமே கூறுவதாகவும் உள்ளது.

சைவ சித்தாந்தம் பதி, பசு, பாசம் எனும் முப்பொருள் கோட்பாட்டை எடுத்துரைக்கும் வகையில் பதி எனப்படுபவர் முதலில் வைத்துப் பேசப்படுகிறார். அவர் யாவற்றுக்கும் மேலான பரம்பொருள், தோற்றம் முடிவு அற்றவர், எண்குணங்களை உடையவர், மும்மலப் பீடிப்பற்றவர், குணங்குறிகளை கடந்தவர், பேரறிவுடையவர் எனப்பலவாறாக எடுத்தாளப்படுகிறார். இதனடிப்படையில் அம்மையாரின் பாடல்களில் இடம்பெறும் சித்தாந்தம் கூறும் பதிக்கொள்கை எவ்வாறு எடுத்தாளப்பட்டுள்ளது என்பதை நோக்குவோம்.

**பதியுண்மையும் பதியியல்பும்**

காணப்படும் உலகம் காண்டற்கரிய பதியாகிய ஒருவனால் தோற்றுவிக்கப்பட்ட உள்பொருள் என்பதும் "யாது யாண்டு ஒடுங்கும் அஃது அதனில் உற்பத்தியாம், மண்ணிற்குடம் போலும்" எனும் விட்டு நீங்காமை இயல்பினால் உலகினை ஒடுக்கிய இறைவனே உலகத்தை மீளத் தோற்றுவிக்கிறான் அதனால்த்தான் சைவசித்தாந்தம் அழித்தல் தொழிலை செய்பவனாகிய சிவனை முழுமுதற் கடவுளாகக் கூறுகிறது. இதனைக் காரைக்காலம்மையார் தனது அற்புதத் திருவந்தாதியில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இறைவனே எவ்வுயிருந் தோற்றுவிப்பான் தோற்றி
இறைவனே யீண்டிறக்கஞ் செய்வான்....."

என எடுத்தாளுகிறார்.

சைவசித்தாந்தம் உலகத் தோற்றத்திற்கு நிமித்த காரணமாக இறைவன் உள்ளான் எனப் பதியை உண்மைப்படுத்துகிறது. அதாவது உலகத் தோற்றத்திற்கு முதற் காரணமாக மாயையும், நிமித்தகாரணமாக இறைவனும், துணைக்காரணமாக இறைவனின் திருவருட் சக்தியும் உள்ளதெனக் கூறுகின்றது. இந்தவகையில் இறைவன் தனது திருவருட் சக்தியால் உலகம் எல்லாவற்றையும் ஆள்விப்பதை, உயிர்களின் பிறவி நோயை நீக்குவதையும் அம்மையார்

"அருளேயுலகெல்லாம் ஆள்விப்பதீசன்
அருளே பிறப்பறுப்பதானால் - அருளாலே
மெய்ப்பொருளை நோக்கும் விதியுடையேன் - எஞ்ஞான்றும்
எப்பொருளுமாவ தெனக்கு" எனச் சுட்டுகிறார்.

சித்தாந்தம் இறைவனை உயிர்களிடத்து ஒன்றாயும் உடனாயும், வேறாயும் நிற்பவன் என்று கூறுகின்றது. அதாவது அறியும் இயல்புடைய ஆன்மாவாய் ஒன்றித்து நிற்பவனும், உயிர்களாகிய அவற்றின் தன்மை தன்னைப் பற்றாதவாறு தான் அவற்றின் வேறாக நின்று அவ்வுயிர்களுக்கு உள்ளதை உள்ளவாறு அறிவித்தருள்பவனும் அவனே, எல்லாவற்றையும் இருந்த இடத்திலேயே அறிகின்ற மெய்யுணர்வே திருமேனியாகக் கொண்டவனும் அவனே, உலகப் பொருள்கள் எல்லாவற்றோடும் பரந்து நின்று உலகத்தை இயக்கி நிற்பவனும் அவனே என்பதை அம்மையார்,

"அறிவானுந் தானே அறிவிப்பான் தானே
அறிவா யறிகின்றான் தானே - அறிகின்ற
மெய்ப்பொருளுந் தானே விரிசுடர் பார் ஆகாயம்
அப்பொருளுந் தானே யவன்"

என அற்புதத் திருவந்தாதியில் கூறுகின்றார். இக்கருத்தை சிவஞானபோதம் "அவையே தானேயாய்" என்றும், சிவஞான சித்தியார் "உலகெலாமாகி வேறாய் உடனுமாய்" என்றும் கூறுவது ஒப்புநோக்கத்தக்கதாகும்.

அவ்வாறே இறைவன் அறியாதவர்களுக்கு அரியவராகவும், எளியவர்களுக்கு எளியவராகவும் விளங்குவதை அம்மையார்,

"இன்று நமக்கெளிதே மாலுக்கும் நான்முகனுக்கும்
அன்றும் அளப்பரியன் ஆனானை....." என்கிறார்.

மேலும் இறைவனை அடைவதற்கு இறையருள் வேண்டும். இதனைக் கூறவிழைந்து தனக்கு இறைவன், அவரை வழிபடுபவருக்கு அருள் பாலித்ததை

"இறைவனது அடியைச் சேர்வதற்கு உயிர்வழியை
பிறந்து மொழி பயின்றவினெல்லாங் காதல்
சிறந்து நின்சேவடி சேர்ந்தேன்....." என்று கூறுகிறார்.

*வாய்ப்பை எதிர்பார்க்காமல் அதை உண்டாக்குபவன்தான் அறிஞன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பதியிலக்கணம்**

சைவசித்தாந்தம் பதிக்கு சொருபலக்கணம், தடத்தலக்கணம் எனும் இரு இலக்கணங் களைக் கூறுகின்றது. பதியாகிய சிவன் தானே சுயப்பிரகாசமாய் உண்மை நிலையில் நிற்பது சொருபலக்கணமாகும். அம்மையாரும் இறைவன் தனது சொருபநிலையில் குணம் குறிகள், உருவமற்று விளங்கும் தன்மையை கூற விழைகின்றார். அவ்வகையில் இறைவனிடமே உமது உருவம் எதுவென வினாவுவதாக,

"அன்றுந் திருவுருவம் காணாதே ஆட்பட்டேன்
இன்றுந் திருவுருவம் காண்கிலேன் என்னுந்தான்
எவ்வுருவோள் நும்பிரான் என்பார்கட்கு என்றுரைக்கேன்
எவ்வுருவோ நின் உருவம் ஏது!!"

எனக்கேட்டு, அங்கேயே பிறிதோர் பாடலில்,

"அறிகின்ற மெய்ப் பொருளும் தானே
அப்பொருளும் தானேயவன்"

என இறைவன் அறிவே சொருபமானவன் என்பதை எடுத்துரைக்கின்றார்.

சித்தாந்தக் கருத்தின்படி இறைவன் தன்னிலையிலிருந்து கீழிறங்கி உயிர்களுக்கு அருள்பாலிக்கும் விதமாக தடத்த நிலைக்கு வருகிறார். தடத்த நிலையில் உயிர்களுக்காய் தனது அருட்சக்தியால் பல்வேறு திருமேனிகளைத் தாங்கி நிற்கிறார். இந்த வகையில் இறைவன் சக்தியைப் பொருத்தி நாரிபாகனாக நிற்பதை அம்மையார்,

"இடப்பாகம் கொண்டாள் மலைப்பாவை" என்றும்,
"அவளோ குலமங்கை பாகத்தகலாலாள்" என்றும் கூறுகிறார்.

இதனோடு இன்று வழக்கில் இல்லாததான ஈசன் உருவம் கொள்ளும்போது திருமாலாகிய விஷ்ணு இறைவனின் வலப்பாகத்திலிருப்பதாக அம்மையார் கூறும் கருத்தும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

அற்புதத் திருவந்தாதியில்,

"ஒருபால் உலகளந்த மாலவனாம் மற்றை
ஒருபால் உமையவளாம்"

என்றும்,

"............. செங்கண்
திருமாலை பங்குடையான்" என்றும் கூறுவதை இங்கு குறிப்பிடலாம்.

**ஐந்தொழில்**

சித்தாந்தம் தடத்தநிலையில் இறைவன் படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் எனும் ஐந்தொழில்களைச் செய்வதாகக் கூறுகின்றது. இதனை முத்தொழில்களாகக் குறிப்பிடும்போது மறைத்தலைக் காத்தலிலும் அருளலை அழித்தலிலும் குறிப்பிடுவர். இம் முத்தொழில்களையும் முறையே பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் எனும் மும்மூர்த்திகளாக சிவனே நின்று நிகழ்த்துவதை அம்மையார்,

*அதிகாரத்தினால் சாதிப்பதைவிட அன்பினால் எளிதில் சாதித்து விடலாம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கைம்மாவின் ஈரிருவை முருவம் போர்த்துகந்த...." எனப் பாடியிருக்கிறார்.

மேலும் இறைவன் அண்டசராசரங்களின் இயக்கத்தின் பொருட்டு ஐந்தொழில்களையும் ஒருங்கே ஆனந்த தாண்டவத்தின் மூலம் நிகழ்த்துவதை அம்மையார்,

"விண்ணுஞ் சுழலு அனல்கை யேந்தி
ஆடும் அரவப் புயங்களெங்கள்
அப்பனிடந் திரு ஆலங்காடே" என எடுத்துரைக்கின்றார்.

## எண்குணங்கள்

இறைவனுக்கு தன்வயத்தனாதல், தூய உடம்பினனாதல், இயற்கை உணர்வினனாதல், முற்றுமுணர்தல், முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை, பேரருளுடைமை, இயல்பாகவே பாசங்களினின்று நீங்குதல் போன்ற எண்குணங்களை சித்தாந்தம் குறிப்பிடுகின்றது. அம்மையாரோ இறைவனை அறிவு, அருள், அன்பு எனும் குணங்களை உடையவரென்று கூறுகிறார்.

"இறைவனே ஈண்டிரக்கஞ் செய்வான்"
என அன்புருவையும்,

"அறிவானும் தானே அறிவிப்பானும் தானே"
என அறிவுருவையும்,

"அருளே உலகெல்லாம் ஆள்விப்பதீசன்
அருளே பிறப்பறுப்பதனால்" என அருளுருவையும் எடுத்துரைக்கிறார்.

## அட்டமூர்த்தம்

சைவசித்தாந்தம் தடத்த நிலையில் ஐம்பூதங்களான நிலம், நீர், தீ, காற்று, ஆகாயமாகவும், ஆன்மா சூரியன், சந்திரனாகவும் இறைவன் விளங்குகிறார் எனக் கூறுகிறது. இதனால் சிவனை அட்டமூர்த்தி என சித்தாந்தம் கூறுகிறது. இத்தகைய தன்மையை,

"அவனே இருசுடர் தீ ஆகாசம் ஆவான்
அவனே புவிபுனல் காற்றாவான் - அவனே
இயமானனாய் அட்டமூர்த்தியுமாய் ஞான
மயமாகி நின்றான்"
எனக் காரைக்காலம்மையார் பாடுகின்றார்.

## ஆன்மா உணரும் பதியின்பம்

ஆன்மா சார்ந்ததன் வண்ணமாகையால் பாசத்தைச் சாரும்போதும் பதியை அடையும் தகுதியை இழக்கின்றது எனச் சைவசித்தாந்தம் கூறும். இதனால் ஆன்மாவின் பாச ஞானம் பசுஞானம் என்பவற்றால் இறைவனை அடையமுடியாது போகின்றது. பதிஞானமாகிய சிவஞானம் ஆன்மாவிடம் தோன்றும் போதே அது முத்தியின்பம் அடைகின்றது. இதனை அம்மையார் இறைவனுக்கு நாம் ஆளாகும்போதே ஆன்மா பேரின்பம் அடைகிறதென்பதை,

"அவர்க்கே எழுபிறப்பும் ஆளாவோம் என்றும்
அவர்க்கே நாம் அன்பாவ தன்றிப்....."
என்றும்,

*அமைதியைவிட மேலான ஆனந்தம் வேறேதுமில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இனியோ நாம்உய்ந்தோம் இறைவன் அருள் சேர்ந்தோம்
இனியோர் இடரில்லோம் நெஞ்சே - இனியோர்
வினைக்கடலை ஆக்குவிக்கும் மீளாப்பிறவிக்
கனைக்கடலை நீந்தினோம் காண்"

எனவும் எடுத்துரைக்கிறார்.

சைவ சமயத்தவர், இறைவன் எங்கும் வியாபித்து இருப்பதுடன் எமது உள்ளத்தினுள்ளேயும் இருக்கின்றார் என்று நம்புகின்றனர். பக்குவப்பட்ட ஆன்மாக்கள் இறைவன் எமக்குள்ளேயே இருக்கின்றான் என்பதை அறியும் அறிவைப் பெறுகின்றனர். இதனைத்தான் திருமூலர்,

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பாலயம்...." என்றும் கூறுகிறார்.

இவ்வாறு இறைவன் எமது உள்ளத்தில் வாசம் செய்வதை

"எங்குற்றான் என்பீர்கள் என்போல்வார் சிந்தையினும்
இங்குற்றான் காண்பார்க் கெளிது"

என்றும்,

"...... காதலாற் காண்பார்க்குச்
சோதியாய்ச் சிந்தையுளே தோன்றுமே..."

என்றும் கூறுகிறார்.

மேலும் இதனை அறுதியிட்டுக் கூறுவதுபோல, இறைவன் நம்மால் அணுகமுடியாத பரவெளியிலுள்ளான் என்று சொல்லுவார் சொல்லுக, தேவர் உலகத்திலுள்ளான் என்று சொல்லுவாரும் சொல்லுக, அப்பெருமான் எனது நெஞ்சமாகிய அணியிடத்தில் இருந்து அன்பர்க்கு அருள்புரிகிறானென யான் உறுதியாகச் சொல்கிறேன் என்று.

"வானத்தா னென்பாரும் என்கமற் றும்பர்கோன்
தானத்தான் என்பாரும் தாமென்க - ஞானத்தான்
முன்னஞ்சத் தாரிருண்ட மெய்யொளிசேர் கண்டத்தான்
என்னெஞ்சத் தானென்பன் யான்"

என்று அற்புதத் திருவந்தாதியின் ஆறாவது பாடலில் கூறுகிறார்.

## நமசிவாய மந்திரம்

அம்மையாரின் பாடல்களில் "சிவன்" என்ற சொல் காணப்படாதது போலவே அதனோடு ஒட்டிப்பிறந்த "நமசிவாய" மந்திரமும் காணப்படவில்லை. எனினும் திருவிரட்டை மணிமாலையில் பத்து மற்றும் பதினாறாவது பாடல்களில் "ஐந்து" எனக் குறிப்பிடப்படும் சொல் நமசிவாய மந்திரத்தைக் குறிக்கிறது எனலாம். இந்த வகையில் சிவனின் "நமசிவாய" மந்திரத்தைச் சொல்லி இவ்வுலகில் மேலான பொருளான இறைவனை அடையலாம் என்பதை,

"தலையாய ஐந்தினையுஞ் சாதித்துத் தாழ்ந்து
தலையா யிண்வு ணர்ந்தோர் காண்பர்"

என்றும்,

*அரிய காரியங்கள் பெரிய உழைப்பினாலன்றி ஒருபோதும் முடிந்ததில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"புண்ணியங்கள் செய்தனவும் பொய்ந்நெறிக்கட் சாராமே
எண்ணியோ ரைந்தும் இசைந்தனவால் திண்ணிய"
என்றும் கூறுகிறார்.

## நிறைவுரை

சிவன் ஆன்மாக்களின் நிலைக்கேற்ப அவர்களுக்கு ஏற்ற நிலையில் அருள் புரிகிறார். அதாவது மலங்களால் பீடிக்கப்பட்ட ஆன்மாக்களுக்கு அருள் கிட்டாது. அவரை வேண்டி வருபவர்களுக்கே தனது திருவருளை வழங்குகிறார். இறைவனின் அருள் இருந்தால்த்தான் அவரைக் காணமுடியும் என்பதனை மாணிக்கவாசகப் பெருமான் "அவன் அருளாலே அவன் தாள் வணங்கி" என்றார். அத்தகைய அருள் பெற்றவராகிய அம்மையாரின் திருப்பதிகங்களில் சித்தாந்தம் சுட்டும் பதிக்கோட்பாட்டை சார்ந்ததாகிய இறைவனுக்கு வழங்கப்படும் பெயர்கள் பலவும் இடம்பெற்றுள்ளமையும் இங்கு குறிப்பிடத் தக்கதொன்றாகும். இந்தவகையில் இறைவனை காரைக்காலம்மையார் அட்டமூர்த்தி, அண்டத்தான், அண்டவாணன், அரன், ஆள்வான், இறைவன், ஈசன், ஞானத்தான், நன்னாடே, ஒப்பான், நன்னுரையான், பரமன், பிரான், புண்ணியன், பெரியான், பெருமான், மாயன், வானத்தான், வானோர் பெருமான், விண்ணோன், விமலன், வேதியன் போன்ற பல பெயர்களால் சுட்டி அழைக்கிறார். இவ்வாறு தொகுத்து நோக்கும்போது சைவசித்தாந்தம் சுட்டும் பதி பற்றிய கருத்துக்களான பதி உண்மை, பதியிலக்கணம், பதியியல்பு, ஐந் தொழில்கள், எண்குணங்கள், இறையருள், இறையின்பம், முத்திநிலை போன்ற பல்வேறு தத்துவக்கருத்துக்கள் காரைக்காலம்மையாரின் பாடல்களின் செந்தமிழ் சுவை ததும்பு வதாகவும், இனிய எளிமைத்தன்மையுடைய வரிகளாகவும் விளங்குகின்றன. அவற்றின் உட்பொருட் கருத்துக்களை தெளிவுற விளங்கிக்கொள்வதன்மூலம் சிறப்பாக சித்தாந்தத்தின் இறைக்கோட்பாட்டை உணர்ந்துகொள்ள முடிகிறது.

---

**பலருடைய வாழ்வில் முன்னேற்றத்தைத் தொடுவதற்கான கடைசிப் படியில்தான் அவர்களது முயற்சிகள் கைவிடப்படுகின்றன. இதற்கெல்லாம் என்ன காரணம்? உயர்வான பொக்கிஷத்தில் குப்பைகளைச் சேர்த்து வைத்தால் அந்தப் பெட்டகம் நாளடைவில் என்னவாகும்? அதுவும் குப்பைத் தொட்டியாகத் தன்னை மாற்றிக்கொள்ள ஆரம்பித்துவிடும். அப்படித்தான் உயர்வான எண்ணங்களால் உருவாக்கப்பட்ட நமது மனம் என்னும் மகத்தான பெட்டகத்தில் "எதிர்மறையான எண்ணங்கள்" என்ற குப்பைகளை நாமெல்லாம் திணிக்க ஆரம்பிக்கின்றபோதுதான் மனம் குப்பைத் தொட்டியாக மாற ஆரம்பிக்கிறது. எம்மால் ஒரு செயலைச் செய்ய முடியும் என்று பரிபூரணமாக நினைப்போம். அப்படி நினைத்து செய்யவும் ஆரம்பிப்போம். அப்போது எம்முடைய மனதில் இருப்பது ஆரோக்கியமான தூய எண்ணம். அந்தத் தூய எண்ணம் மனதைப் பாழாக்காது. இந்நிலையில்தான் யாரோ ஒருவர் எங்கள் மனதில் ஒரு வினையை விதைக்கிறார். "உன்னால் இது முடியுமா? பெரிய திறமைசாலிகள்கூட திணறிப்போன விடயம் இது...! உனக்கு ஏன் இந்த வீண் முயற்சி..." என்றதுமே எம்முடைய மனம் தளர ஆரம்பிக்கிறது. "ஒருவேளை முடியாமல் போய்விடுமோ" என்ற குப்பை.... பின்னர் "முடியாமல் போனால் அவமானமாகி விடுமோ" என்ற குப்பை... இப்படி மளமளவென்று குப்பைகளாய் நிரம்ப ஆரம்பித்ததும் மனம் தளர்ந்து விடுகிறது. எனவே தேவையற்ற எதையும் மனதில் வாங்கிக் கொள்ளாமல் "முடியும்" என்ற துணிவுடன் ஆரம்பம் முதல் இறுதிவரை செயற்பட்டால் வெற்றி நிச்சயம்.**

**வாழ்க்கையின் இயக்கம் ஊக்கத்தின் விளைவே. ஊக்கமில்லாதவர் சாதனைகளுக்கு ஆளாகார்!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏது சிறந்த யாகம்?

— திரு காரை எம்.பி. அருளானந்தன் அவர்கள் —

குருஷேத்திரப் போரில் வெற்றிபெற்று தர்ம ராஜ்யம் ஸ்தாபித்தபின் பாண்டவர்களில் மூத்தவரான யுதிஷ்டிரர் (தர்மர்) உலக நலன் கருதி, ஒரு பெரிய யாகம் நடத்தினார். அப்போது ஒரு கீரிப்பிள்ளை, யாகசாலையில் நுழைந்தது.

அந்தக் கீரிப்பிள்ளையின் உடலில் சில பகுதிகள் தங்கமயமாக இருந்தது. அது யாகசாலையைச் சுற்றி அங்குமிங்கும் தரையில் புரண்டது. பிறகு உரத்த குரலில் "இது என்ன யாகம்? ஒரு பலனும் இல்லையே! சத்துபிரஸ்தன் செய்த யாகம், இதைவிடச் சிறந்தது" என்றது.

கீரியின் வார்த்தைகளைக் கேட்ட யுதிஷ்டிரன் "விநோதமாய் இருக்கும் நீ யார்? நீ குறிப்பிட்ட அந்த சத்துபிரஸ்தன் யார் என்று கேட்டான். மேலும் அவன் என்னைவிடச் சிறப்பாக என்ன செய்துவிட்டான்?" என்றும் கேட்டான்.

"சத்துபிரஸ்தன் செய்த யாகசாலையில் எதேச்சையாக நுழைந்து அங்கு தரையில் உருண்டேன். என் உடலின் பெரும்பகுதி தங்கமயமாகிவிட்டது. மீதிப்பகுதியும் தங்கமயமாக, பல யாகசாலைகளுக்கு சென்றேன், உன் யாகத்திற்கும் வந்தேன். ஆனால் ஒரு பயனும் இல்லை" என்றது கீரிப்பிள்ளை.

அதன்பின் நடந்த கதையை விரிவாகச் சொல்லியது அந்தக் கீரி. "உன் முன்னோர்கள் காலத்தில் சத்துபிரஸ்தன் வாழ்ந்து வந்தான். அவன் பரம ஏழை. தன் மனைவி, மகன், மருமகள் ஆகியோருடன் ஏழ்மையிலும், தானதர்மம் செய்து வாழ்ந்தான். தினமும் சிரமப்பட்டு சம்பாதிக்கும் உணவை பசியால் வாடும் மற்றவர்களுக்குக் கொடுத்துவிட்டு, எஞ்சியதைக் கொண்டு அவன் குடும்பத்தினர் பசி தீர்த்தனர்.

ஒரு சமயம் கடும் பஞ்சத்தினால் அந்த ஊரே பாதிக்கப்பட்டது. ஒருநாள் அவனுக்குச் சிறிதளவு ரொட்டிமாவு மட்டுமே கிடைத்தது. அவன் மனைவி அதைக் கொண்டு ரொட்டிகள் செய்தாள்.

உணவு அருந்துமுன் அதிதிகள் யாராவது வருகின்றார்களா என்று பார்த்தான் சத்துபிரஸ்தன். சிறிது நேரம் வரை யாரும் வராததால் அனைவரும் மனம் வருந்தினர்.

அப்போது பசியால் வாடிய நிலையில் ஒரு கிழவர் அங்கு வந்து அவர்கள் முன் நின்று "ஐயா! பசிக்கிறது. ஏதாவது கொடுங்கள்" என்று கேட்டார். அந்தக் கிழவரை அன்புடன் வரவேற்று அவரது பாதங்களைக் கழுவி உபசரித்தான் சத்துபிரஸ்தன். மனைவி செய்து வைத்திருந்த ரொட்டியில் தனக்குரிய பங்கினை அக்கிழவருக்கு கொடுத்தாள். அதனை உண்ட கிழவரின் பசி அடங்கவில்லை. அதனைக் கண்டு சத்துபிரஸ்தனும் தனது ரொட்டியையும் கிழவருக்கு அளித்தான். அப்போதும் பசி அடங்காத கிழவரின் முகக் குறிப்பை அறிந்து அவனது மருமகளும் தனக்குரிய ரொட்டியையும் அளித்தாள். அதுவும் கிழவரைத் திருப்திப்படுத்தாத வகையில் அவனது மகனும் தனது ரொட்டியைக் கிழவருக்குக் கொடுத்தான். அதனை உண்ட

*ஆயிரம் பாடுபட்டாலும் கருணை இல்லாமல் ஒன்றும் நடக்காது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழவர் அக் குடும்பத்தினரின் செயல்கண்டு மகிழ்ந்து, உரு மாறி ஒரு தேவனாக அவர்கள் முன் நின்றார். தனக்கென வாழாது பிறர் பசி தீர்த்து வாழும் உன்னை, சொர்க்க லோகம் அழைத்து வரவே விஷ்ணு என்னை அனுப்பினார். நீ செய்த தர்மம் மிகச் சிறந்த யாகத்திற்கு ஒப்பானது" என்றும் அந்த தேவன் கூறினான்.

நானும் அச்சமயம் அங்கே சென்றிருந்தேன். கீழே சிந்தியிருந்த மாவில் உருண்டு புரண்டபோது எனது உடலில் எங்கெங்கு மா பட்டதோ அவ்விடமெல்லாம் பொன் நிறமாக மாறிவிட்டது. மிகுதி உடலையும் பொன் நிறமாக மாற்றுவதற்கு யாகம் நடைபெறும் பல இடங்களுக்கும் சென்று தரையில் புரண்டு வருகின்றேன். ஆனால் என் மிகுதி தேகம் மாறவில்லை. இங்கேயும் வந்து பார்த்தேன் என் ஆவல் நிறைவேறவில்லை. ஆகையால் நீ செய்த யாகத்திலும் பார்க்க சத்துபிரஸ்தன் செய்த யாகம் சிறந்தது என்று கீரி சத்துபிரஸ்தன் கதையைக் கூறி முடித்தது.

"ஆடம்பரமாகச் செய்யும் யாகங்களைவிட, பசித்தவனுக்கு உணவளிக்கும் தர்மமே மிகச் சிறந்த யாகம் என்பதை யுதிஷ்டிரர் உணர்ந்தார்.

"பசித்தவனுக்கு உணவளித்து - தமிழ்
பாரிதனைக் காப்போம் வாரீர்!"

---

தனிமையாக இருத்தல் என்பது வேறு. தனிமையில் இருத்தல் என்பது வேறு. முதலாவது உடலால் தனிமையில் இருப்பது. அப்பொழுது மனம் அலைபாய்ந்து கொண்டிருக்கும். ஆனால் இரண்டாவதாகக் கூறப்பட்ட "தனிமையில் இருத்தல்" என்பது மனம் தனித்து இருப்பது என்பதாகும். இங்கே மனம்தான் முக்கியமாகிறது. இந்த தனிமையான மனநிலையில்தான் நீங்கள் உங்களைக் கண்டுகொள்ள முடியும். உங்களை உணர முடியும். பொதுவாக ஏதாவது ஒரு நிகழ்ச்சியினால்த்தான் மகிழ்ச்சி என்ற உணர்வு நம்மிடம் தோன்றுகிறது. உங்களுக்கு நோபல் பரிசு கிடைத்தால் மகிழ்ச்சி அடைகிறீர்கள். எல்லோரையும்விட உயர்ந்தவன் என்ற எண்ணம் உங்கள் மனதில் உண்டாகிறது. ஆனால் இந்த மகிழ்ச்சியை உங்களுக்குள் உண்டாக்குவதற்கு அடுத்தவர்கள் தேவைப்படுகிறார்கள். அதாவது அடுத்தவர்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போதுதான் அவர்களைவிட உங்களுக்கு இந்தப் பரிசு கிடைத்தவிட்டதே என்று ஆனந்தம் கொள்ள முடிகிறது. ஆனால் சுய ஆனந்தம் என்பது வேறு. இதற்கு அடுத்தவர்களோடு ஒப்பிட்டுப் பார்க்கவேண்டிய அவசியமே இல்லை. அது உங்களுக்குள்ளே மட்டும் ஏற்படுவது. அந்த இன்பத்துக்குத் தூண்டுகோள் எந்த அடுத்தவர்களுமே இல்லை. அதற்கான தூண்டுகோள் நீங்கள் மட்டுமே. அதாவது உங்கள் மனம் மட்டுமே. அதை அடுத்தவர்கள் மதித்தாலும் சரி மதிக்காவிட்டாலும் சரி அதற்கு எந்தக் கெடுதலும் வராது. அந்த இன்பத்தை நீங்கள் உண்டாக்கும்போதே நீங்கள் அதை அனுபவிப்பீர்கள். இதைவிட வேறென்ன வேண்டும் வாழ்க்கைக்கு? எனவே மாறாத ஆனந்தத்தைப் பெற தனிமையில் தியானத்தை முயற்சி செய்து பாருங்கள்.

*இடைவிடாத முயற்சியும் எப்போதும் மலர்ந்த முகமும் அறிவின் அறிகுறிகள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருவும் சீடனும்

— திருமதி இந்திரா திருநீலகண்டன் அவர்கள் —

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே.

-திருமந்திரம்.

காலத்துக்குக் காலம் ஞானிகளை மண்ணிலே அவதாரம் செய்ய வைத்து மக்களை வையத்துள் வாழ்வாங்கு வாழ நெறிப்படுத்தித் துன்பத்தினின்றும் விடுதலை பெறச் செய்வது இறைவனின் அருள் நோக்கம் ஆகும். அதன்படி எங்கள் யாழ்ப்பாணத்தில் தவழ்ந்த ஞானியருள் சபாரட்ணம் சுவாமிகள், கௌரி அம்மை சமேத கேதீஸ்வரநாதர் உவந்துறையும் திருக்கேதீஸ்வரத்திலே சமீப காலத்திலே வாழ்ந்து "நினைந்தொறும், காணும் தொறும், பேசுந்தொறும் அனைத்தெலும்புள் நெக ஆனந்தத் தேனைச் சொரியும்" திருவாசகத் தேனை அள்ளிச் சுவைத்து திருவாசக சுவாமிகளான பெருமகனானவர்.

இவர் 28.03.1904இல் திருவாதிரை நட்சத்திரத்தில் அல்வாயைச் சேர்ந்த சின்னத்தம்பிக்கும் பாண்டியன் தாழ்வு சின்னத்தங்கத்துக்கும் திருமகனாக அவனியில் உதித்தார். சிறுவயதிலிருந்தே யோக சுவாமிகளின் அருட் பார்வைக்கு ஆட்பட்ட இவர் உண்மை, நேர்மை, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இவைகளை மதித்து வாழ்ந்து காட்டியவர். ஆசிரியப் பணியை தேர்ந்தெடுத்து மாணவர்களுக்கு கற்பித்தலுடன் நற்பண்புகளையும் ஊட்டி ஒழுக்கசீலர்களாக வாழ வழிவகுத்தவர். அதன்படி நேர்மை தவறாது ஆசிரியப் பணியை திறம்பட ஆற்றிக்கொண்டிருக்கும் வேளை இவரின் நற்பண்புகள், திறமை அத்துடன் அஞ்சாமையைக் கண்ட கத்தோலிக்க கலாசாலை, ஆசிரியப் பயிற்சி பெறுமாறு விரும்பி அழைத்தபோது மதமாற்றத்தை ஏற்க மறுத்த சுவாமிகள் அதைத் தட்டிக் கழித்து, பதவியையும் துறந்து ஆன்மீக உலகில் காலடி எடுத்து வைத்தார்.

கற்றதனாலய பயன் என்ன என்பதை உணர்ந்து இதிகாசம், திருமுறைகள், புராணம், மெய்கண்ட சாஸ்திரங்கள் அத்துடன் பட்டினத்தார், வள்ளலார் போன்றோரின் அருட் பாக்களையும் படித்துத் தெளிவு பெற்றார். திருமண பந்தத்துள் இணைந்து வள்ளுவன் வாக்குப்படி வாழ்வை மேற்கொண்டார். காலச் சக்கரம் சுழன்றது. மனைவியின் மறைவு வாழ்க்கையையே மாற்றியது. "உற்றாரை யான் வேண்டேன், ஊர் வேண்டேன், பேர் வேண்டேன், கற்றாரை யான் வேண்டேன், கூத்தா உன் கழற்கே கற்றாவின் மனம் போலக் கசிந்துருக வேண்டுவனே" என்று வீட்டையும், உறவுகளையும் பற்றுப் பாசங் களையும் துறந்தார். பற்றற்றான் பாதம் பற்ற விழைந்தார். மறவன்புலோவில் சில காலம் வாழ்ந்து, பத்து ஆண்டுகள்வரை யாத்திரை மேற்கொண்டு செல்வச்சந்நிதி முதல் கதிர்காமம்

*இலட்சியம் இருந்தால் மட்டும் போதாது. அதை நடைமுறைப்படுத்தவும் வேண்டும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரை எல்லாத் திருத்தலங்களையும் தரிசித்து வருடம்தோறும் ஆருத்திரா தரிசனம் காண சிதம்பரம் சென்று அவன் ஆடிய பாத தரிசனம் கண்டு மகிழ்வார். இந்தியாவிலுள்ள பல பாடல் பெற்ற திருத்தலங்களுட் பல தலங்களுக்கும் யாத்திரை சென்றார்.

இவ்வாறாக ஆன்மீக வாழ்வில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்ட இவரை மணிவாசகரின் திருவாசகமும் கூடவே ஆட்கொண்டது. அதற்குள் மூழ்கி திருவாசகத்தை ஓதிச் சுவைத்தார். "ஓயாதே உள்குவார் உள்ளிருக்கும் உள்ளான், யாராலும் காணற்கரியான், கணக்கிலாத் திருக்கோலம் காட்டி, கழலிணைகள் காட்டி, தன் வார்கழற் கன்பை நிரந்தரமாயருளி, மறந்தேயும் தன் கழல்கள் மறவாவண்ணம் ஆட்கொண்டு இனிப்பிறவாமே காத்த" தன் தலைவனை தானே வந்து தன் உள்ளம் புகுந்த மன்றிலாடும் மாதொருபாகனை நினைந்துருகி அவனுக்கே ஆட்பட்டார். திருப்பெருந்துறையில் குருந்தமர நிழலில் வாதவூரரை ஆட்கொண்டதுபோல் தன்னையும் கேதீஸ்வரத்தான் ஆட்கொண்ட வண்ணத்தை எண்ணி எண்ணி,

முத்தி நெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்தி நெறி அறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம்
சித்த மலம் அறுவித்துச் சிவமாக்கி எனை ஆண்ட
அத்தன் எனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே!

என்று அவனருளை வியந்து "நின் திருவருளால் என் பிறவியை வேரறுப்பவனே அடியேன் உன் அடைக்கலமே" என்று திருக்கேதீஸ்வர நாதனிடம் தன்னை ஒப்படைத்துத் திருவாசக சுவாமிகளானார்.

தன் வாழ்நாளை அங்கேயே இறைபணிசெய்து அவனைப் பாடிப் பரவிக் கழிக்க எண்ணி ஒரு கொட்டிலமைத்து திருவாசகத்தை மனமுருக ஓதி மகிழ்ந்திருக்கும்கால் தான் பெற்ற இன்பம் மற்றவர்களும் பெற வேண்டுமென்ற அவாவினால் மாதோட்ட நாதனை நாடி வருபவர்களை திருவாசகப் பாடல்மூலம் தன்பால் ஈர்த்து, "எனக்கப்பனே! அத்தனே! ஆனந்தனே! அகம் நெக அள்ளூறு தேன் ஒப்பனே" என்று கேட்பவர் உள்ளம் மனங்கசிந்துருகும்படி பாடி அவர்களை மகிழ்வித்து அமுது படைத்து ஆன்ம ஈடேற்றத் துக்கும் இறைவனை சுலபமாக ஈர்க்கவும் மணிவாசகரின் திருவாசகங்களை மனமுருகிப் பாடுவதே சிறந்த வழி என்று அறிவுறுத்தி, அவர்களையும் அதன்பால் ஆர்வத்துடன் ஈடுபட வைத்து மனநிறைவு பெற்றார். திருவாசகத்தின்மூலம் அவர் அடியார்கள் ஆனோர் பலர், வெளிநாடுகளிலும் இருக்கின்றார்கள். இவ்வாறாக ஐந்து தசாப்தங்கள் கேதீஸ்வரநாதரைப் பாடிப்பரவி, தன்னை நாடி வருபவர்களுக்கு பிறவிப்பிணி நீக்க வழிகாட்டும் குருவாகவும், அமுது படைத்து இளைப்பாற்றும் அமுதசுரபியாகவும் வாழ்ந்து இறுதியாக தன் நெருங்கிய அடியவரும், உறவினருமாகிய திரு தம்பு துரைராஜா அவர்களின் இல்லத்தில் தங்கி இருந்த சுவாமிகளை 25.01.1988இல் இறைவன் தன் திருவடி நிழலில் நிரந்தரமாக இணைத்துக் கொண்டார். இவரது புனித அஸ்தி அடங்கிய நினைவாலயம் மறவன்புலோவில் அமைக்கப் பெற்றுள்ளது.

இறைவன் திருவருள் கூட்ட இலைமறை காய்போல் இருந்த சுவாமிகளை, உலகறியச் செய்த பெருமை, திரு தம்பு துரைராஜா அவர்களையே சாரும். நம்மிடையே

*இளமையில் வறுமையும் முதுமையில் தனிமையும் கொடுமையானது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாலிபன் போல் பவனிவந்து இன்றுவரை சுவாமிகளின் சேவைகளையே தொண்டாகக் கொண்டு விருப்புடன் ஆற்றிவரும் திரு தம்பு துரைராஜா அவர்கள் பற்றியும் அறிவது சாலச் சிறந்தது. இவர் சுண்டுக்குழி பாண்டியன், தாழ்வைச் சேர்ந்த தம்புவுக்கும் பொன்னாலை யைச் சேர்ந்த ஆச்சிமுத்துவுக்கும் ஏக புத்திரனாக 1924ஆம் ஆண்டு இப்பூமிக்கு வந்தார். இவரது தாயார் இவருக்கு நான்கு வயதாக இருக்கும்போது இறைவனடி சேர்ந்த தால் தந்தையின் ஊரிலே அத்தைமார்களின் பராமரிப்பில் ஆளானார். இவர் யோக சுவாமி களின் அனுக்கிரகத்தை ஒரு வயதிலேயே பெற்று ஆன்மீக சிந்தனையுடன் வாழத் தலைப் பட்டார். பத்து வயதாக இருக்கும்போது 1934 இல் தாயாரின் சகோதரன் நாராயண பிள்ளைக்கு ஒரு பெண்குழந்தை பிறந்தது. குழந்தையின் நாற்பதாவது நாள் வைபவத் திற்கு இவர் சென்றிருந்த சமயம் இவரின் மாமன் முறையான தம்பிப்பிள்ளை என்பவர், "இந்தாடா உனக்குத்தான்டா பிடி" என்று மாமன் மகளான குழந்தையை (இரத்தினேஸ் வரி) இவரது மடியில் வைத்தார். அன்று இறைவன் போட்ட முடிச்சின்படி அந்த அழ கிய திருமகளையே கரம்பற்றினார். அந்த வேளை அந்த அம்மையின் வயது பதி னான்கு. பதினைந்து வயதில் முதல் பிள்ளைக்குத் தாயாகி குடும்பப் பொறுப்பை ஏற்று பத்தாவுக்கேற்ற பதிவிரதைபோல் வாழ்ந்து மேலும் குழந்தைகளைப் பெற் றெடுத்து பொறுமை, கடமை, பாசம், வருபவர் களை முகம் மலர்ச்சியுடன் வரவேற்பது என்று சகல நற்பண்புகளையும் தன்னகத்தே கொண்டு இனிதே குடும்ப வாழ்க்கை நடைபெற உறு துணையாகத் திகழ்ந்தார். தன் மனைவியின் நற்பண்புகளைப் பற்றி ஐயா அவர்கள் "இன் றைய இளம் பெண்கள் இவற்றைக் கருத்தில் கொண்டு நடந்தால் வாழ்வு இனிதாக அமை யும்" என்று ஓரிடத்தில் குறிப்பிட்டிருக்கின்றார். சுவாமிகளின் அனுக்கிரகத்தாலும் குடும்ப ஐக்கியத்தாலும் வாழ்வாங்கு வாழ்ந்து கொண்டிருக்கும் திரு தம்பு துரைராஜா அவர் கள் யோகப் பயிற்சியில் ஈடுபடுவதை இன்று வரை கைவிடவில்லை. ஐம்பது வயதிலேயே நோயுடன் கூடி வாழ்கின்ற காலகட்டத்திலே, திருவாசகமும் கூடவே அவரை ஆட்கொண்ட தாலும் அகவை 95ஐயும் தாண்டி சுகதேகி யாக இளமைத் துடிப்புடன் சுவாமிகளின் சேவைகளையே தொண்டாகக் கொண்டு விருப்புடன் எடுத்த கருமத்தை சிறப்புடனே நிறைவேற்றும் திறனும் வாய்க்கப் பெற்றிருப் பது சுவாமிகளின் ஆசியும், இறைவனின் திருவருளும் என்றால் மிகையாகாது.

இவர் ஈழத்துச் சிவாலயங்கள், மண் ணில் நல்ல வண்ணம் வாழலாம், மானிட வாழ்வின் மகத்துவம் போன்ற நூல்களையும் அச்சிட்டு வெளியிட்டிருக்கிறார். அத்துடன் இவர் ஒரு சமூக சேவையாளரும் கூட சமய விழாக்கள், திருவாசகம் முற்றோதல், சமய நிறுவனங்களுக்கு தன்னாலான உதவி களைச் செய்தல் என்று சமூகப் பணிகளில் ஈடுபட்டு இந்து சமய கலை, கலாசாரத்தை மேம்படுத்தும் வண்ணம் மேற்கொண்ட பணி களைப் பாராட்டி கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் "கலாபூஷணம்" என்ற விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இவர் சுவாமிகளின் மேல் கொண்ட குரு பக்தியால் சுவாமிகளுடைய குரு பூஜையை 1989 முதல் சரஸ்வதி மண்டபத்தில் நடாத்தத் தொடங்கி ஒவ்வொரு வருடமும் சிறப்பாக ஆற்றி மகிழ்வார். இந்நிகழ்வில் பலர் கலந்துகொண்டு பயனடைந்திருக்கிறார் கள். நாமும் இத்திருவாசகத்தில் ஈடுபடுவதற்கு இவரும் ஒரு காரணகர்த்தா ஆவார்.

*இளமையும் அன்பும் வசந்தகாலப் பரிசு. அவற்றை நீயே எடுத்து அனுபவித்துக்கொள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறாக நடைபெற்றுக்கொண்டிருக்கையில் சுவாமியின் அதீத குருபக்தியினால் அவர் பெயரில் ஒரு மடம் நிறுவவேண்டும் என்ற எண்ணம் மேலிட்டது. அதன்படி ஒரு தொண்டர் சபையை அமைத்து திரு தியாக ராஜா (STR) அவர்களின் தலைமைத்துவத்தில் செயற்பட ஆரம்பித்தார். பல சிரமங்களுக்கு மத்தியில் திருக்கேதீஸ்வரத்தில் கௌரி அம்மன் வாசலை அண்மித்த பகுதியில் இடத்தையும் பெற்றுக்கொண்டார். நிலம் கிடைத்தவுடன் பணமும் வந்து சேர்ந்து கொண்டிருந்தது. வெளிநாடுகளில் உள்ள சிலரும் உதவ முன்வந்தார்கள்.

மடமும் கட்டி முடிக்கப்பட்டு மாதொரு பாகனின் திருவருளால் 2013ஆம் ஆண்டு தை மாதம் "திருவாசகம் சபாரட்ண சுவாமிகள் கலாசார மண்டபம்" திரு தியாகராஜா (STR) அவர்களின் தலைமையில் கோலாகலமாகத் திறந்து வைக்கப்பட்டது. அதன்போது அவர் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. திருவாசகத்துக்குரியவரான மணிவாசகரின் பஞ்சலோகச் சிலையும் வைக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஐம்பதுக்கு மேற்பட்ட சுவாமிகள், பெரியோர் படங்களும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. ஆலயத்துக்கு வருபவர்களும் தங்கிச் செல்வதற்கு வசதியாக அறைகளும் அமைக்கப்பட்டுள்ளன. (சிறிய நன்கொடையுடன் தங்கக் கூடியதாக) சபாரட்ணம் சுவாமிகள் செய்த சேவையை தொடரும் வகையில் ஒவ்வொரு பூரணைக்கும் திருவாசகம் முற்றும் ஓதப்பட்டு அடியவர்களுக்கு அன்னதானமும் வழங்கப்படுகிறது. கேதீஸ்வரநாதனின் திருவிழாக்கள், சிறப்புப் பூஜைகள் போன்ற நாட்களிலும் களைத்து வருபவர்களை தம்மாலானமட்டில் உபசரித்து இளைப்பாற்றுவார்.

மேலும் கேதீஸ்வரத்தானைத் தரிசிக்க வரும் அடியவர்களையும் திருவாசகம்பால் ஈர்க்கச் செய்து சபாரட்ணம் சுவாமிகளையும் மணிவாசகரையும் மகிழ்விப்பார். 1904களில் கேதீஸ்வரநாதனின் அருகாமையை தன் இருப்பிடமாகக் கொண்ட சுவாமிகள் நிரந்தரமாக திருவாசகம் தன் இனிய நாதத்தைப் பரப்பிக் கொண்டிருக்கும் சூழலில் மறைமுகமாக வீற்றிருந்து அடியவர்களுக்குத் திருவாசகத்தேனை ஊட்டி மகிழ்கின்றார் என்பதை எண்ணும் போது திரு தம்பு துரைராஜா அவர்களின் விடாமுயற்சியால் உண்டான பெறுபேறே எனலாம்.

ஒவ்வொரு பூரணைக்கும் இந்த வயதிலும் தன் மனைவியாருடன் கொழும்பில் இருந்து திருக்கேதீஸ்வரம் சென்று முற்றோதலில் பங்குபற்றி (கொரோனா காலம் தவிர) அவர் அடையும் ஆனந்தம் சொல்லிலடங்கா. இந்த வருடம் 2021 சித்திரா பூரணைக்கும் திருக்கேதீஸ்வரம் சென்று திருவாசக முற்றோதல் நடாத்தி அமுது படைக்க திருவருள் கூட்டியதை அறியும்போது இறைவனின் திருவிளையாடலை என்னென்பது. இத்தகைய சிறந்த இறைபணியைச் செய்யும் ஐயா அவர்கள் தன் தர்மபத்தினியுடன் இன்னும் 100 ஆண்டுகள் கடந்தும் சுவாமிகளின் சேவைகளைச் செய்து மகிழவேண்டும் என்று வாழ்த்தி பாதிமதி வேணியன் தன் அனுக்கிரகத்தை அவர்களுக்கு வழங்குவார், வழங்க வேண்டும் என்று வணங்கி நிற்கின்றோம்.

**"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"**

---

அடக்கமும் பணிவும் இன்றி உங்கள் நடவடிக்கைகள் அமையுமானால் நிச்சயம் முன்னேற முடியாது. வாழ்க்கையில் மிக முக்கியமானது பணிவும் கீழ்ப்படிதலும். கல்வியின் சாரமே அதுதான்! அப்போதுதான் நீங்கள் உண்மையில் கல்வி கற்றவர்கள் எனக் கருதப்படுவீர்கள்.

*உங்களிடம் உள்ள நற்பண்பைப் பொறுத்தே செல்வமும் மகிழ்ச்சியும் அமையும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான் ஆச்சிரமத்தின் இடர்கால நற்பணிகள்

– தொகுப்பு: வல்வையூர் அப்பாண்ணா –

கொரோனா தொற்றுப் பேரிடர் காலத்திலும், சந்நிதியான் வாசலிலே தங்கியுள்ள ஆதரவற்றோருக்கான நித்திய அன்னப்பணி எவ்வித தங்குதடையுமின்றி நடந்து வருகிறது. மூன்றுவேளை உணவு, காலையும் மாலையும் இரு நேர தேநீர், பண்டிகை காலத்திற்கான உடுபுடவைகள் - வேட்டிகள், குளிர்காலத்திற்கான போர்வைகள் என வழமையான உதவிகள் தொடருகிறது.

வறுமைக்கோட்டுக்குட்பட்ட 85 குடும்பங்களுக்கு அரிசி வழங்கும் நிகழ்வு, மாதத்தின் இறுதி வெள்ளி மாலையில் வழங்கப்பட்டு வருகிறது. இலங்கையின் பல்வேறு பல்கலைக்கழகங்களிலும் கல்வி கற்று வரும் வசதி குறைந்த 169 மாணவர்களுக்கான மாதாந்த நிதி அவரவர் வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்படுகிறது. ரூபா 2000. 00 முதல் 5000. 00 வரையிலான தொகையினைப் பெறும் மாணவர்களுள் 3000. 00 ரூபா பெறும் மாணவர்களே கூடுதலாக இருப்பதையும் அவதானிக்க முடிகிறது.

மலையக மண்சரிவு ஏற்பட்ட கால உதவிகள், வெள்ள நிவாரண உதவிகள், திடீர் அனர்த்தங்களுக்கான உதவிகள், மலையக அறநெறிப் பாடசாலைகளுக்கான பல்வேறு வகைப்பட்ட உதவிகள், பொலநறுவை சமனப்பிட்டி அறநெறிப் பாடசாலைச் சிறார்களுக்கு ஞாயிறுதோறும் சத்துணவு வழங்கல் போன்ற இன்னும் பலவும் வழமைபோலத் தொடருகின்றன.

நோய்த்தொற்று ஏற்பட்ட காலம் முதல் தொடர்ந்து நடைமுறையில் இருந்துவந்த பயணத்தடை காரணமாக மக்கள் பெரும் அவதிக்குள்ளாயினர். பல்வேறு இடங்களும் பகுதி பகுதியாக முடக்கப்பட்டு தனிமைப் படுத்தப்பட்ட காரணத்தால் நித்திய உழைப்பாளர்களும், கூலித் தொழிலாளர்களும் அதிகம் இடர்படவேண்டி வந்தது.

இத்தனை நெருக்கடிகளுக்கு மத்தியில் அரசாங்கம் மூலம் கிடைக்கும் நிவாரணத் தொகைகள் "யானைப் பசிக்கு சோளப் பொரி"யாக உள்ளனவேயன்றி அவர்களது நித்திய தேவைகளை நிறைவேற்ற முடியவில்லை. தனிப்பட்ட நிறுவனங்கள் - ஸ்தாபனங்கள் - இளைஞர் குழுக்கள் ஆகிய இவைகள் நிலைமையை உணர்ந்து பல்வேறு வழிமுறைகளிலும் உதவிக்கரம் நீட்டி வருகின்றனர். இந்த வரிசையில் சந்நிதியான் ஆச்சிரமமும் தன் பங்கிற்கு முடிந்தவரை உதவிகளை வழங்கி வருகிறது.

பேரிடர் காலத்தில் ஆச்சிரமம் சார்பான உதவிகள் தேதிவாரியாகக் கீழே தரப்பட்டுள்ளன. இந்தப் பட்டியல் பேரிடர் காலம் முதல் யூன் மாதம் வரையிலானது மட்டுமே. இந்தக் குறிப்பிட்ட கால இடைவெளியில் ஆச்சிரமம் ஆற்றிவரும் உதவிப் பணிகளுக்காக தாமாகவே மனமுவந்து நிதியுதவி அளித்தவர்கள் பட்டியல் தனியாகத் தரப்பட்டு உள்ளது. அந்த நல்ல உள்ளங்களுக்கு ஆச்சிரமம் நன்றிகூறக் கடமைப்பட்டிருக்கிறது.

*முடிந்த பிரச்சினைகளுக்கு வருந்தாமல் வரும் காலத்தை துணிந்து எதிர்கொள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**01.04.2021 வியாழன்:**

கொரோனா அச்சம் காரணமாக தனிமைப்படுத்தப்பட்டிருந்த திருநெல்வேலி பாற்பண்ணை கிராமத்தில் வசிக்கும் 100 குடும்பங்களுக்கு தலா 3000. 00 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் நேரில் சென்று வழங்கப்பட்டது.

**05.04.2021 திங்கள்:**

ஏழாலை, குப்பிளான், மயிலங்காடு, புன்னாலைக்கட்டுவன் ஆகிய பகுதிகளில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த 30 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டது.

**20.05.2021 வியாழன்:**

பருத்தித்துறை - மந்திகை ஆதார வைத்தியசாலை நிர்வாகத்தினரின் வேண்டுகோளிற்கு அமைவாக ரூபா மூன்று லெட்சத்து எழுபத்தையாயிரம் (ரூபா 3,75,000) பெறுமதியான தண்ணீர் சுத்திகரிக்கும் இயந்திரம் நோயாளரதும் - ஏனைய பொதுமக்களின் பயன்பாட்டிற்காகவும் ஆச்சிரமத்தினால் வழங்கப்பட்டது.

**06.06.2021 ஞாயிறு, 07.06.2021 திங்கள், 08.06.2021 செவ்வாய்:**

கொரோனா நிவாரணப் பணியாக தொண்டைமானாறு கிராமத்தில் வசித்துவருகின்ற 550 குடும்பங்களுக்கு, அவரவர் குடும்ப அட்டையின் அங்கத்தவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்றபடி அரிசி வழங்கப்பட்டது.

**12.06.2021 சனி:**

முல்லைத்தீவு பிரதேசத்திற்குட்பட்ட விசுவமடு மேற்கு, நெத்தலியாறு, மற்றும் விசுவமடு கிழக்கு போன்ற கிராமங்களில் வசிக்கும் 100 குடும்பங்களுக்கு நேரடியாகச் சென்று நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டன.

**14.06.2021 திங்கள்:**

நல்லூர் பிரதேச செயலகத்தின் நிர்வாகத்திற்கு உட்பட்ட திருநெல்வேலி மேற்கு கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட பரவக்குளம் கிராமத்தில் உள்ள 25 குடும்பங்களுக்கு 3000. 00 ரூபா பெறுமதியான அத்தியாவசியப் பொருட்கள் நேரில் சென்று வழங்கப்பட்டது.

**16.06.2021 புதன்:**

01) யாழ்ப்பாணம் முனீஸ்லேன் - வேளாதோப்பு அம்மன் கோவிலடியில் வசித்துவரும் திருமதி விமல்ராஜ் பாலா என்பவரின் வறுமை நிலையை உத்தேசித்து, அவரது வீட்டின் திருத்த வேலைகளுக்காக 15 பைக்கற் சீமெந்து நேரில் சென்று வழங்கப்பட்டது.

02) சண்டிலிப்பாய் பிரதேசத்தில் வசிக்கும் 60 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் நேரில் சென்று வழங்கப்பட்டது.

**17.06.2021 வியாழன்:**

மானிப்பாய் வலிகாமம் பிரதேச சபையில் ஒப்பந்த அடிப்படையில் சுகாதாரத் தொழிலாளர்களாக பணிபுரியும் 15 பேருக்கு ரூபா 3500. 00 பெறுமதியான உலருணவுப் பொருட்கள் வழங்கப்பட்டது.

*தோல்வியடைந்த பிறகும் இன்னுமொரு தடவை முயற்சிப்பதே வெற்றிக்கான நிச்சய வழி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**19.06.2021 சனி:**

கரைச்சி பிரதேச செயலக ஆளுகைக்கு உட்பட்ட செல்வாநகர் கிராமத்தில் வசித்துவரும் 106 குடும்பங்களுக்கு ரூபா 3000. 00 பெறுமதியான அத்தியாவசிய உணவுப் பொருட்கள் நேரில் சென்று வழங்கப்பட்டது.

**20.06.2021 ஞாயிறு:**

உடுவில் பிரதேச செயலக ஆளுகைக்குட்பட்ட புன்னாலைக்கட்டுவன் வடக்கு, குட்டியப்புலம் கிராமத்தில் வசித்துவரும் 48 குடும்பங்களுக்கு 3000.00 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டது.

**21.06.2021 திங்கள்:**

சங்கானை பிரதேச ஆளுகைக்கு உட்பட்ட பொன்னாலை கல்விளான், பொன்னாலை தெற்கு, பொன்னாலை மேற்கு பிரதேசங்களில் வசித்து வருகின்ற 100 குடும்பங்களுக்கு இடர் நிவாரணமாக உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

**23.06.2021 புதன்:**

01) கரவெட்டி பிரதேச செயலக நிர்வாகத்திற்கு உட்பட்ட கரவெட்டி மேற்கு - இராஜகிராமத்தில் வசித்துவரும் 55 குடும்பங்களுக்கு ரூபா 3000. 00 பெறுமதியான அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டது.

02) கிளிநொச்சி - மலையாளபுரம் தெற்கில் அமைந்துள்ள விசேட தேவைகளுக் குட்பட்ட குறிஞ்சி சிறுவர் இல்லத்திற்கு அத்தியாவசிய உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டது. (100Kg அரிசி, 50Kg மா, 50Kg சீனி, 25Kg பருப்பு, 01 டசின் பால்மா பைக்கற், நூடில்ஸ், பிஸ்கற்)

**26.06.2021 சனி:**

செங்கலச் செட்டிகுளம் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கப்பாச்சி, மெனிக்பாம், கணேசபுரம் ஆகிய கிராமங்களில் தெரிவுசெய்யப்பட்ட 120 குடும்பங்களுக்கு 3000. 00 ரூபா பெறுமதியான அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டது.

**27.06.2021 ஞாயிறு:**

வடமராட்சியிலுள்ள தவில் நாதஸ்வர 53 குடும்பங்களுக்கான உலர் உணவுப் பொருட்கள் ஆச்சிரமத்தில் வைத்து வழங்கப்பட்டது.

**28.06.2021 திங்கள்:**

வவுனியா மாவட்ட பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கற்பகபுரம் (பம்பைமடு) கிராமத்தில் வசிக்கும் 52 குடும்பங்களுக்கு 3500. 00 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் நேரில் சென்று வழங்கப்பட்டது.

**30.06.2021 புதன்:**

01) கரவெட்டி பிரதேசசபைக்கு உட்பட்ட உடுப்பிட்டி தெற்கு கிராம அலுவலர் பிரிவில் வசித்துவரும் 30 குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொருட்கள் வழங்கப்பட்டது.

*அளவில்லாத வேதனைகளை தாங்கிக்கொண்டு சாதனை படைக்கிறவன்தான் மேதை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02) வடமேல் மாகாணத்தின் புத்தளம் சேனைக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 70 குடும்பங்களுக்கான 3500. 00 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகளை, அதே இடத்தைச் சேர்ந்த திரு மகேந்திரன் என்பவர் ஆச்சிரமத்திற்கு நேரில் வருகைதந்து அப்பொருட்களைப் பெற்றுக்கொண்டார்.

03) வல்வெட்டித்துறை நகரசபை சுகாதாரப் பணியாளர்கள் 30 பேருக்கு 3000. 00 ரூபா பெறுமதியான அத்தியாவசிய உணவுப் பொருட்கள் ஆச்சிரமத்தில் வைத்து வழங்கப்பட்டது. (இவ் இடர்காலப் பணிகள் தொடருகிறது.)


## இடர்கால நற்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம்

| | | | |
|---|---|---|---|
| சிவலிங்கம் தினேஸ் தினேஸ் வெதுப்பகம் | | மானிப்பாய் | 10000. 00 |
| சரஸ்வதி பெரியதம்பி குருபரன் பெரியதம்பி மூலம் வீரகத்தி வள்ளிப்பிள்ளை நினைவாக | | நியூசிலாந்து | 100000. 00 |
| க.கு. கந்தையாபிள்ளை | | யாழ்ப்பாணம் (பொருட்கள் வகையில்) | 10000. 00 |
| நடராசா ஆகாஷ் | தம்பாலை | அச்சுவேலி | 20000. 00 |
| சந்திரலிங்கம் நினைவாக | | நோர்வே | 22456. 00 |
| தெல்லிப்பளை பெற்றோல் நிலையம் | | தெல்லிப்பளை | 5000. 00 |
| சு. ஸ்ரீஸ்கந்தராசா | | வல்வெட்டித்துறை | 20000. 00 |
| சாரங்கன் | கொழும்பு | 25Kg மா, 24Kg அரிசி, மரக்கறி வகை | |
| வேலும்மயிலும் தங்கவடிவேல் நினைவாக தங்கவடிவேல் சுகிர்தா | | தீருவில் வல்வெட்டித்துறை | 100000. 00 |
| சரவணபவானந்தன் மாணிக்கர் | | அவுஸ்திரேலியா | 50000. 00 |
| கேசவன் மூலம் ஞானபண்டிதர் | | தொண்டைமானாறு | 100000. 00 |
| கனகராசா இராசம்மா நினைவாக அரியரெட்ணம் | | தெய்வேந்திரன் மூலம் கனடா | 202300. 00 |
| ம. ஸ்ரீகாந்தன் | | அச்சுவேலி | 80000. 00 |
| ஸ்ரீகாந்தன் மூலம் புவியகரன் | | ஜேர்மனி (சிறுவர் காப்பகத்திற்காக) | 40000. 00 |
| ஸ்ரீ பாலமோகன் | | கோண்டாவில் | 5மூடை அரிசி |
| திருமதி த. பிரேமா | | கொழும்பு | 14000. 00 |
| அருட்செல்வம் (பபா சாமி) | | இணுவில் | 40000. 00 |
| இ. தயாபரன் | | கோண்டாவில் | 50000. 00 |
| நா. குகன்மூலம் நா. குகதாசன் | | லண்டன் | 15000. 00 |
| ராதாகிருஸ்ணன் குடும்பம் | | லண்டன் | 22000. 00 |
| ரவிச்சந்திரன் குடும்பம் | காட்டுவளவு | வல்வெட்டித்துறை | 20000. 00 |
| பா. செல்வக்குமார் | | பிரான்ஸ் | 50000. 00 |
| சிவகுரு நவரத்தினம் | | லண்டன் | 4மூடை அரிசி |
| கனகசபை கணேசன் (சிவகணேசன் புடவை மாளிகை) | | யாழ்ப்பாணம் | 25000. 00 |
| தர்மகுலேந்திரன் ஸ்ரீ சுசீலா நகை மாளிகை | | பருத்தித்துறை | 50000. 00 |
| நாகலிங்கம் சச்சிதானந்தம் | | லண்டன் | 1000 பவுண்ஸ் |
| அரவிந்தன் குடும்பம் | | கனடா | 54300. 00 |
| கா. தயாபரன் | | கொழும்பு (பொருட்கள் வகையில்) | 50000. 00 |

சுயமாக முடிவெடுக்கத் தெரியாதவன் பெரும்பாலும் அடிமையாகவே இருப்பான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


புத்தளம் சேனைக்குடியிருப்பு பகுதிக்கானது...


மந்திகை ஆதார வைத்தியசாலைக்கு தண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரம் வழங்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்டிலிப்பாய் பிரதேசம்





உடுவில் பிரதேசம் - புன்னாலைக்கட்டுவன் வடக்கு, குட்டியப்புலம் பகுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெங்கலச் செட்டிகுளம் பிரதேச செயலர் பிரிவு.



வவுனியா மாவட்ட பிரதேச செயலர் பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மானிப்பாய் வலிகாமம் பிரதேச சபை சுகாதாரத் தொழிலாளர்

கரைச்சி பிரதேச செயலகம் - செல்வா நகர் கிராமம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முல்லைத்தீவு பிரதேசம்.



திருநெல்வேலி மேற்கு கிராம அலுவலர் பிரிவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநெல்வேலி பாற்பண்ணை கிராமம்.



ஏழாலை, குப்பிளான், மயிலங்காடு, புன்னாலைக்கட்டுவன் பகுதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனவிலே பாடல் எழுதும்படி சொல்ல காலையில் விழித்து எழுந்து எழுதிய பாடல்

வெள்ளை உள்ளமொடு பெருந்தவிப்புச் சேர
இரண்டும் கொண்டன்று அருள்சேர வாழ்ந்த
கதிர் காமர்தனை ஆண்ட செல்வத் திருக்குமரா
உன்தன் திருவடியில் நாயேன் என்றும் சரண்.

வலிந்து ஆட்கொண்டு பூசைமுறை காட்டி
கதிர்காமர் செய்பூசைகண்டு மனங்குளிர்ந்து
சந்நிதியைச் சார்ந்து அன்றுமுதல் இன்றுவரை
அரசாளும் திருக்குமரா திருவடிகள் என்றும் சரண்.

பக்தி சுத்தமுடன் பாடிப் பணிந்தேத்தி
மனமுருகி கையெடுப்போர் வாழ்வினிலே
திண்ணம் கந்தன் கருணையினால் பதினாறும் சேர
மங்களமாய் வாழ்வர் இதுவேலவனின் ஆசி அறி.

சந்நிதிப் பதியினிலே சண்முக அர்ச்சனை
வேறெங்கும் இல்லாத தனிச் சிறப்பாய் நடப்பதற்கு
பூசைப் பெருவேளை குருமார்கள் அர்ப்பணிப்பாய்
பெரும் பக்திகொண்டு செய்யும் பணியதனால் அறி.

வேத விதிமுறைகள் ஒன்றும் இல்லாமல்
பக்தி யெனும் பெருந்தேன் ஒவ்வொரு செயலிலும்
தப்பாமற் கலந்து கவிப்போடு பணியாற்ற
எல்லாமே தெய்வீகம் என்றும் ஆனந்தமாம் என்றறி.

பக்தர்களும் சித்தர்களும் அன்றுமுதல் இன்றுவரை
சந்நிதியைச் சார்ந்து வாழ்வதினால் என்றும்
சந்நிதியில் தினமும் அருட்சிறப்பும் அருள் வலுவும்
நிறைவாக திண்ணம் வழிபடுவோர் துயர்தீரும்அன்றி.

பிணிதீர்க்கும் விபூதிப் பூச்சு மருந்தாக
தித்திக்கும் உள்மருந்தாய் பஞ்ச அமிர்தம்
சிறப்பாக வேல் தனக்கு செய்திட்ட அபிஷேகத் தீர்த்தம்
சிறப்பான குடிநீர் மருந் தென்றறி.

யாவற்றிற்கும் மேலாக பத்திய முறையினிலே
பிணிதீர்க்கும் பத்திய உணவாக பக்குவமாய்
மதியவேளை மடங்களிலே பகிர்ந்தளிக்கும் அன்னம்
அடியவரின் பிணிதீர்க்கும் சஞ்சீவி மருந்தென்றறி.

பூர்வத்துப் புண்ணியத்தால் பூவரசின் நிழலிலே
பெருந்தவிப்புக் கொண்டு அடியவர்கள் பாடிப் பணிந்தேத்த
காண்பவர்கள் மனமுருக்கும் கேட்பவர்கள் மனம் குளிரும்
இவ்வன்பு வழிபாடு முருகனுக்கு கோடி அர்ச்சனை என்றறி.

சந்நிதியின் சுந்தரனேசாமி சரவணனே
மனமார மனமுருகி வேண்டுகின்றேன்
என்தன் மனங்குளிர எல்லாமே சிறப்பாக நிறைவாக
உன்திருவடியில் நிலையான புகலிடம் தந்து அருள்.

— வ. சிவநேசன் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவு இல: QD/146/NEWS/2021

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org